E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 செப்டெம்பர் 17 சனிக்கிழமை

தினகரன்

THINAKARAN

1932 - 2022


வரு. 90 இல. 220

Saturday 17, September, 2022

14 பக்கங்கள்

40/-

## அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் 116 ஆவது பிறந்த தினம் இன்று அனுஷ்டிப்பு



இலங்கையின் முதல் நிதி அமைச்சரும் முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுமான ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் 116ஆவது பிறந்தநாள் (17) இன்றாகும்.

06

# சர்வதேச வர்த்தகத்தை கையாளும் விசேட அலுவலகம் நிறுவப்படும்

## இலங்கை - இந்திய சமூக ஒன்று கூடல் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு



### இலங்கை – இந்தியா ஒன்றிணைந்து செயற்பட மேலும் பல வாய்ப்புகள்

இந்தியாவுடன் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தங்களுக்கான பணிகளை துரிதப்படுத்தவும் பணிப்புரை



சர்வதேச வர்த்தகத்தை கையாளும் சர்வதேச வர்த்தக அலுவலகத்தை இலங்கையில் நிறுவ இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். இந்தியாவுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தங்களுக்கான பணிகளைத் துரிதமாக முன்னெடுப்பதற்கு பணித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

### 2048 ஆண்டாகும் போது வறுமை இல்லா வளமான நாடாக இலங்கையை உருவாக்க வேண்டும்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு மேலும் பல வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 06

## புதிய விலையில் பழைய பால்மா; மட்டக்களப்பில் அதிகாரிகள் அதிரடி

### வர்த்தக நிலைய உரிமையாளர் மீது வழக்குத் தாக்கல்



பழைய விலையிலுள்ள பால் மா பக்கற்றுக்களை பதுக்கி வைத்திருந்த வர்த்தக நிலையம் மட்டக்களப்பு – கோறளைப் பற்று, மத்திய பிரதேச செயலாளர் பிரிவில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் முற்றுகையிடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைக்கு கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய இந்த சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சில்லறை வியாபார நிலையமொன்றில் 540.00 ரூபா, 790.00 ரூபா ஆகிய பழைய விலையில் பதுக்கி வைக்கப்பட்ட 400 கிராம் பால் மா புதிய விலையான 1,160 06

மூன்று மாதங்களுக்கு முன் கர்நாடகாவில் கைதான

## தமது உறவுகளை மீட்டுத் தருமாறு அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை



புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

வெளிநாடு செல்வதற்காக இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் பெங்களூரில் தங்கியிருந்த போது கைது செய்யப்பட்ட 38 பேரையும் விடுவிக்க உதவுமாறு அவர்களது உறவினர்கள் கடற்றொழில்அமைச்சர்டக்ளஸ்தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். 06

## அறிக்கைகள் விட்டு இலங்கையை மிரட்டுவதை உடன் நிறுத்த வேண்டும்

### சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடம் அரசு வலியுறுத்தல்



சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் அறிக்கைகளை வெளியிட்டு இலங்கையை மிரட்டுவதை உடன் நிறுத்த வேண்டுமென ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்பு சபை, ஃபோரம் ஏசியா, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணைக்குழு ஆகியவை ஜெனீவாவில் இலங்கை மீது வலுவான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளிடம் வலியுறுத்தியுள்ளன. 06



நுகர்வோருக்கான சிறப்பான, உயர்தரமான சேவையை நியாயமான விலையில் வழங்கும் நோக்கில் இலங்கையின் 445 ஆவது லங்கா சதோச நிலையம் கேகாலை, நெலும்தெனியவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் நேற்று (16) உத்தியோகப்பூர்வமாக திறந்து வைத்தபோது...

## பெற்றோல், மசகு எண்ணெய் இறக்கும் பணிகள் துரிதம்

### அமைச்சர் கஞ்சன டுவிட்டரில் பதிவு



நாட்டுக்கு வந்திருக்கும் பெற்றோல், மசகு எண்ணெய் கப்பல்களில் இருந்து 37,000 மெற்றிக் தொன் பெற்றோல், 1,00,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் நேற்று முதல் இறக்கப்படுவதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் பதிவொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

40,000 மெற்றிக் தொன் டீசல் இறக்கும் பணிகள் இன்று நிறைவடையுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை; மைத்திரிக்கு நீதிமன்றம் அழைப்பு

### ஒக்டோபர் 14 இல் நீதிமன்றில் ஆஜராக அழைப்பாணை



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட வழக்கில் சந்தேக நபராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பெயரிடப்பட்டுள்ளதையடுத்து, எதிர்வரும் ஒக்டோபர் 14ஆம் திகதி அவரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று (16) அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இத் தனிப்பட்ட முறைப்பாட்டின் சந்தேக நபராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை 06



### கைத்தொழில் அபிவிருத்திக்கு EU 23 மில் டொலர் நிதியுதவி

இலங்கை வதிவிடப்பிரதிநிதி தெரிவிப்பு

03



வார இறுதி நாட்களில் பயணிகள் அதிகம்;

### கொழும்பிலிருந்து பதுளைக்கு மேலுமொரு ரயில் சேவை

03

## சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற 26 பேர் கைது

### வெற்றிலைக்கேணி கடலில் கடற்படையினர் அதிரடி



சட்டவிரோதமாக வெளிநாடொன்றுக்கு செல்ல முற்பட்ட 26 பேர் வெற்றிலைக்கேணி, வடக்கு கடல் பகுதியில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (15) மற்றும் நேற்று (16) ஆம் திகதி காலை இப்பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கையின் போதே 06

கணனி அமைப்பில் திடீர் கோளாறு;

## வெளிநாட்டமைச்சு கொன்சியூலர் பிரிவு செயற்பாடுகள் நிறுத்தம்

### தற்காலிகமாக சான்றிதழ்கள் வழங்க முடியாத நிலை



கணனி அமைப்பில் ஏற்பட்டுள்ள செயலிழப்பு காரணமாக, கொழும்பு 01 இல் அமைந்துள்ள வெளிநாட்டமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவு மற்றும் அதன் யாழ்ப்பாணம், திருகோணமலை, மாத்தறை, கண்டி, குருநாகல் ஆகிய பிராந்திய அலுவலகங்களின் சரிபார்ப்பு மற்றும் சான்றளிப்புப் பிரிவுகளின் சேவைகள் மறுஅறிவித்தல் வரை 06

வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள்;

## ஐ.நா. இறுதி அறிக்கையில் உள்வாங்குமாறு மகஜர்

### யாழ். ஐ.நா அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது




வட மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் மற்றும் அபிலாஷைகள் தொடர்பில் ஜெனீவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் 51 ஆவது கூட்டத்தொடரில், அதன் இறுதித் தீர்மான அறிக்கையில் கவனம் செலுத்துமாறு யாழ்ப்பாணத்திலுள்ள ஐ.நா.அலுவலகத்தில் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் செயலாளருக்கு பெயரிடப்பட்டு, ஐ.நா. யாழ். 06

## தாமரை கோபுரம் திறக்கப்பட்ட முதல் நாளில் ரூ.15 இலட்சம்

### வருமானமாக கிடைத்து சாதனை



கொழும்பு தாமரைக் கோபுரம் பொதுமக்கள் பார்வைக்கு திறந்துவிடப்பட்ட முதல் நாளில் அனுமதிச் சீட்டு விற்பனை மூலம் 15 இலட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.


350 மீற்றர் உயரமான கொழும்பு தாமரை கோபுரம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (15) பொதுமக்கள் பார்வைக்கு திறந்துவிடப்பட்டது.

நேற்று முன்தினம், 06

19 அரச விடுமுறை அறிவிப்பு எனினும்

## பாஸ்போட் அலுவலகம் திங்களன்று வழமை போல்

### முன்பதிவு செய்தோருக்கு மட்டும் சேவை



விசேட அரசாங்க விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ள எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை பாஸ்போட் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் திறக்கப்படுமென குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. 06

வெளிநாட்டில் மட்டுமல்ல உள்நாட்டிலும் தொழில்;

## அரச ஊழியர்களது விடுமுறை குறித்து அமைச்சு விளக்கம்


### சம்பளமில்லா விடுமுறைக்கு அனுமதிக்க ஏற்பாடு



அரச ஊழியர்கள் வெளிநாட்டில் வேலை செய்வதற்கு மட்டுமன்றி உள்நாட்டில் வேலை செய்வதற்கும் சம்பளமில்லாத விடுமுறையைப் பெற முடியுமென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச உத்தியோகத்தர்களின் பணிமூப்பு மற்றும் ஓய்வூதியம் பாதிக்கப்படாத 06

## திறனாய்வாளர் K.S.சிவகுமாரன் காலமானார்



இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும், விமர்சகரும், வானொலி அறிவிப்பாளருமான கே.எஸ்.சிவகுமாரன் நேற்று முன்தினம் (15ம் திகதி)ஹெவ்லொக் டவுன் இல்லத்தில் காலமானார். அவருக்கு வயது 06

# சர்வதேச செய்திகள்

# வட்டி வீத அதிகரிப்பினால் 2023இல் பொருளாதார மந்தநிலைக்கு வாய்ப்பு

## உலக வங்கி எச்சரிக்கை



உலகெங்கும் உள்ள மத்திய வங்கிகளால் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டிருப்பது 2023இல் உலகில் பொருளாதார மந்தநிலை ஒன்றைத் தூண்டும் என்று உலக வங்கி எச்சரித்துள்ளது.

அதிகரித்து வரும் விலையேற்றத்தை சமாளிக்க கடந்த பத்து தசாப்தங்களில் காணாத வகையில் ஒத்திசைவு கொண்டதாக மத்திய வங்கிகள் வட்டி வீதத்தை அதிகரித்திருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது.

விலை அதிகரிப்பு வேகத்தை குறைக்கும் முயற்சியாக கடன் பெறுவதை கடினம் ஆக்குவதாகவே இந்த அதிகரிப்பு உள்ளது. எனினும் இதனால் கடன் பெறுவது அதிக செலவு மிக்கதாகி பொருளாதார வளர்ச்சியை மந்தமடையச் செய்கிறது.

அமெரிக்க மத்திய ரிசேவ் வங்கி மற்றும் இங்கிலாந்து வங்கி ஆகியன அடுத்த வாரம் தமது முக்கிய வட்டி வீதத்தை அதிகரிக்கும் எதிர்பார்ப்புடன் நிதிக் கொள்கை சந்திப்புகளை நடத்தவிருக்கும் நிலையிலேயே உலக வங்கியின் இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

1970 தொடக்கம் பொருளாதார மந்தநிலை மீட்சிக்குப் பின்னரான உலகப் பொருளாதாரம் செங்குத்தாக மந்தநிலையை நோக்கிச் செல்வதாக உலக வங்கி கடந்த வியாழக்கிழமை கூறி இருந்தது.

உலகின் மூன்று மிகப்பெரிய பொருளதாரமான அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய பிராந்திய பொருளாதாரம் வேகமாக மெதுவடைந்து வருவது ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது என்று உலக வங்கியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

'இந்த சூழ்நிலையில், அடுத்த ஆண்டில் உலகப் பொருளாதாரத்தில் ஒரு மிதமான தாக்கம் ஏற்பட்டாலும் அது மந்தநிலைக்கு வழிவகுக்கும்' என்று அதில் கூறப்பட்டுள்ளது.

மத்திய வங்கிகள் தமது செயற்பாடுகளை ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளும்படியும் தேவையான கட்டுப்பாடுகளின் வேகத்தை குறைப்பதற்கு கொள்கை முடிவுகளை தெளிவாக வெளிப்படுத்தும்படியும் உலக வங்கி அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் பணவீக்கத்தால் பொருட்கள் விலை கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

கொரோனா பெருந்தொற்று கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னரான கேள்வி அதிகரிப்பு மற்றும் உக்ரைன் போரினால் ஏற்பட்ட எரிபொருள், வலுசக்தி மற்றும் உணவு விலைகளின் அதிகரிப்பு இந்த நிலைக்கு காரணமாகியுள்ளது.

இதனை சமாளிக்கும் வகையில் மத்திய வங்கிகளின் கொள்கை வகுப்பாளர்கள் குடும்பங்கள் மற்றும் வர்த்தகங்களில் இருந்து கேள்வியை குறைப்பதற்கு வட்டி வீதத்தை அதிகரிக்க தீர்மானித்தனர்.

எவ்வாறாயினும் இவ்வாறு அதிக அளவில் வட்டி வீதம் உயர்த்தப்படுவது பொருளாதார மந்தநிலை ஏற்படுவதற்கான அச்சுறுத்தலை உருவாக்குவதோடு பொருளாதாரம் மெதுவடைவதற்கும் காரணமாகிறது.

## உக்ரைனுக்கு இந்தியா மனிதாபிமான உதவிகள்



உக்ரைனுக்கான இந்தியத் தூதுவர் ஹார்ஷ் குமார் ஜயின் உக்ரைன் மக்களுக்கான 7,725 கிலோ மனிதாபிமான உதவிகளை அந்நாட்டு சுகாதார பிரதி அமைச்சர் ஒலெக்சி யரமென் கோவிடம் கையளித்துள்ளார்.

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருந்து உபகரணங்கள் இந்த உதவியில் அடங்குகிறது. இந்தியா கடந்த மார்ச் மாதத்திலேயே உக்ரைனுக்கு தனது முதல் மனிதாபிமான உதவிகளை வழங்கி இருந்தது. உக்ரைன் போர் ஆரம்பித்தது தொடக்கம் உடன் விரோத நடவடிக்கைகள் நிறுத்தும்படியும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரும்படியும் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

## இந்தியா–சவூதி உறவுகளின் முக்கியம் பற்றி வலியுறுத்தல்



சவூதி அரேபியா சென்ற இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், இந்தியா மற்றும் சவூதி அரேபியாவுக்கு இடையிலான மூலோபாய பொருளாதார உறவுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உள்ளார்.

ரியாதில் உள்ள இளவரசர் சவுத் அல் பைசல் நிறுவன இராஜதந்திர கற்கையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராஜதந்திரிகளிடம் உரையாற்றிய அவர், உலகம் சுருங்கி இருக்கும் நேரத்தில் இந்தியா–சவூதி மூலோபாய உறவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

'எமது கூட்டிணைவு பகிர்ந்த வளர்ச்சி, சுபீட்சம், ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியை உறுதி செய்கிறது' என்று அவர் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

## கடற்படைக் கப்பலுக்கு சொலமன் தீவுகள் தடை



ஹொனியாரா துறைமுகத்தில் வெளிநாட்டு கடற்படைக் கப்பல்கள் நிறுத்தப்படுவதற்கு சொலமன் தீவுகள் திடீரென தடை விதித்துள்ளது.

பிரிட்டன் ரோந்து கப்பலான எச்.எம்.எஸ். ஸ்பே மற்றும் அமெரிக்காவின் கடலோர கடற்படை கப்பலான கட்டர் ஒலிவர் ஹென்றி என்ற இரண்டு சர்வதேச யுத்தக் கப்பல்களும் தரித்து நிற்பதற்கான அனுமதியை மறுத்துள்ள சொலமன் தீவுகள், தமது பிராந்திய உரிமைகளை நடைமுறைப்படுத்தும் வகையில் இத்தடையை அறிவித்துள்ளது.

# உக்ரைனுக்கு நீண்ட தூர ஏவுகணை: அமெரிக்காவுக்கு ரஷ்யா எச்சரிக்கை



புதிய இராணுவ உதவிகளை வழங்க அமெரிக்கா கடந்த மாதம் உறுதி அளித்தது. இதன்மூலம் அமெரிக்கா அந்நாட்டுக்கு வழங்கும் பாதுகாப்பு உதவிகள் 10.6 பில்லியன் டொலர்களாக அதிகரித்தது.

உக்ரைனுக்கு நீண்ட தூர ஏவுகணைகளை வழங்க அமெரிக்கா முடிவு செய்தால் அது 'சிவப்புக் கோட்டை' தாண்டுவதாக இருக்கும் என்றும் (அமெரிக்காவை) உக்ரைன் மோதலில் ஈடுபடும் தரப்பாக கருத வேண்டி இருக்கும் என்றும் ரஷ்யா எச்சரித்துள்ளது.

'ரஷ்யா தனது ஆட்புலங்களை பாதுகாக்கும் உரிமையை பெற்றுள்ளது' என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மரியா சகரோவா கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா உக்ரைனுக்கு மேம்பட்ட வழிகாட்டல் ரொக்கெட் அமைப்பின் ரொக்கெட்டுகளை வெளிப்படையாக வழங்குகிறது. இது 80 கிலோ மீற்றருக்கு அப்பால் தாக்கக்கூடியதாக உள்ளது. எனினும் அமெரிக்க ரொக்கெட்டுகளால் ரஷ்யாவுக்குள் தாக்குதல் நடத்துவதில்லை என்று உக்ரைன் உறுதி அளித்திருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் இந்த ஏவு முறை மூலம் 300 கிலோமீற்றர் தூரம் வரை ஏவுகணைகளை வீச முடியும். உக்ரைனிடம் அவ்வாறான ஏவுகணை இருப்பதை அந்நாட்டு அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

எனினும் உக்ரைன் கட்டுப்பாட்டு நிலப்பகுதியில் இருந்து 200 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் ரஷ்ய விமானத் தளம் மீது கடந்த ஓகஸ்ட் 9ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் பற்றிய விளக்கம் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

எனினும் கடந்த பெப்ரவரியில் உக்ரைன் மீது படையெடுத்த ரஷ்ய துருப்புகளை எதிர்ப்பதற்கு பெரும் அளவு ஆயுத உதவியை அமெரிக்கா மற்றும் ஏனைய மேற்கத்திய நாடுகளிடம் உக்ரைன் கோரி வருகிறது.

உக்ரைனுக்கு 3 பில்லியன் டொலர்

## அமெரிக்க துணை ஜனாதிபதி வீட்டுக்குச் சென்ற குடியேறிகள்



குடியேறிகள் தொடர்பில் அரசியல் மோதல் அதிகரித்து வரும் நிலையில் குடியேற்றவாசிகளை ஏற்றிய இரு பஸ்கள் டெக்சாஸில் இருந்து வொஷிங்டன் டிசியில் இருக்கும் அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹரிஸின் வீட்டுக்கு அருகில் அனுப்பப்பட்டுள்ளன.

குடியேற்றக் கொள்கைகளை இறுக்குமாறு வலியுறுத்தி இருக்கும் டெக்சாஸ் மாநிலத்தின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஆளுநர், இந்த நடவடிக்கையை திட்டமிட்டே மேற்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

புளொரிடா குடியேறிகளை மஸ்ஸசுவெட்ஸுக்கு அனுப்பிய அடுத்த நாளே இது இடம்பெற்றுள்ளது.

இந்த இரு மாநிலங்களினதும் நடவடிக்கை ஜனநாயகக் கட்சி ஆட்சியில் இருக்கும் பகுதிகளுக்கு குடியரசு மாநிலங்கள் குடியேறிகளை அனுப்பும் நடவடிக்கையாக உள்ளது.

ஆளும் ஜனநாயகக் கட்சி குடியேற்ற சட்டங்களை முழுமையாக செயல்படுத்த தவறி இருப்பதாக குடியரசு கட்சியினர் குறிப்பிடுகின்றனர்.

இதில் துணை ஜனாதிபதியின் வீட்டுக்கு அருகில் அழைத்து வரப்பட்ட 75 தொடக்கம் 100 பேர் அளவான குடியேறிகள் அங்கே தரித்திருந்த போது அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று அவர்களை தேவாலயம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றுள்ளது.

## ஆர்மேனிய–அசர்பைஜான் மோதலில் 176 பேர் பலி



ஆர்மேனியாவுடனான அண்மைய எல்லை மோதலில் தமது 71 துருப்பினர் கொல்லப்பட்டதாக அசர்பைஜான் தெரிவித்துள்ளது. இது சர்ச்சைக்குரிய நகொர்னோ – கரபக் பிராந்தியம் தொடர்பில் 2020இல் இரு நாடுகளுக்கு இடையே வெடித்த போருக்குப் பின்னர் இடம்பெற்ற மிக மோசமான மோதலாக மாறியுள்ளது.

இரு தரப்பும் பரஸ்பரம் குற்றம்சாட்டும் இந்த மோதலில் தமது 105 படை வீரர்கள் கொல்லப்பட்டதாக ஆர்மேனிய கூறியது.

இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்திய போர் நிறுத்தம் ஒன்று கடந்த புதன்கிழமை அமுலுக்கு வந்ததாக மூத்த ஆர்மேனிய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## உக்ரைன் போருக்குப் பின் புட்டின் – ஜின்பிங் சந்திப்பு



சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கிற்கு உக்ரைன் விவகாரம் குறித்து அக்கறை இருப்பதைப் புரிந்துகொள்ள முடிந்ததாய், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கூறியுள்ளார். இருப்பினும், ரஷ்யா–உக்ரைன் போரில் சீனா நடுநிலையில் இருப்பதை அவர் பாராட்டினார்.

போர் ஆரம்பித்த பின் இரு தலைவர்களும் முதல்முறையாக ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்துள்ளனர். உஸ்பகிஸ்தானில் நடைபெறும் ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டின்போதே கடந்த வியாழக்கிழமை (15) இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது இருவரும் நீண்ட நாள் நண்பர்கள் என்று கூறி அன்பைப் பரிமாறிக்கொண்டனர். 'உக்ரைன் நெருக்கடியைப் பொறுத்தவரை நமது சீன நண்பர்களின் நியாயமான நிலைப்பாட்டிற்கு நாங்கள் மிகுந்த மதிப்பு வழங்குகிறோம்' என்று புட்டின் ஷிஜின்பிங்கிடம் கூறினார்.

ரஷ்ய–உக்ரைன் போரில் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அது உலகளவில் எரிசக்தி, உணவு விநியோகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், ரஷ்யா உக்ரைன் நிலப்பகுதிகளை கைப்பற்றும் முயற்சியில் தொடர்ந்து தீவிரம் காட்டிவருகிறது.

# வங்கியில் துப்பாக்கி முனையில் சொந்தப் பணத்தை மீட்ட ஆடவர்




லெபனானில் நேற்று வெள்ளிக்கிழமையும் ஓர் ஆடவர் தமது வங்கியில் இருக்கும் பணத்தை துப்பாக்கி முனையில் மீளப்பெற்றுள்ளார். பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் லெபனானில் இந்த வாரத்தில் நிகழும் இவ்வாறான மூன்றாவது சம்பவம் இதுவாகும்.

தெற்கு நகரான காசியேவில் இருக்கும் பைப்ளொக் வங்கி திறக்கப்பட்டபோது, தனது 50 வயதுகளில் இருக்கும் அந்த வைப்பாளர் தமது மூத்த மகனுடன் வங்கிக்குள் நுழைந்துள்ளார்.

துப்பாக்கி முனையில் வங்கி ஊழியர்களை மிரட்டிய அவர், தமது வைப்பில் இருக்கும் பணத்தை கேட்டதாக லெபனான் தொலைக்காட்சி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வங்கிக்கு வெளியில் அவருக்கு ஆதரவாக கூட்டம் கூடிய நிலையில் அவர் தனது வைப்பில் இருக்கும் சுமார் 19,000 டொலர்களை எடுத்துச் சென்றுள்ளார். கடந்த புதன்கிழமை பெண் ஒருவர் மற்றும் ஆடவர் ஒருவர் துப்பாக்கியை காட்டி தமது சேமிப்புப் பணத்தை பெற்றிருந்தனர்.

லெபனானில் சேமிப்புப் பணத்தை மீளப்பெறுவதில் கட்டுப்பாடுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 17 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**

15 முதல் 17 வரை

| | |
|---|---|
| சுபஹ் - | 04.45 |
| லுஹர் - | 06.01 |
| அஸர் - | 03.14 |
| மஃரிப் - | 06.11 |
| இஷா - | 07.21 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆவணி 32

ராகுகாலம் : பகல் : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: அமிர்தசித்த யோகம்

திதி: சப்தமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | - சுகம் |
| ரிஷபம் | - பாராட்டு |
| மிதுனம் | - தனம் |
| கடகம் | - போட்டி |
| சிம்மம் | - கோபம் |
| கன்னி | - முயற்சி |
| துலாம் | - நன்மை |
| விருச்சிகம் | - நிறைவு |
| தனுசு | - வெற்றி |
| மகரம் | - பொறுமை |
| கும்பம் | - மறதி |
| மீனம் | - செலவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

# வெளிநாட்டு தூதுவர்கள் இருவர் ஜனாதிபதியிடம் நற்சான்றிதழ்கள் கையளிப்பு




புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான இரண்டு வெளிநாட்டு தூதுவர்கள் நேற்று (16) ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ்களை கையளித்தனர். இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவராக பொனி ஓர்பாச் (Bonnie Horbach) மற்றும் இலங்கைக்கான சவூதி தூதுவராக காலித்ஹமூட் நஸார் அல்தஸான் அல்கஹ்தானி (Kahalid Hamoud Nasser Aldasan Alkahtani) ஆகியோர் புதிதாக அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கடுகதி ரயிலில் மோதிய கார்; ஸ்தலத்தில் ஒருவர் பலி

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த நகரங்களுக்கிடையேயான கடுகதி ரயிலுடன் கம்பஹா மாவட்டத்தின் யாகொட ரயில் நிலையத்துக்கருகில் காரொன்று மோதி நேற்று முன்தினம் காலை விபத்துக்குள்ளான சம்பவத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.




ரயிலில் மோதுண்ட கார், ரயில் தரிப்பு மேடை வரை இழுத்து வரப்பட்டதுடன் கார் பலத்த சேதமடைந்துள்ளது.

ரயில்வே கடவை கதவுகள் மூடப்பட்டிருந்தபோதும் கடவையைக் கடந்து கார் ரயில் பாதைக்குள் நுழைந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கணேமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காரின் சாரதியான கம்பஹா, மேல் யாகொட பிரதேசத்தை சேர்ந்த 41 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.



இலங்கைக்கான புதிய அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட போல் ஸ்டீபன்ஸ் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்னவை மரியாதை நிமித்தம் (16) சந்தித்தார். கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுரவிலுள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

# கைதொழில் அபிவிருத்திக்கு EU 23 மில் டொலர் நிதியுதவி

## இலங்கை வதிவிடப்பிரதிநிதி தெரிவிப்பு

நாட்டின் நிலையான கைத்தொழில் அபிவிருத்திக்காக ஐரோப்பிய ஒன்றியம் சுமார் 23 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு நிதியுதவியாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



இதன்படி 22.83 மில்லியன் அமெரிக்க டொலர்களும்

06

அனைத்து அரச பாடசாலைகளிலும்

# ஆரம்ப பிரிவு மாணவருக்கு மதிய உணவு வழங்க திட்டம்

அனைத்து அரசாங்கப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவிலுள்ள மாணவர்களுக்கு மதிய உணவு வழங்க விவசாய அமைச்சு திட்டமிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் வழங்கப்பட்ட 27 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த மதிய உணவில் பாடசாலை மாணவர்களின் ஊட்டச்சத்தை அதிகரிக்க போலிக் அமிலம், இரும்புச்சத்து மற்றும் விற்றமின்கள் அடங்கியதாக திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப் பொருட்களின் விலையேற்றம், உணவுப் பற்றாக்குறை என்பன பாடசாலை மாணவர்களின் போசாக்கு விடயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதால், ஆரம்பப் பிரிவுகளிலுள்ள பிள்ளைகளின் போசாக்கை உறுதிப்படுத்தும் வகையில் உணவு வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

# சிறுவர்களுக்கான பாராளுமன்ற ஒன்றியம் அடுத்த வாரம் கூடும்

இலங்கையிலுள்ள சிறுவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களைத் தொடர்புபடுத்தி சிறுவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உருவாக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கான பாராளுமன்ற ஒன்றியம் எதிர்வரும் 21ஆம் திகதி கூடவுள்ளது.

சிறுவர்களின் நல்வாழ்வுக்கான கொள்கைகளை மாற்றம் செய்வது அல்லது புதிய கொள்கைகளை அறிமுகப்படுத்துவது மற்றும் சகல சிறுவர்களினதும் நல்வாழ்வு குறித்த கொள்கைகளை தொடர்ந்தும் மறுஆய்வு செய்வது, சிறுவர்களுக்காகப் பணியாற்றும் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் இணைந்து செயற்படுவது மற்றும் சிறுவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து அரசாங்க நிறுவனங்கள் பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கச் செய்வது என்பன இந்த ஒன்றியத்தின் பிரதான நோக்கங்களாகும்.

இதனைவிடவும், சிறுவர் உரிமைகள் குறித்து பிரசாரங்களை முன்னெடுப்பதற்கும், சட்டத்தை நடைமுறைப்படுத்தவும் அவற்றைக் கண்காணிப்பதற்கும் சிறுவர் தொடர்பில் காணப்படும் சட்டத்தை மறுசீரமைப்பது மற்றும் திருத்தம் செய்வது, தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காகச் செயற்படுவது, சிறுவர்களின் உரிமைகளைப் பலப்படுத்தி அதன் ஊடாக அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், அவை குறித்துக் காணப்படும் சவால்களுக்கு முகங்கொடுக்க அரசாங்க, சிவில் சமூக அமைப்புக்களின்

06

கைத்தொழில் பிணக்குகள்

# திருத்தச் சட்டமூலங்களுக்கு சபாநாயகர் கையொப்பமிட்டார்



கைத்தொழில் பிணக்குகள் (திருத்தச்) சட்டமூலங்கள் இரண்டு (130, 132) மற்றும் வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் ஆகிய மூன்று

06

இலத்திரனியல், மின்சார தொழிற்துறை மேம்படுத்தும் திட்டத்துக்கு

# பங்களாதேஷுடன் இலங்கை கைகோர்ப்பு

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் பங்களாதேஷ் வர்த்தக, கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து, பங்களாதேஷிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் கடந்த 12ஆம் திகதி இலங்கை இலத்திரனியல் மற்றும் மின்சார ஏற்றுமதியாளர்களுக்கான மெய்நிகர் வர்த்தக அமர்வை ஏற்பாடு செய்திருந்தது.

பங்களாதேஷைச் சேர்ந்த மூன்று முன்னணி இலத்திரனியல் மற்றும் மின்சார நிறுவனங்கள் வர்த்தக அமர்வில் இணைந்ததுடன், பங்களாதேஷ் சந்தையை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்கும் 10 இலங்கை நிறுவனங்களுடன் பயனுள்ள சந்திப்புக்களை நடத்தியது.

பங்களாதேஷ் இலத்திரனியல் வர்த்தகர்கள் சங்கம் மற்றும் இலங்கை நிறுவனங்களுக்கிடையில் தனியான சந்திப்பொன்றும் நடைபெற்றது. இச்சந்திப்பில், இலங்கையின் இலத்திரனியல் மற்றும் மின்சார தொழிற்துறையை மேம்படுத்துவதற்கு இலங்கையுடன் இணைந்து செயற்பட சங்கத்தின் விருப்பத்தை செயலாளர் நாயகம் கௌரங்க டே தெரிவித்தார். ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆர்வமுள்ள பகுதிகளைக் குறிப்பிட்டு தமது முன்மொழிவுகளை சங்கத்துக்கு சமர்ப்பிக்குமாறு செயலாளர் நாயகம் இலங்கை நிறுவனங்களைக் கேட்டுக் கொண்டார்.

இலங்கை மற்றும் பங்களாதேஷுக்கிடையிலான மின்சாரத் துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் பன்முகப்படுத்துவதற்கும் இலங்கை உயர்ஸ்தானிகராலயமும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையும் இணைந்து செயற்படுகின்றன.

# வடக்கு மாகாணத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை; பொதுவான தீர்மானம் எட்டப்படும்



மாங்குளம் குறூப் நிருபர்

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சின் உயரதிகாரிகளுடன் கலந்தாலோசித்து பொதுவானதொரு முடிவு எட்டப்படுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் தாம் செல்கின்ற ஒவ்வொரு இடங்களிலும் வாழும் கடற்றொழிலாளர்கள் வெவ்வேறான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். எனவேதான் பொதுவானதொரு முடிவு எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜயம் செய்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாவட்ட கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகளை நேற்றுக் (16) காலை மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் சந்தித்தார்.

சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம் மற்றும் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாகவும் தெரியப்படுத்தியிருந்தனர். அதற்கு பதிலளித்தபோதே

06

வார இறுதி நாட்களில் பயணிகள் அதிகம்

# கொழும்பிலிருந்து பதுளைக்கு மேலுமொரு ரயில் சேவை

வார இறுதி நாட்களில் பயணிகள் அதிகம் என்பதால் கொழும்பு கோட்டை மற்றும் பதுளைக்கிடையில் நேற்று முதல் மேலுமொரு ரயில் சேவையை ரயில்வே திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய நேற்று 16, இன்று 17, நாளை 18 ஆகிய திகதிகளில் மாத்திரம் இந்த சேவையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

வார இறுதி நாட்களில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையி



னால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, மாலை 7.20 இற்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் ரயில்,

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 244.36 | 256.01 |
| கனடியன் டொலர் | 273.95 | 286.57 |
| யூரோ | 360.97 | 376.37 |
| ஜப்பான் யென் | 2.5012 | 2.6050 |
| சிங்கப்பூர் டொலர் | 255.02 | 265.99 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 417.17 | 433.79 |
| சுவிஸ் பிராங்க் | 372.95 | 390.96 |
| அமெரிக்க டொலர் | 358.78 | 369.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 960.92 | கட்டார் ரியால் | 98.89 |
| குவைத் டினார் | 1,175.32 | சவூதி ரியால் | 96.40 |
| ஓமான் ரியால் | 940.98 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 96.63 |

தினகரன்
THINAKARAN தினகரன்
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 32ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 20



**குறள் தரும் சிந்தனை**

ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு

பலதுறை நூல்பொருள்களைக் கேட்டு உணரும் திறம் மிக்கவர் முன்னே ஆற்றல்மிக்க பேச்சாளன் சொல்லால் சிறுமைப்படுவது மேலான நெறியிலிருந்து நிலைதவறி விழுவதைப் போல ஆகும்.

# பாடசாலைகளில் பகல்போசனமாக சத்துணவு வழங்கப்பட வேண்டும்!

*இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்தே உணவு விநியோகத்தில் இந்நாடு பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்தது. பெருந்தோட்ட பணப்பயிர் வளர்ப்பிலும் ஏற்றுமதியிலும் அக்கறை கொண்டிருந்த ஆங்கிலேயர், ஏற்கனவே இலங்கையில் காணப்பட்ட நெல் உற்பத்திக்கான விவசாயக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதில் கரிசனை காட்டவில்லை.*

*இலங்கை மக்களுக்குத் தேவை அரிசி என்றால் அதை இறக்குமதி செய்து விநியோகித்தால் போதுமானது என்பது அவர்களது கொள்கையாக இருந்தது. இதனால் உள்ளூர் விவசாய கட்டமைப்பு சிதைந்து போனது. வெள்ளையர்கள் புதிதாக கோதுமை மாவையும் இலங்கையருக்கு பழக்கி இருந்ததால் இந்நாடு சுதந்திரம் பெற்றபோது அரிசியும், மாவும் இன்றியமையாத இருபெரும் உணவுப் பொருட்களாக மாறியிருந்தன.*

*எனவே சுதந்திரத்தின் பின்னர் அதிக விலை கொடுத்தேனும் அரிசியையும் மாவையும் பதவிக்கு வந்த அரசுகள் இறக்குமதி செய்து குறைந்த விலையில் அவற்றை விநியோகிக்க வேண்டியதாயிற்று. இக்கடமையை செவ்வனே நிறைவேற்றாத அரசுகளை பதவியில் நீடிக்க வாக்காளர்கள் விடவில்லை. ஜே.ஆர்.ஜயவர்தன 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்து உணவுப் பங்கீட்டு முறையை இரத்துச் செய்யும் வரை 'அரிசி அரசியல்' இலங்கை தேசிய அரசியலில் முக்கிய இடத்தை வகித்தது.*

*அரிசியையும் ஏனைய உபஉணவுப் பொருட்களையும் சுதந்திரத்தின் பின்னர் படிப்படியாக அதிக அளவில் பயிரிட வேண்டியிருந்தது. எனவே, சுதந்திரம் பெற்ற பின்னரும் உணவுப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கும் ஒரு சூழல் இலங்கையில் காணப்படவில்லை என்பதே உண்மை. உணவுப் பொருட்கள் ஒன்றில் தாராளமாகக் கிடைப்பதில்லை, அல்லது கட்டுப்படியான விலைக்குக் கிடைப்பதில்லை என்பதால் இந்நாட்டில் தொடர்ச்சியாக அன்றாடம் மக்கள் சாப்பிடும் உணவுப் பொருட்களுக்கு பிரச்சினை இருந்து வந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. இதை இந்நாட்டில் போஷாக்கு குறைபாடும் தொடர்ச்சியாக இருந்து வந்திருக்கிறது என்றும் பொருள் கொள்ள முடியும்.*

*1977 இன் பின்னர் உணவுப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கத் தொடங்கின. பல்வேறு தொழில் வாய்ப்புகள் சுதந்திர பொருளாதாரக் கொள்கையின் கீழ் ஏற்படுத்தப்பட்டதால் அவற்றுக்கான விலைகளைக் கொடுத்து வாங்குவதற்கான வசதி பெரும்பாலான மக்களுக்கு கிடைத்ததாலும் போஷாக்குக் குறைபாடு நாட்டு மக்கள் மத்தியில் பெருமளவில் தவிர்க்கப்பட்டது. இதற்கான ஒரு உதாரணமாக 50, 60, 70 களில் பிறந்தவர்களின் உடல் தோற்றம், பருமன், ஆரோக்கியம் என்பனவற்றையும் அதற்கு பின்னர் பிறந்தவர்களின் தோற்றம், பருமன், ஆரோக்கியம் என்பனவற்றையும் ஒப்பிடுவதன் மூலம் போஷாக்கு குறைபாட்டு நிவர்த்தியை ஓரளவுக்கு அனுமானிக்கக் கூடியதாக இருக்கும். அதேசமயம் உணவுப் பழக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக அதிக உடற்பருமன் மற்றும் புதிய நோய்களின் அதிகரிப்பு என்பனவும் கவனத்துக் குரியதே.*

*நாட்டில் ஓரளவுக்கு அருகி வந்த போஷாக்குக் குறைபாடு சமீப காலமாக மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியிருப்பதும் அதுவும் பெருந்தோட்ட, மற்றும் கிராமப் புறங்களிலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மத்தியிலும் போஷாக்கின்மை அதிகரித்து வருவதாக புள்ளிவிவரங்கள் குறிப்பிடுவதை நாம் புறந்தள்ளிவிட முடியாது. போஷாக்கின்மை பெருமளவில் பாதிப்பது சிறுவர் சிறுமியரையே. வளரும் பருவத்தினரான சிறுவர் சிறுமியரை போஷாக்கின்மை பாதிக்கும் போது அவர்களது உடல் வளர்ச்சி, பாடங்களை கிரகிக்கும் ஆற்றல், நோய் எதிர்ப்பு என்பனவற்றில் பெரும் பாதிப்புகள் ஏற்படும். பாடசாலை இடைவிலகல் அதிகரிக்கும். மேலதிக வருவாய்க்காக தொழில்களில் அவர்கள் ஈடுபட வேண்டிய சூழல் ஏற்படும். போஷாக்கின்மை என்பது சங்கிலித் தொடர் பாதிப்புகளை சமூகத்தில் ஏற்படுத்தக் கூடியது.*

*போஷாக்;கின்மை சிறார் கல்வியை நேரடியாகப் பாதிக்கக் கூடியது. மாணவர் கல்வியில் ஏற்படும் பாதிப்பு நேரடியாகவே சமூக, பொருளாதார வளர்ச்சியை பாதிக்கக் கூடிய ஒன்று என்பதால் போஷாக்கின்மையை பாடசாலை மட்டத்தில் நிவர்த்தி செய்ய போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.*

*தமிழக பாடசாலைகளில் பகலுணவு திட்டத்தை காமராஜர் கொண்டு வந்தார். எம்.ஜி.ஆர். தனது காலத்தில் அதை விரிவுபடுத்தி சகல மாணவர்களுக்கும் சத்துணவு அளிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். தற்போது சிறார்களுக்கு காலை உணவு அளிக்கும் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆரம்பித்து வைத்திருக்கிறார்.*

*போஷாக்கான உணவு மாணவர்களுக்கு மிகவும் அவசியம் என்பதை தமிழக அரசின் செயற்பாடுகள் உணர்த்துகின்றன. இதை இலங்கை கல்வித்துறை முன் மாதிரியாக எடுத்துக் கொண்டு மாணவர்களுக்கு பகல் உணவை இலவசமாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.*

*அறுபதுகளில் கெயார் நிறுவனத்தின் உதவியுடன் பசும்பால் வழங்கப்பட்டது. பின்னர் பணிஸ் வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வந்து அது பிஸ்கட்டாக மாறியது. ஆகவே, பகல் போசனம் வழங்குதல் என்பது எமக்கு புதிய விஷயம் அல்ல. ஆனால் முன்னெப்பொழுதையும் விட இப்போது அதன் தேவை அதிகம் உணரப்படுவதால் ஆறாம் வகுப்பு வரையிலாவது சகல அரச பாடசாலை மாணவ, மாணவியருக்கும் சத்துணவை பகல் போசனமாக வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும்.*

editor.tkn@lakehouse.lk

# தலைசிறந்த திறனாய்வாளர் கே.எஸ். சிவகுமாரனின் நிரப்ப முடியாத வெற்றிடம்!

பேரன்புக்கும் மதிப்புக்கும் உரிய தலைசிறந்த இலக்கிய திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் அவர்களின் மறைவு ஈடுசெய்யமுடியாத இழப்பு என்பதையும் விட ஈடுசெய்யப்பட வேண்டிய இழப்பு என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் அவரைப் போன்றவர்கள் சமுதாயத்துக்கு அவசியம்.

இலக்கிய திறனாய்வாளராக,பத்திரிகையாளராக ,வானொலி ஒலிபரப்பாளராக, ஆங்கில ஆசிரியராக, பேச்சாளராக, திரைப்பட விமர்சகராக பன்முக ஆளுமைகொண்ட அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை கொண்டவர். தமிழை விடவும் ஆங்கிலத்தில் தான் அவர் கூடுதலாக எழுதிக் குவித்தார்.

தமிழ்ப் படைப்பாளிகளின் நூல்களுக்கு ஆங்கிலப் பத்திரிகைகளில் திறனாய்வுகளை எழுதி அவர்களின் அருமை பெருமைகளை தமிழ் சமூகத்துக்கு அப்பாலும் பிரபலமாக்கிய அரிய பணியை இடையறாது செய்து வந்தவர் சிவகுமாரன். ஆங்கிலப் பத்திரிகைகளில் அவரின் பத்திகள் சகல சமூகத்தவர்களினாலும் விரும்பி வாசிக்கப்படுபவை.சர்வதேச திரைப்பட விழாக்களுக்காக பல நாடுகளுக்கும் அடிக்கடி சென்றுவந்த அவர், அங்கெல்லாம் திரைப்பட துறையினருடன் நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்டார்.

அவருக்கும் எனக்கும் இடையில் உறவும் ஊடாட்டமும் நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான கால நீட்சி கொண்டவை. அவரது திறமையை எழுத்துக்கள் மற்றும் ஒலிபரப்பு பணி ஆகியவற்றின் மூலமாக நான் ஏற்கெனவே தெரிந்து கொண்ட போதிலும், அவர் 1980 களில் 'த ஐலண்ட்' பத்திரிகையில் பணியாற்றிய நாட்களில் இருந்தே நேரடியான அறிமுகம் ஏற்பட்டது. அதன் மூலமாக வளர்த்துக் கொண்ட நெருக்கம் அவரது இறுதி மூச்சுவரை தொடர்ந்தது.

1990 களின் முற்பகுதியில் சிவகுமாரன் அவர்கள் வீரகேசரியில் இணை ஆசிரியராக பதவியேற்று குறுகிய காலம் பணியாற்றினார்.அப்போது எனக்கும் அவருக்கும் இடையிலான நெருக்கம் அதிகரித்தது.



கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் சிவகுமாரன் அவர்களை அடிக்கடி சந்திக்க முடியும்.

அங்கு முன்வரிசையில் ஒரே ஆசனத்திலேயே அவரை எப்போதும் காண முடியும். அந்தக் கதிரையை பார்த்தால் நிச்சயமாக அவரின் நினைவுதான் வரும். அவர் சினந்து பேசியதை நான் என்றுமே கண்டதில்லை.

'கே.எஸ்' என்றோ அல்லது 'சிவகுமாரன்' என்றோ தனனை யாரும் அழைப்பதை அவர் விரும்பியதில்லை. 'சிவா' என்று அன்புரிமையுடன் அழைப்பதையே அவர் விரும்பினார். வயது முதிர்ந்தாலும் சிவா குழந்தையுள்ளம் கொண்டவர்.

கடந்த இரு வருடங்களுக்கும் மேலாக அவர் சுகவீனமுற்றிருந்தார். நீண்ட நாட்கள் வைத்தியசாலையில் இருந்து சிகிச்சை பெற்ற பிறகு ஓரளவு தேறி வீட்டுக்கு வந்த பிறகு சமூக ஊடகங்கள் மூலமாக நண்பர்களுடன் தொடர்புகளை மீண்டும் ஆரம்பித்தார். இறுதி நாள் வரை அதைத் தொடர்ந்தார். அவர் மரணமடைவதற்கு சில மணித்தியாலங்கள் முன்னர் கூட நண்பர்களுக்கு நல்லெண்ண செய்திகளை அனுப்பியிருந்தார்.

சிவா தனது வாழ்வின் முடிவு குறித்து ஒரு உள்ளுணர்வைக் கொண்டிருந்தார் போலும்.

நேற்றுமுன்தினம் இரவு வியாழக்கிழமை சிவகுமாரன் அவர்களின் மறைவு பற்றி தகவல் கிடைத்தது. காலையில் சமூக ஊடகங்களை பார்த்ததும் அவருக்கான அஞ்சலியே பக்கங்களை நிரப்பியிருந்தது.

இனிமேல் அவரைக் காண மாட்டோம். ஆனால் அவரது படைப்புக்கள் மூலமாக என்றென்றைக்கும் அவர் பேசிக் கொண்டிருப்பார். அவரின் நினைவு நிலைத்து நிற்கும். சென்று வாருங்கள் சிவா!

வீரகத்தி தனபாலசிங்கம்

# பாதை சீரின்மையால் தங்கவேலாயுதபுரம் கிராமத்துக்கான பஸ் சேவை நிறுத்தம்!

திருக்கோவில் பிரதேசத்திற்கு உட்பட்ட பின்தங்கிய தங்கவேலாயுதபுரம் கிராமத்துக்கான பிரதான பாதை குண்டும்குழியுமாக இருப்பதால் அங்கு சேவையீடுபட்ட ஒரேயொரு பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பஸ் டிப்போவால் திருக்கோவிலில் இருந்து தங்கவேலாயுதபுரம் கிராமத்திற்கான பஸ் சேவை தினமும் இரண்டு தடவை இடம்பெற்று வந்தது.

இவ்வேளையில் அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான பாதையில் தாண்டியடி சந்தியிலிருந்து தங்கவேலாயுதபுரம் செல்வதற்கான 12 கிலோமீட்டர் தூர ஒரேயொரு பிரதான வீதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது..

மண்ஏற்றும் கனரக வாகனங்கள் தொடர்ச்சியாக இப்பாதையை பயன்படுத்தியதன் காரணமாக இப் பாதை இவ்வாறு படுமோசமாக பாதிக்கப்பட்டிருக்கலாமென கூறப்படுகிறது.

இதனால் இருந்த ஒரேயொரு பஸ் சேவையும் நிறுத்தப்பட்டு இருக்கின்றது .மாணவர்களும் விவசாயிகளும் பொது மக்களும் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்கள் இந்த பன்னிரண்டு கிலோமீட்டர் தூரத்தை கால்நடையாக நடந்தே பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி திணைக்களம் இந்த பாதையை செப்பனிட பத்தாயிரம் கிலோ மீட்டர் வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கேள்வி அறிவித்தல் போடப்பட்டது. ஆனால் அரசாங்கத்தின் சமகால பொருளாதார நெருக்கடி காரணமாக அது கைவிடப்பட்டது.

இப்பிரதேசத்தில் 12000 ஏக்கர் வயல் காணிகளும் இருக்கின்றன. அவற்றுக்கு செல்கின்ற விவசாயிகள் மக்கள் கால்நடையாகவே செல்ல வேண்டியிருக்கின்றது.

இந்த அவல நிலையை கருத்தில் கொண்டு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் ஏனைய நிறுவனங்களிடம் இருந்து நிதி பெற்று இந்த வீதியை செப்பனிட நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிகின்றது.



மக்கள் 12 கி.மீ தூரம் கால்நடைப் பயணம்

தங்கவேலாயுதபுரம் பாடசாலைக்கு செல்கின்ற மாணவர்களும் ஆசிரியர்களும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாக இருப்பதாக திருக்கோயில் வலய கல்வி பணிப்பாளர் யோகேந்திரா ஜெயச்சந்திரன் தெரிவித்தார். தங்கவேலாயுதபுரம் கஞ்சிகுடிச்சாறு செல்லுகின்ற மக்களும் கால்நடையாக செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது விரைவில் இதற்கான தீர்வு கொடுக்கப்படும் என்று திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தெரிவித்தார்.

வி.ரி. சகாதேவராஜா
காரைதீவு குறூப் நிருபர்)

**ஆயுள் காப்புறுதி விழிப்புணர்வு மாதம்:**

# யூனியன் அஷ்யூரன்ஸ் முதலாவது blog ஆக்கங்களுக்கான போட்டி

இலங்கையில் ஆயுள் காப்புறுதித் துறையில் புத்தாக்கமான அம்சங்களை அறிமுகம் செய்து வரும் முன்னோடி ஆயுள் காப்புறுதி நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ், துறையின் முதலாவது blog ஆக்கங்களை பதிவு செய்யும் போட்டியான 'BLOG IT' என்பதை 2022 செப்டெம்பர் 1 ஆம் திகதி முதல் அறிமுகம் செய்துள்ளது.

செப்டெம்பர் மாதம் ஆயுள் காப்புறுதி விழிப்புணர்வு மாதமாக அனுஷ்டிக்கப்படும் நிலையில் இந்தப் போட்டியை யூனியன் அஷ்யூரன்ஸ் முன்னெடுக்கின்றது. இந்த BLOG IT போட்டியில் ஆர்வமுள்ள அனைவரும் தமது ஆக்கங்களை https://lnkd.in/gxFCcH2R எனும் இணையத்தளத்தினூடாக 2022 செப்டெம்பர் 25 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். இந்தப் போட்டியில் வெற்றியாளராக தெரிவு செய்யப்படுவோருக்கு ரூ. 180,000 பெறுமதியான பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படும் என்பதுடன், தமது ஆக்கங்களை யூனியன் அஷ்யூரன்ஸ் இணையத்தளம் மற்றும் சமூக வலைத்தளங்களில் பிரசுரமாவதற்கான வாய்ப்பையும் பெறுவார்கள். மக்களுக்கு தமது கனவுகளை எய்துவதற்கு வலுவூட்டுவதற்கும், ஆரோக்கிய நலனுக்காக காப்புறுதிகளை வழங்குவதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் தன்னை அர்ப்பணித்துள்ளது. இந்த நோக்கத்தின் நீடிப்பாக BLOG IT அமைந்துள்ளது. கட்டுரை, கவிதை அல்லது சிறுகதை போன்றவற்றினூடாக, 'ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவம்' என்பதை இலங்கையின் திறமையாளர்கள் வெளிப்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் இந்தப் போட்டி அமைந்துள்ளது. சுயாதீன நிபுணர்களினால் மீளாய்வு செய்யப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கங்களின் தரம் மற்றும் புத்தாக்கத்திறன் போன்றவற்றினூடாக வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மஹேன் குணரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "பொதுமக்களுக்கு நிதிப் பாதுகாப்பைப் பெற்றிருப்பதன் முக்கியத்துவம் மற்றும் பரிபூரணமான வாழ்க்கையை முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தை பொதுமக்கள் மத்தியில் உணர்த்தும் வகையில் ஆயுள் காப்புறுதி விழிப்புணர்வு மாதம் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த ஆண்டில், BLOG IT எனும் போட்டியை அறிமுகம் செய்வதையிட்டு யூனியன் அஷ்யூரன்ஸ் பெருமை கொள்கின்றது. எமது திறமையான எழுத்தாளர்களுக்கு தமது சிந்தனைகளை வெளிப்படுத்தி, பகிர்ந்து கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தொழிற்துறையில் இது போன்று முன்னெடுக்கப்படும் முதலாவது போட்டியாகவும் BLOG IT அமைந்துள்ளது. எழுத்துத் துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு தமது திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பை வழங்குவதில் நாம் தலைமைத்துவமேற்று செயலாற்றுகின்றதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

அனைத்து பங்குபற்றுநர்களுக்கும் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், பங்குபற்றுகின்றமைக்காக நன்றி தெரிவிக்கின்றேன்" என்றார்.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. துறையில் மூன்று தசாப்த கால வெற்றிகரமான சேவையை யூனியன் அஷ்யூரன்ஸ் பூர்த்தி செய்துள்ளதுடன் சந்தை மூலதனவாக்கமாக ரூ. 15.7 பில்லியனைக் கொண்டுள்ளது. ஆயுள் நிதியமாக ரூ. 51.5 பில்லியனையும், 2022 ஜுன் மாதமளவில் முதலீட்டு இலாகாவாக ரூ. 59.3 பில்லியனையும் கொண்டிருந்தது.

இலங்கையர்களின் கனவுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், கல்வி, ஆரோக்கியம், பாதுகாப்பு, ஓய்வூதியம் மற்றும் முதலீடு போன்ற ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடைய தீர்வுகளை




இலங்கையர்ளுக்கு வழங்குகின்றது. நாடளாவிய ரீதியில் பரந்த கிளை வலையமைப்பினூடாக 3000 க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், பல வருடங்களாக தொடர்ச்சியாக Great Place to Work இனால் பணியாற்றுவதற்கு சிறந்த நிறுவனமாக தரப்படுத்தப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மேற்கு கல்விவலய ஆசிரியர்கள், ஆளணியினருக்கு திறன் பலகை செயலமர்வு

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட 14 பாடசாலைகளுக்கு அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHOUSA)மற்றும் இரட்ணம் பவுண்டேசன்(Ratnam FoundationUK) இணைந்து திறன் பலகைகளை வழங்கியது மட்டுமன்றி அப்பாடசாலை ஆசிரியர்களையும் அக்கல்வி வலய மேற்பார்வை ஆளணியினரையும் பயிற்றுவிக்கும் செயலமர்வு அண்மையில் நடைபெற்றது.

மட்/மமே/ முனைக்காடு விவேகானந்த தேசிய பாடசாலை மற்றும் ம/மமே/முதலிக்குடா மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் இருபிரிவுகளாக நடைபெற்ற இச்செயலமர்வில் 48 பேர் வரை கலந்து கொண்டிருந்தனர். கல்விஅமைச்சின் ஈதக்சலாவ கல்வி பிரிவு மற்றும் வடமராட்சி கணனி வள நிலைய வளவாளர்களினால் நடாத்தப்பட்ட இச்செயலமர்வு ஆரம்பம் முதல் இறுதி வரை ஒவ்வொரு பங்குபற்றுநரும் செயற்பட்டு, அனுபவத்தை பெற்றுக்கொண்ட வகையில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம், வடக்கு மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முன்னாள் பிரதிமாகாணக் கல்வி செயலாளரும்,சிரேஷ்ட உதவிக்கல்வி செயலாளருமாகிய ஓய்வுபெற்ற திசவீரசிங்கம் பொன்னம்பலம், IMHOUSA அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளரும் ஓய்வுபெற்ற வலயககல்வி பணிப்பாளருமாகிய சு.கிருஷ்ணகுமார் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இச்செயலமர்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.ஆசிரியர்களுக்கான விரலிகளும் பாடசாலைக்குரிய பெயர் பலகைகளும் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.





எச்.எச்.விக்ரமசிங்க

# இலக்கியத்துக்காகவே வாழ்க்கையை அர்ப்பணித்தவர் கே. எஸ். சிவகுமாரன்

எழுத்தாளர் கே.எஸ்.சிவகுமாரன் நேற்றுமுன்தினம் 15 ஆம் திகதி தமது 86 ஆவது வயதில் கொழும்பில் மறைந்து விட்டார் என்ற செய்தி இலக்கிய உலகிற்கு துயரமாகவிருந்த போதிலும், அவர் நிறைவான வாழ்க்கையை வாழ்ந்து மறைந்தது, ஏனைய கலை, இலக்கியவாதிகளுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் முன்மாதிரியானது.

ஒரு எழுத்தாளன் எத்தனை புத்தகங்கள் எழுதினார் என்பதை விட, எத்தனை வாசகர்களை உருவாக்கினார் என்பதுதான் முக்கியமானது.



அந்த வகையில் வாசிப்பு அனுபவத்தில் தேர்ந்த வாசனையை உருவாக்குவதற்கு தனது பத்தி எழுத்துக்கள் மூலம் உழைத்த கர்மயோகி அவர்.

அன்னாரின் வாழ்வையும் பணிகளையும் கூர்ந்து அவதானித்தால், அவரது வகிபாகம், ஈழத்து இலக்கிய உலகிற்கு குறிப்பாகவும் தமிழ் – ஆங்கில ஊடகத்துறையில் பொதுவாகவும் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியது என்பது தெரியவரும்.

சுமார் ஆறு தசாப்த காலம் எழுத்தூழியம் புரிந்து வந்திருக்கும் கே. எஸ். சிவகுமாரன், அந்திம காலத்தில் உடல் நலம் குன்றியிருந்த வேளையிலும் முகநூல் வாயிலாக தொடர்ந்தும் பதிவுகளை வெளியிட்டு வந்தவர்.

மட்டக்களப்பில் 1936 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி பிறந்த சிவகுமாரன், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் மாணாக்கர்.

## தமது வாழ்நாளில் பெரும் பகுதியை இலக்கியத்திற்கும் ஊடகம் மற்றும் இதழியலுக்கும், மொழிபெயர்ப்புக்கும் கல்வித்துறைக்கும் அர்ப்பணித்த பண்பாளன்

இந்தியாவில் புகழ்பெற்ற பாலுமகேந்திரா மட்டக்களப்பில் வாழ்ந்த காலத்தில் சச்சிதானந்தன் என்பவருடன் இணைந்து 'தேனருவி' என்ற கலை இலக்கிய இதழை வெளியிட்டபொழுது, அதில் பல ஆக்கங்களை எழுதியிருக்கும் சிவகுமாரனின் ஒரு நூலுக்கு பாலுமகேந்திரா முன்னுரை எழுதியுள்ளார்.

சிவகுமாரனின் 'அசையும் படிமங்கள்' என்ற நூலின் முகப்பில் இந்த பால்யகாலத் தோழர்கள்தான் இணைந்து தோன்றுகின்றனர்.

மற்றவர்களின் படைப்புகளையும் அவர்தம் இலக்கியப் பணிகளையும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் தமது பத்திகளில் அறிமுகப்படுத்தி வந்த சிவகுமாரன்தான் தமிழில் பத்தி எழுத்து என்னும் பிரயோகத்தை அறிமுகப்படுத்தியவர் என்ற தகவல் பலருக்குத் தெரியாது.

Thamil Writing in Srilanka, Aspects of Culture in Srilanka ஆகிய தமது நூல்களிலும் தமிழில் எழுதியிருக்கும் ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள், நாவல் இலக்கியம் தொடர்பான நூல் உட்பட பல நூல்களிலும் எம்மவர்களின் படைப்புகளை திறனாய்வு செய்து அறிமுகப்படுத்தியிருக்கும் இவரது இயல்பு ஏனையவர்களுக்கு குறிப்பாக விமர்சகர்களுக்கு முன்மாதிரியானது.



ஒரு நூலைப் படித்தால் அது இவரைக் கவர்ந்துவிட்டால் தாமதமின்றி ஆங்கிலத்திலோ தமிழிலோ அதனை அறிமுகப் படுத்தி, ஏதேனும் இதழில் எழுதிவிடுவார். அத்துடன் இலக்கிய உலகின் சமகால நிகழ்வுகளையும் இரண்டு மொழிகளிலும் தமது பத்திகளில் பதிவுசெய்து விடுவார்.

இலங்கையில் நீண்டகாலம் வெளியான மல்லிகை, மற்றும் தற்போதும் வெளியாகும் ஞானம் இதழும் கே.எஸ்.சிவகுமாரனை அட்டைப் பட அதிதியாக கௌரவித்து பாராட்டியுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'ஜீவநதி' இவருக்காக பிரத்தியேகமாக தனிச்சிறப்பிதழும் வெளியிட்டுள்ளது.

இலங்கை வானொலி, த ஐலண்ட், வீரகேசரி, முதலான ஊடகங்களிலும் பணியாற்றியவர்.இவர் ஏராளமான பத்திரிகைகளின் புகழ்பெற்ற எழுத்தாளன். தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரியில் அதிகம் எழுதியவர். உடல் தளர்ந்த வேளையிலும் தினகரன் அலுவலகத்துக்கு வந்து ஆக்கங்களை நேரில் ஒப்படைத்து விட்டுச் செல்வது இவரது எளிமையான நாகரிகப் பண்பு. டெயிலிநியூசில் பத்தி எழுத்துக்களை எழுதினார். இலங்கை வங்கி உட்பட பல வர்த்தக ஸ்தாபனங்களிலும் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றியவர்.



இலங்கை வானொலியின் தமிழ் வர்த்தகசேவையில் பகுதி நேர அறிவிப்பாளராகவும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மொழி பெயர்ப்பாளராகவும் செய்திப் பிரிவில் துணை ஆசிரியராகவும் சேவையாற்றிய கே.எஸ். சிவகுமாரன், இலங்கையில் அமெரிக்கத் தூதரக தகவல் பிரிவிலும் சிறிதுகாலம் பணியாற்றியிருக்கிறார். நவமணி இதழின் ஸ்தாபக ஆசிரியரும் இவரே. கொழும்பில் மூன்று சர்வதேசப் பாடசாலைகளிலும் அமெரிக்கா, மாலைதீவு, ஓமான் ஆகிய நாடுகளிலுள்ள பாடசாலைகளிலும் ஆங்கில ஆசிரியராக பணியாற்றிய அனுபவம் இவருக்குண்டு. இலங்கை திரைப்பட தணிக்கை அதிகாரியாகவும் கடமையாற்றியவர். சிறுகதை, திறனாய்வு, பத்தி எழுத்துக்களில் மாத்திரம் கவனம்செலுத்தியவர் அல்ல. தரமான சினிமா பற்றிய பிரக்ஞையுடனும் இயங்கியவர். 'அசையும் படிமங்கள்', 'சினமா ஒரு உலகவலம்' ஆகிய இவரது நூல்கள் சினமா பற்றியவை. இந்தியாவில் நடந்த பல சர்வதேச திரைப்பட விழாக்களிலும் பங்குபற்றியவர்.

நாம் சினிமா என எழுதிய போது இவர் சினமா என்றே எழுதிவந்தவர்.

இத்தனை அனுபவங்களுக்குப்பின்னரும், சிவகுமாரன் தன்னை ஒரு இலக்கிய விமர்சகன் என்று சொல்லிக் கொள்ள விரும்பாதவர். தான் ஒரு திறனாய்வாளன்தான் என்று எப்போதுமே அடக்கமாகச்சொல்லிக் கொண்டவர், சிறுகதைகளும் எழுதியிருக்கிறார். அத்துடன் ஆங்கிலத்திலும் தமிழிலும் கவிதைகளும் எழுதியவர்.



அமரர் கே. எஸ். சிவகுமாரனுக்கு வலதுபுறத்தில் கட்டுரையாளர் லெ.முருகபூபதி

ஆயினும் ஒரு விமர்சகராக, திறனாய்வாளராக, பத்தி எழுத்தாளராக, மொழிபெயர்ப்பாளராகத்தான் வெளியுலகிற்கு அறியப்பட்டவர்.

கே.எஸ்.எஸ், பேராதனைப் பல்கலைக்கழக ஆங்கிலப் பட்டதாரி. தமது வாழ்நாளில் பெரும் பகுதியை இலக்கியத்திற்கும் ஊடகம் மற்றும் இதழியலுக்கும், மொழிபெயர்ப்பிற்கும் கல்வித்துறைக்கும் அர்ப்பணித்தவர். தன்னை எங்கும் எதிலும் முதனிலைப்படுத்திக் கொள்ள விரும்பாத அளவுக்கு அதிகமான தன்னடக்க இயல்பு கொண்டவர். அமைதியான சுபாவம், கலந்துரையாடல்களிலும் உரத்துப்பேச விரும்பாத இயல்பு, மற்றவர்களின் கருத்துக்களை பொறுமையாக செவிமடுக்கும் குணம் முதலானவையே அவரது மிகச்சிறந்த பலமாக இருந்தவை. அத்தகைய ஆளுமையான கே. எஸ். சிவகுமாரன் அவர்கள் நேற்றுமுன்தினம் 15 ஆம் திகதி சிந்திப்பதையும், எழுதுவதையும் நிறுத்திக் கொண்டு எம்மிடமிருந்து விடைபெற்று விட்டார்.

முருகபூபதி...
அவுஸ்திரேலியா

---

**75 வருடங்களாக சிறப்பாக சேவையாற்றும் பாடசாலை**

# பள்ளிப்போருவை முஸ்லிம் வித்தியாலய பவளவிழா கொண்டாட்டம் கோலாகலம்

கேகாலை மாவட்டம், மாவனல்லை கல்வி வலயத்தில் அமைந்துள்ளது ஹெம்மாதகமை பள்ளிப்போருவை முஸ்லிம் வித்தியாலயம். மாவனல்லையிலிருந்து ஹெம்மாதகமை செல்லும் பிரதான வீதியின் அருகில் இப்பாடசாலை அமைந்துள்ளது.

எனக்கு அரிச்சுவடி போதித்து அரவணைத்த என் கல்வித்தாய். 1947.09.16 இப்பிரதேச பெரியோர்களின் முயற்சியின் பலனாக ஓலைக் கூரையுடன் பலகையிலான அரைச்சுவருடன் அமைக்கப்பட்ட கட்டடத்தில் இரண்டு ஆசிரியர்களுடனும் 39 மாணவர்களுடனும் பெண்கள் பாடசாலையாக கல்விப் பயணத்தை ஆரம்பித்த இப்பாடசாலை நாளடைவில் ஆண்கள், பெண்கள் கலவன் ஆரம்பப் பாடசாலையாக உருமாறியது. இன்று 23 ஆசிரியர்கள் 250 ஐ அண்மித்த மாணவர்களுடன் நேற்று (16.09.2022) பவளவிழா கண்டது.






ஆரம்பப் பாடசாலைக்குத் தேவையான சகல அடிப்படை வசதிகளுடனும், தேர்ச்சி பெற்ற அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சேவை மனப்பான்மை, கடின உழைப்பு, மாணவர்களின் முன்னேற்றத்தில் காட்டும் அக்கறை என்பன இங்கு திறமையான மாணவர்கள் உருவாக காரணமாக அமைந்துள்ளது.

5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுக் கொடுத்து உள்ளது. 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் தர புலமைப் பரீட்சையில் இப்பாடசாலை மாணவன் எம்.கே.எம் அம்மர் 192 புள்ளிகள் பெற்று தமிழ் மொழி மூலம் சபரகமுவ மாகாணத்தில முதலிடம் பெற்றார்.

இங்கு ஆரம்பக் கல்வியை தொடர்ந்த பழைய மாணவர்கள் பலர் இன்று கல்விமான்களாக ,புத்திஜீவிகளாக உள்ளனர். இவர்களில் நீதவான், சட்டத்தரணிகள்,வைத்தியர்கள்,பொறியியலாளர்கள் என பல துறைகளில் மிளிர்கின்றனர்.இவர்களின் வெற்றிக்கு பின்னால் அன்று முதல் இன்று வரை அர்ப்பணிப்புடன் உழைத்த அதிபர்கள்,ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருவது மிகையாகாது. பாடசாலையின் வளர்ச்சியிலும் விழா ஏற்பாட்டிலும் உயராது உழைத்துக் கொண்டிருக்கும் அதிபர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம் நிஸாம் அன்வாரி மற்றும் ஆசிரிய குழாம் ,பழைய மாணவர் சங்கம்,பழைய மாணவிகள் சங்கம், பெற்றோர், வர்த்தகப் பிரமுகர்கள், பொதுநல விரும்பிகள் போன்றோர் பாடசாலை நாளைய வரலாற்றில் பதியப்பட வேண்டியவர்களாவர்.

பவள விழாவின் ஆரம்ப நிகழ்வுகள் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் நேற்றுக் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகின. 75 வருட நினைவுத் தூபியும் திறந்து வைக்கப்பட்டது.

அன்று 75 வருடங்களுக்கு முன் சிறு விதையாக விதைக்கப்பட்டு இன்று பரந்து விரிந்து கிளை விட்டு விருட்சமாக காட்சி அளிக்கும் எமது ஆரம்ப கல்விக் கூடம் நாளை நாடு போற்றும் நற்பிரஜைகளை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

ஹெம்மாதகமை பள்ளிபோருவை முஸ்லிம் வித்தியாலயத்தின் 75 வருட பூர்த்தி பவள விழா நிகழ்வுகள் அதிபர் அஷ்ஷெய்க் எம்.எஸ் எம் நிஸாம் அன்வாரி தலைமையில் பாடசாலை வளாகத்தில் நேற்று சிறப்பாக நடைபெற்றன.

பிரதம அதிதியாக சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளர் குறுப்பு ஆரச்சி, விஷேட அதிதியாக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் அன்ஷாப் தாவுத், ஆரம்ப பிரிவு பணிப்பாளர் கோரலகே ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

ஹெம்மாதகமை ஜெ.ஸவாஹிர்...
(ஓய்வு நிலை நீதிமன்ற மொழி பெயர்ப்பாளர்)

---

# யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் ஒன்பது திறன் வகுப்பறைகள்



யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் முன்னணிப் பாடசாலையாகத் திகழ்வதோடு, தனக்கே உரிய கல்விப் பாரம்பரியத்தை தொடர்ந்து நிலைநாட்டி வருகின்றது.

இக்கல்லூரியின் பௌதீக வளத் தேவைகள் அரசதுறையால் மட்டுமன்றி பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளால் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு ஒரு நிறைவான கல்லூரியாக மிளிர்கின்றது.





நகர்ப்புற பாடசாலைகளுக்கு ஈடிணையாக இக்கல்லூரியிலும் நவீன கற்றல் சாதனைச் செயற்பாடாக ஒரே தடவையில் ஒன்பது திறன் வகுப்பறைகள் (Smart class rooms) பழைய மாணவர்களால் அமைக்கப்பட்டமை கல்விச் சாதனையாக அமைகின்றது. இந்த திறன் வகுப்பறைகள் பழைய மாணவர்களோடு இரட்ணம் நிதியம் (Ratnam Foundation) இலண்டன் அமைப்பினரின் ஸ்தாபகர் கலாநிதி நித்தியானந்தன் அவர்களின் பங்களிப்போடு சிறப்பாக அமைக்கப்பெற்று கடந்த செப்ரெம்பர் 06ம் திகதி உரிய வகையில் கையளிக்கப்பட்டமை பாடசாலை வரலாற்றுச் சாதனைகளில் ஒன்றெனலாம்.

பாடசாலை முதல்வர் சி.திரிகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில்; வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரா.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்ததோடு வடமாகாண கல்வித் திணைக்களப் பணிப்பாளர் செ.உதயகுமார், யாழ்கல்வி வலய கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன், கோட்டக் கல்வி அலுவலர் நா.சிவநேசன், தென்மராட்சி வலய ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார், சிவசக்தி மணிமண்டப நிறுவுநர் வே.சிவசுந்தரம், ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி ஓய்வுநிலை அதிபர் வ.ஆறுமுகம், ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி அறக்கொடை நிதிய வாழ்நாள் உறுப்பினர் த.விஸ்வலிங்கம், கல்லூரியின் ஓய்வுநிலை பிரதிஅதிபர் செல்வி. வ.சிவலீலாதேவி ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இச்செயற்பாடுகள் கல்லூரி அதிபர் சி.திரிகரன் தலைமையில் பாடசாலைச் சமூகத்தினர் அனைவரினதும் ஒன்றிணைந்த கூட்டு முயற்சியாகும்.

---

# மருதானை எல்பின்ஸ்டோன் திரையரங்கில் நேற்றுமுன்தினம் நாடகம் மற்றும் அரங்க உயர் டிப்ளோமா விருது வழங்கும் விழா

டவர் மண்டப அரங்க மன்றம் 1978 ஆம் ஆண்டு பாராளுமன்ற 1 ஆம் இலக்க சட்டத்தின் கீழ், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. அதன் நோக்கங்கள் மற்றும் பணிகளை செயல்படுத்துவதற்கான படிகளில் ஒன்றாக, 1997 இல் நிறுவப்பட்ட டவர் நாடக அரங்க பாடசாலையின் நாடகம் மற்றும் அரங்க உயர் தர டிப்ளோமா பாடநெறியின் எட்டாவது டிப்ளோமா விருது வழங்கும் விழா பௌத்த, கலாசார மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அவர்களின் வழிகாட்டலில் 2022 செப்டம்பர் 15ஆம் திகதி எல்பின்ஸ்டோன் திரையரங்கில் இடம்பெற்றது.



உயர் டிப்ளோமா சான்றிதழ் பெற்ற முப்பத்தேழு பேரில் ஐவருக்கு சி. டொன் பஸ்டியன் ஜயவீர பண்டார புலமைப்பரிசில், சட்டத்தரணி ஜோன் டி சில்வா புலமைப்பரிசில், சட்டத்தரணி சார்ள்ஸ் டயஸ் புலமைப்பரிசில், பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திர புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

டவர் நாடக அரங்கப் பாடசாலை இலங்கையில் நாடகம் மற்றும் அரங்க உயர் டிப்ளோமாவை வழங்கும் ஒரே பொதுநிறுவனம் ஆகும். நாடகம் மற்றும் நாடகம் பற்றிய அறிமுறை மற்றும் செய்முறை அறிவு நிறைந்த நிபுணத்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் கீழ் அறிவு, திறன் மற்றும் மனப்பான்மைகளைக் கொண்ட முழுமையான டிப்ளோமாதாரர்களை உருவாக்கி, அவர்களை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துடன் இணைந்து நாடகம் மற்றும் அரங்கியல் துரையில் கல்விமாணி பட்டம் பெற வழிகாட்டுகின்றது. பின்னர் நாடகம் மற்றும் அரங்கியல் ஆசிரியர்களாக பங்களிக்க இப்பட்டம் இடம் கொடுக்கின்றது. இந்நிகழ்வில் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்விதுர விக்கிரமநாயக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பி.எம்.சி. திலகரத்ன, அதே பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தின் பீடாதிபதி சசிகலா குகமூர்த்தி, கல்விப் பீடத்தின் இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் ஷமேந்திர வனசிங்க, புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, அமைச்சின் பாரம்பரிய பிரிவின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி), கே.ஏ.டி.ஆர். நிஷாந்தி ஜயசிங்க, மேலதிக செயலாளர் (நிர்வாகம்) எஸ்.ஜி. பள்ளியகுருகே, நாடக மற்றும் கலைநிகழ்ச்சிகளுக்கான உயர் டிப்ளோமா நிர்வாக சபை உறுப்பினர்கள், ஆசிரியப் பணியாளர்கள், டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள், அவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

படமும் தகவலும்: எம் நசார்

# கொழும்பு – மாஸ்கோ விமான சேவை மீண்டும் ஒக்டோபர் 01 முதல் Aeroflot ஆரம்பிக்கிறது

ரஷ்யாவின் மாஸ்கோவுக்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவைகளை ரஷ்ய ஏரோஃப்ளோட் விமான சேவை எதிர்வரும் ஒக்டோபர் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படுமென விமான சேவையின் இலங்கை பிரதிநிதி நிறுவனமான Moldaviana Aviation நிறுவனத்தின் தலைவர் கலாநிதி தர்மதாச விக்கிரமகே தெரிவித்துள்ளார். ஜூன் 02 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த Aeroflot நிறுவனத்துக்குச சொந்தமான Airbus A330 விமானத்தை தடுத்து வைக்குமாறு கொழும்பு வர்த்தக நீதிமன்றம் உத்தரவிட்டதைடுத்து, ரஷ்ய Aeroflot Airlines இலங்கைக்கான விமான சேவைகளை நிறுத்தியிருத்தது குறிப்பிடத்தக்கது.

## திறனாய்வாளர்...

85.கைலாயர் செல்லநைனார் சிவகுமாரன் என்ற பெயர் கொண்ட சிவகுமாரன் 1936ம் ஆண்டு அக்டோபர் முதலாம் திகதி மட்டக்களப்பு புளியந்தீவு சிங்களவாடியில் பிறந்தார். ஆளைப்பந்தி ஆண்கள் பாடசாலையில் தன் கல்வியை ஆரம்பித்த இவர் புனித மைக்கல் கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி மற்றும் புனித ஜோசப் கல்லூரி ஆகியவற்றில் கல்வியைத் தொடர்ந்தார். பேராதனை பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம், தமிழ் மற்றும் மேற்கத்திய கலாசாரதுறையில் வெளிவாரி மாணவராக பட்டம் பெற்றார். தமிழைப் போலவே ஆங்கிலத்திலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்த அவர் மாலைத்தீவிலும் ஓமானிலும் ஆங்கில ஆசிரியராக பணியாற்றியுள்ளார்.

நவமணி பத்திரிகையின் முதலாவது, ஆசிரியராக பணியாற்றிய அவர் வீரகேசரியிலும் பணியாற்றிய பின்னர், த ஐலண்ட் பத்திரிகையில் சிலகாலம் பதில் ஆசிரியராக பணியாற்றினார். டெய்லி நியூஸ் பத்திரிகையில் துணையாசிரியராக பணியாற்றிய கே.எஸ்.சிவகுமாரன், தினகரன், வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் பத்தி எழுத்தாளராக தன் பங்களிப்பை வழங்கி வந்தார்.

இலங்கை வானொலி ஆங்கில சேவையில் பகுதிநேர அறிவிப்பாளராக பணியாற்றிய இவர் ஆங்கிலத்திலும் தமிழிழுமாக 25க்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். இரண்டு மகன்மார்களின் தந்தையான இவரது திருமணம் 1966ம் ஆண்டு கொழும்பு கப்பிதாவத்தை ஆலயத்தில் நடைபெற்றது. மனைவியின் பெயர் புஷ்பா சிவகுமாரன். ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டிருந்த அவர் தன் இறுதிக் காலத்தில் நோய்வாய்ப் பட்டிருந்தார். அவரது இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப் படும் என்று குடும்பத்தவர் தகவல் தெரிவித்துள்ளனர்.

## தாமரை கோபுரம் திறக்கப்பட்ட...

இக்கோபுரத்தை பார்வையிட 2,612 வருகை தந்ததாகவும் கொழும்பு லோட்டஸ் டவர் மெனேஜ்மென்ட் கம்பனியின் (Colombo Lotus Tower Management Company ) பிரதம நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இக்கோபுரத்தை பார்வையிடுவதற்காக 500 ரூபா கட்டணம் அறவிடப்படுகிறது. வரிசையில் காத்திருக்காமல் நேரடியாக 07 ஆவது மாடியிலுள்ள அவதானிப்பு தளத்துக்கு செல்வதற்கான 'எக்ஸ்பிரஸ் ரிக்கெட்' 2000 ரூபா விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. வெளிநாட்டவர்களுக்கு 20 டொலர் கட்டணம் அறிவிடப்படுகிறது.

வார நாட்களில் பிற்பகல் 02 மணி முதல் இரவு 11 மணிவரையும் வார இறுதி நாட்களில் நண்பகல் 12 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரையும் தாமரைக் கோபுரம் திறந்திருக்கும்.

03 கட்டங்களாக இக்கோபுரம் திறக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது கட்ட திறப்பு விழா 02 மாதங்களுக்குள் நடைபெறுமெனவும் 03 ஆவது கட்ட திறப்பு விழா எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 113 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் தாமரைக் கோபுர கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. தெற்காசியாவின் மிக உயரமான கட்டடம் இதுவாகும். ஆசியாவின் 11 ஆவது மிக உயரமான கட்டடமாகவும் இது விளங்குகிறது.

## அறிக்கைகள் விட்டு இலங்கையை...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைமீது வெளியில் இருப்போர் அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது. எமது நாடு இறைமையுள்ள நாடு. சர்வதேச தீர்மானங்களையோ அல்லது சர்வதேச சட்டங்களையோ இலங்கை மீது பிரயோகிக்க முடியாது.

இங்கு பிரச்சினைகள், குற்றச்சாட்டுக்கள் இருப்பின் அது தொடர்பில் உள்ளகப் பொறிமுறையூடாகத்தான் ஆராய்ந்து பார்க்க முடியும். உள்நாட்டு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வெளியேயுள்ள பொறிமுறை அவசியமில்லை. அதை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம்"என கூறியுள்ளார்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்...

பெயரிட கோட்டை நீதிவான் திலின கமகே அனுமதியளித்ததையடுத்து இந்த அறிவித்தல் அனுப்பப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ மற்றும் ஜேசுராஜ் கணேசன் ஆகியோர் முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் 298 பிரிவின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி தனிப்பட்ட முறைப்பாடொன்றை தாக்கல் செய்துள்ளனர். அவரது அலட்சியத்தால் இத் தாக்குதலில் மரணங்கள் சம்பவித்ததாக மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர். ஜனாதிபதி சட்டத்தரணி றியன்சி அர்சகுலரத்ன தலைமையில் சட்டத்தரணிகளான தேஜித கோரளகே, உதார முஹந்திரம்கே மற்றும் திலின புஞ்சிஹேவா ஆகியோர் முறைப்பாட்டாளர்கள் சார்பில் ஆஜராகி வாதங்களை முன்வைத்தபோதே, மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பாணை அனுப்பப் பட்டது.

## சட்டவிரோதமாக வெளிநாடு...

இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

26 பேருடன் கண்ணாடி இழை படகொன்றும் ஆழ்கடல் மீன்பிடி படகொன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடல் வழியாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் கடற்படையினர் தினமும் ரோந்துப் பணிகளை அதிகரித்துள்ளதுடன் நாட்டின் கடல் மற்றும் கரையோரங்களை உள்ளடக்கிய வழமையான கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, வடக்கு கடற்படை கட்டளை தலைமையகத்துடன் இணைக்கப்பட்ட P 166 கரையோர ரோந்துக் கப்பல் நேற்று முன்தினம்15 ஆம் திகதி இரவு வெற்றிலைக்கேணிக்கு அப்பால் கடல் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது

இதன்போது சந்தேகத்திற்கிடமான கண்ணாடி இழை படகொன்று செல்வதை அவதானித்த கடற்படையினர் படகை நோட்டமிட்டனர். அங்கு 18 வயதுக்கு மேற்பட்ட 12 ஆண்கள், நான்கு பெண்கள், கண்ணாடி இழை பட கோட்டியுடன் 21 பேர் சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக வெளிநாட்டுக்கு செல்ல முயன்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் வடக்கு கடற்படை கட்டளைத் தளத்துக்குச் சொந்தமான P178 கரையோர ரோந்து கப்பலை பயன்படுத்தி அந்த கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக வெளிநாட்டுக்கு கொண்டு செல்ல தயாராக இருந்ததாக சந்தேகிக்கப்படும் ஆழ் கடல் மீன்பிடி வள்ளம் நேற்று(16) காலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மீன்பிடிப்படகிலிருந்து ஐந்து (05) பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இருபத்தியாறு (26) பேர் பூநகரி, உடுத்துறை, ஒட்டமாவடி மற்றும் வாழைச்சேனை ஆகிய பகுதிகளிலுள்ளவர்களென அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

## வெளிநாட்டமைச்சு கொன்சியூலர்...

இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கணனி கட்டமைப்பைப் பழுது பார்க்கும் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதுடன், சரிபார்ப்பு மற்றும் சான்றளிப்பு செயன்முறை மீள ஆரம்பிக்கப்பட்டவுடன், அது குறித்து பொதுமக்களுக்கு அறியத்தரப்படும். ஏனைய கொன்சியூலர் சேவைகள் எந்தவித தடங்கலுமின்றி தொடர்ச்சியாக நடைபெறும்.

இதனால் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களுக்காக வெளிநாட்டமைச்சு மன்னிப்புக் கோருகின்றது.

வருகை தரும் சேவை பெறுநர்கள் தமது விடயங்கள் சார்ந்த சேவைகளின் சாத்தியக்கூறுகள் குறித்து பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி, அறிந்து கொள்ள முடியும்:

கொன்சியூலர் விவகாரப் பிரிவு, கொழும்பு 01 0112338812 / 0112338843.

பிராந்திய அலுவலகங்களான யாழ்ப்பாணம் 0212215 970, திருகோணமலை0262223182,

கண்டி 0812384410,

குருநாகல் 0372225941.

## அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின்...

அமரர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, 1906 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் திகதி கொழும்பு சேதவத்த வளவ்வையில் பிறந்தார். டபிள்யூ ஜெயவர்த்தன மற்றும் ஹெலினா ஆக்னஸ் விஜேவர்த்தன ஆகியோரின் பதினொரு பிள்ளைகளில் மூத்தவராக இவர் பிறந்தார். சட்டக் கல்லூரியில் நுழைந்த பிறகு, அவர் சட்டம் பயின்றார் மற்றும் ஒரு வழக்கறிஞராக வாழ்க்கையில் நுழைந்தார்.

1943 ஆம் ஆண்டு நடைபெற்ற களனி இடைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மாநிலங்களவை உறுப்பினரான ஜே. ஆர். ஜயவர்தன ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட போது அதன் இணைப் பொருளாளராக நியமிக்கப் பட்டார்.

1947ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் களனி பாராளுமன்ற உறுப்பினராகி, அந்த ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய அரசாங்கத்தின் முதல் நிதி அமைச்சராகப் பதவியேற்றார்.அன்னாரின் பிறந்த தினத்தையிட்டு இன்று விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## புதிய விலையில் பழைய...

ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் ஆர்.எப். அன்வர் சதாத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக வியாபார நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் நடைபெறுவதுடன், அரிசியை கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும் நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர். இந்நிலையில், பொருட்களை பதுக்கி வைத்து விற்பனை செய்பவர்களையும் பிடித்து சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தெரிவித்தார்.

## தமது உறவுகளை...

கடந்த 10.06.2021 அன்று இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் வைத்து 38 இலங்கையரை இந்திய மத்திய புலனாய்வுத்துறையினர் கைது செய்தனர்.

இவர்கள் வடக்கு கிழக்கு மாவட்டங்களை சேர்ந்தவர்கள். இந்தியாவின் மத்திய புலனாய்வு அமைப்பு, சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்ல முற்பட்டதாக கைது செய்து கர்நாடகா பொலிசாரிடம் ஒப்படைத்ததிலிருந்து இதுவரை தமது பிள்ளைகள், கணவன்மாருக்கு என்ன நடந்தது என்பது தெரியாதுள்ளனர்.

இலங்கையிலுள்ள இந்திய தூதரகம், வெளிநாட்டமைச்சு மற்றும் இந்தியாவிலுள்ள இலங்கை தூதரகங்களுக்கு தெரியப்படுத்தியும் தமது உறவுகளுக்கு என்ன நடந்தென்பது இதுவரை தெரியில்லையென உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 38 பேரின் உறவினர்களும் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தமது உறவுகளை இந்தியா விடுதலை செய்யவேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து அதன் பின்னர் என்ன நடந்தது? எங்கு இருக்கின்றனர்? எப்படி இருக்கின்றார்கள்? என்ற எந்தத் தகவலும் தொடர்பும் தங்களுக்கு இல்லையென பெற்றோர் மற்றும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தின் பெங்களூர் பொலிசாரல் கைதுசெய்யப்பட்ட தமது உறவுகளை விரைவில் விடுதலை செய்ய அனைத்து தரப்பினரும் ஆவண செய்யவேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சர்வதேச வர்த்தகத்தை...

இலங்கை இந்திய சமூகம் (SLIS) கொழும்பு தாஜ் சமுத்ரா நட்சத்திர விடுதியில் நேற்றுமுன்தினம் (15) மாலை நடத்திய ஒன்றுகூடல் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

2048 ஆண்டாகும் போது வறுமை இல்லா, வளமான நாடாக இலங்கை உருவாக வேண்டும். அத்துடன், வர்த்தக ஒருங்கிணைப்பே இந்தியாவுடனான இலங்கையின் உறவைத் தீர்மானிப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

மேலும் உரையாற்றிய ஜனாதிபதி, 1946 இல், இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னர் முதலாவது ஆசிய உறவுகள் தொடர்பான மாநாடு நடந்தது. இது ஆசிய நாடுகளை ஒன்றிணைக்க வழிவகுத்தது. பின்னர் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு ஒன்றிணையஅது வழிவகுத்தது. அதற்கமைய ஏனைய நாடுகளின் பிரதானியாக இந்தியா இருக்கிறது. இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் ஆசியாவின் மூன்று முக்கிய சக்திகள்.

இந்திய பொருளாதார உறவுகளை வென்றெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த சகாப்தத்தில் தென் கிழக்கு மற்றும் கிழக்கு ஆசிய பிராந்தியத்தின் ஒருங்கிணைப்பைக் காண்கிறீர்கள். தெற்காசியாவில் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? எங்கள் கருத்துப்படி, இந்தியா, இலங்கை, நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகியவற்றை உள்ளடக்கிய வர்த்தக ஒருங்கிணைப்பு உருவாக வேண்டும். இந்தியாவுடன் வர்த்தக ஒருங்கிணைப்பை எட்டுவது முக்கியமானது. 2048 ஆண்டாகும் போது வறுமை இல்லா, வளமான நாடாக உருவாக வேண்டும். உயர் நடுத்தர வர்க்கத்தினருக்கு போதுமான மொத்த உள்நாட்டு வருமானம் இருக்க வேண்டும். இல்லை என்றால் வளமான பொருளாதாரம் இருக்க வேண்டும். வர்த்தக ஒருங்கிணைப்பே, அண்டை நாடான இந்தியாவுடனான நமது உறவை, தீர்மானிக்கிறது. வர்த்தக ஒருங்கிணைப்பு பொருளாதார அடிப்படையை வழங்குகிறது. தேசிய பாதுகாப்பு மற்றும் சிறந்த அரசியல் உறவுக்கு பொதுவான பொருளாதார அடித்தளம் அவசியமாகும்.

2018, 2019 ஆம் ஆண்டுகளில் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தங்களை செய்துகொள்ள முயற்சித்தோம். அதற்குத் தடையாக இருந்த குழுக்கள் அனைத்தையும் நிறுத்தினேன். இதனைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என அரசியல் உயர்மட்டத்துக்கு அறிவித்துள்ளேன். எவ்வாறாயினும், இலங்கை தனது சர்வதேச வர்த்தகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால், நாம் வேறுவிதமாக சிந்திக்க வேண்டும். அதற்காக, அனைத்து சர்வதேச வர்த்தகத்தையும் கையாளும் சர்வதேச வர்த்தக அலுவலகமொன்றை நிறுவ முடிவு செய்துள்ளேன். நிதி அமைச்சின் கீழ் இந்த அலுவலகம் நிறுவப்படும். இதன்மூலம் எமது வர்த்தகத்தை, சர்வதேச வர்த்தகம் வரை விரிவுபடுத்த முடியும். நிறுவனங்களை மறுசீரமைப்பதில் கவனம் செலுத்தி வருகிறோம். நமது வர்த்தகச் செயற்பாடுகளை எளிதாக்க தனியான அமைச்சு உருவாக்கப் பட வேண்டும். பல்வேறு வர்த்தக ஒப்பந்தங்கள் நிலுவையிலுள்ளன. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஒன்றிணைந்து செயற்பட மேலும் பல வாய்ப்புகள் உள்ளன. புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி, சுற்றுலா, வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் நாம் இணைந்து செயல்பட முடியும் என்றார்.

முதல் பெண்மணி சிரேஷ்ட பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்திய இலங்கை சங்கத்தின் தலைவர் கிஷோர் ரெட்டி, ஜனாதிபதியின் பணிக்குழு பிரதானி மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

# சிறு விவசாயிகளுக்கும் யூரியா உர மூடைகள்

## 50 Kg மூடையை இலவசமாக வழங்க ஏற்பாடு



ஒரு ஏக்கருக்கும் குறைவான வயல் காணிகளைக் கொண்ட 3,75,000 விவசாயிகளுக்கு தலா ஐம்பது கிலோ யூரியா உர மூடை இலவசமாக வழங்கப்படுமென விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

உரத்தின் அளவை இலவசமாக வழங்க ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. விவசாயிகளுக்கு இலவச யூரியா உரம் மற்றும் மும்மடங்கு சூப்பர் உரம் வழங்கும் ஒப்பந்தத்தில் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு நேற்றுமுன்தினம் விவசாய அமைச்சில் கைச்சாத்திட்டுள்ளது.

அந்த ஒப்பந்தங்களின்படி இந்த போகத்துக்குத் தேவையான யூரியா உரம் மற்றும் மும்மடங்கு சூப்பர் உரம் வழங்குவதற்காக 55 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மனித பாவனைக்கு உகந்ததல்லவென விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துக்கு வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ பதிலளித்திருந்தார்.

## கைதொழில் அபிவிருத்திக்கு... 03ஆம் பக்கத் தொடர்

மற்றும் 18.75 மில்லியன் யூரோவும் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி Rene Van Berkel தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய திட்ட அமுலாக்கல் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் காலநிலை மாற்றம், எரிசக்தி முகாமைத்துவம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற துறைகளின் அபிவிருத்திக்காக இந்த நிதி உதவிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர்களுக்கான... 03ஆம் பக்கத் தொடர்

வளங்களை ஒன்றிணைப்பது போன்ற விடயங்களும் இதன் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றன.

இலங்கையிலுள்ள மொத்த சிறுவர்களுக்கும் தரமான ஆரம்ப, இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி, போதுமான சுகாதாரப் பாதுகாப்பு, வன்முறைகள், துஷ்பிரயோகங்கள், புறக்கணிப்பு மற்றும் சுரண்டல்களிலிருந்து பாதுகாத்து, உரிய ஊட்டச்சத்தைப் பெற்றுக் கொள்வதற்கான அணுகலை உறுதிசெய்தல் போன்ற அவர்களில் தாக்கம் செலுத்தும் தீர்மானங்களை எடுக்கும்போதான பங்களிப்புக்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்தல், பாரபட்சமின்றி சகல சிறுவர்களும் முழுமையான வளர்ச்சியை அடைவதற்கான பங்களிப்பைச் செலுத்துவதும் இதன் நோக்கங்களாகும்.

## திருத்தச் சட்டமூலங்களுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

சட்டமூலங்களிலும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார். இதற்கமைய, 2022ஆம் ஆண்டு 22ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் (திருத்தச்) சட்டம் என்ற பெயரிலும், 2022ஆம் ஆண்டு 23ஆம் இலக்க வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) திருத்தச் சட்டம் என்ற பெயரிலும், 2022ஆம் ஆண்டு 24ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் (திருத்தச்) சட்டம் என்ற பெயரிலும் இந்த மூன்று சட்டங்களும் இன்றிலிருந்து நடைமுறைக்கு வரும். இந்தச் சட்டமூலங்கள் மூன்றும் கடந்த 08ஆம் திகதி விவாதமின்றி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தன.

## வடக்கு மாகாணத்தில்... 03ஆம் பக்கத் தொடர்

பொதுவானதொரு முடிவு எட்டப்படும் என தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுகந்த கஹவத்த, பிரதி பணிப்பாளர், மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் ம.கி வில்வராஜா, கரைதுறைப் பற்று உதவிப் பிரதேச செயலாளர் சி.ஷர்மி, கடற்றொழில் வள மாவட்ட உத்தியோகத்தர் ரமேஸ் கண்ணா, மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக துறை சார்ந்த உத்தியோகத்தர்கள், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சம்மேளன அங்கத்தவர்கள், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள், சமாசங்களின் அங்கத்தவர்கள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## கொழும்பிலிருந்து ... 03ஆம் பக்கத் தொடர்

அதிகாலை 5.03 அளவில் பதுளை ரயில் நிலையத்தை சென்றடையும்.

பதுளையில் மாலை 7.30 இற்கு புறப்படும் ரயில் அதிகாலை 5.28 மணியளவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை வந்தடையும்.

இரவு நேர தபால் சேவை ரயில் நாளாந்தம் இரவு 8.30 மணியளவில் பதுளையிலிருந்து புறப்படவுள்ளதோடு, மறுநாள் காலை 7.32 இற்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை வந்தடையும்.

மாலை 6.05 அளவில் கொழும்பிலிருந்து புறப்படவுள்ள ரயில், மறுதினம் அதிகாலை 5.24 அளவில் பதுளை ரயில் நிலையத்தை சென்றடையும்.

## ஐ.நா. இறுதி அறிக்கையில்...

பிரதிநிதியிடம் இந்த மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் செயலாளர் அஷ்ஷெய்க் P.A.S.சுஃப்யான் மற்றும் அமைப்பாளர் A.C.M.கலீல் ஆகியோரால் இந்த மகஜர் கையளிக்கப் பட்டுள்ளது.

ஐ.நா செயலாளர் நாயகம் இலங்கை தொடர்பில் காட்டமான அறிக்கையை வெளியிட்டு, அதில் பல்வேறு விடயங்களை குறிப்பிட்டிருந்தமையை வரவேற்பதாகவும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டதிலிருந்து இன்று வரை சரியான தீர்வுகள் மற்றும் மறுவாழ்வின்றி அவதியுற்று வருவது கவலைக்குரியதென மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. மறக்கப்பட்ட சமூகமாக இருக்கும் வட மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்க கூட்டத்தொடரில் கவனம் செலுத்தி, இறுதி அறிக்கையில் உள்வாங்கி, சர்வதேசத்தின் கவனத்தை தமது பக்கமும் திருப்ப வேண்டுமென அதில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பாஸ்போட் அலுவலகம்...

ஒரு நாள் மற்றும் பொது சேவைகளின் கீழ் கடவுச்சீட்டு பெறுவதற்கு திகதிகள் மற்றும் நேரங்களை முன்பதிவு செய்த விண்ணப்பதாரர்களுக்காக மட்டுமே அன்றைய தினம் பிரதான அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் திறக்கப்படுமென குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளதுடன், வேறு சேவைகள் வழங்கப்படமாட்டதெனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனவே, எக்காரணம் கொண்டும் முன்கூட்டியே திகதிகள் மற்றும் நேரங்களை முன்பதிவு செய்யாதவர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை குடிவரவு, குடியகல்வு திணைக்கள தலைமை மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டாமென்றும் என்று பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரச ஊழியர்களது விடுமுறை...

வகையில் சம்பளமில்லாத விடுமுறை வழங்கப்படுமென அமைச்சு விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுதிகாண் காலத்திலும் பணியாளர்கள் அல்லாத சேவைகளிலுள்ள அரச அதிகாரிகள் மாத்திரமே இவ்வாறு விடுப்பு எடுக்க முடியுமென சுற்றறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்நிலையில் ஊதியமின்றி விடுமுறையிலிருக்கும் அரச அதிகாரிகள், அரசுப் பணியிலிருந்து விலகுவதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருந்தால், அவர்கள் அரசுப் பணியிலிருந்து விலக அனுமதிக்கப்படுவார்களென்றும் சுற்றறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



## இன்றுவரை நான்தான் மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபையின் உபதவிசாளர்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



சட்டத்திட்டங்களின் படி இன்று வரை நான்தான் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் உபதவிசாளர் என மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் உப தவிசாளர் திருமதி.றஞ்ஜினி கனக ராசா தெரிவித்துள்ளார்.

களுதாவளை பிரதேச சபையில் அமைந்துள்ள அவரது காரியாலயத் தில் வியாழக்கிழமை(15) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதேஅவர்இவ்வாறுதெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக் கையில்.

நான் எனது சொந்த விடயம் கார ணமாக திடீரென கடந்த 2022.07.05 அன்று தவிசாளருக்கு அறிவித்து விட்டு வெளிநாடு சென்றிருந்தேன். 1987 ஆம் ஆண்டு 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின்படி கடமையிலி ருக்கின்ற உப தவிசாளர் அல்லது தவிசாளர் யாராயினும் அவர்கள் பதவியை நேரடியாக தேர்தல் ஆணையாளரிடம் சென்று இரா ஜினாமா செய்திருக்க வேண்டும், அல்லது உரிய நபர் மரணித்திருக்க வேண்டும், அல்லது அவர் தொடர்ச் சியாக அறவித்தலின்றி மூன்று சபை அமர்வுகளுக்கு கலந்து கொள்ளா திருந்திருக்க வேண்டும். இவ்வாறு எதுவும் நடைபெறாமலுள்ள நிலையில் உப தவிசாளரான நான் இருக்கும் இத்தருணத்தில் எமது சபையில் உள்ள பிறிதொரு உறுப்பி னரை ஏனைய உறுப்பினர்கள் ஒன்றி ணைந்து தற்காலிக உப தவிசாளராக நியமித்திருந்தார்கள். இது அவர்க ளின் அறியாமையாகும்.

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க உள்ளூராட்சி சட்டத்தின்படி உரிய பதவி வகிக்கும் உறுப்பினர் இரா ஜினாமா செய்யுமிடத்து, தேர்தல் ஆணையாளர் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்ததன் பின்னர் உள்ளூராட்சி ஆணையாளர் பிரதேச சபைக்கு வந்து அவர் முன் னிலையில் தெரிவு இடம்பெறல் வேண்டும். அல்லது உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சபைக்கு வந்து அவர் முன்னிலையில்தான் உரிய வெற்றிடமான பதவிக்கு உறுப்பினர் களிடமிருந்து தெரிவு செய்யப்படல் வேண்டும் என்பதுதான் சட்டமா கும்.

இது எதுவும் நடைபெறாமல் எமது சபைக்கு உப தவிசாளராக நான் உத்தியோகபூர்வமாக இருக்கையில் தற்காலிகமாகவேனும் அவ்வாறு ஒரு தெரிவை சட்டத்தின்படி மேற் கொள்ளமுடியாது. இதனைநினைத்து வெட்கப்படுகின்றேன்.

எனவே அன்றிலிருந்து இன் றுவரை நான்தான் இந்த பிரதேச சபையில் உபதவிசாளராக இருந்து செயற்பட்டு வருகின்றேன்.

சட்டத்தின்படி எனக்கு வழங்கப் பட்ட பதவியை வேறு எவரும் கைப் பற்ற முடியாது. தற்காலிகமாக உப தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட தாக கருதப்படும் உறுப்பினர் நான் இல்லாத காலத்தில் உபதவிசாளர் என்ற பதவியை வைத்து எந்த நடவ டிக்கைகளில் ஈடுபட்டாரோ அதனை மீளப்பெற வேண்டும் என்ற கோரிக் கையை நான் வியாழக்கிழமை(15) நடைபெற்ற சபை அமர்வின்போ தும் முன்வைத்துள்ளதோடு, இனி மேலும் அவர் தொடர்ந்து தற்காலிக உபதவிசாரளாக இயங்கமாட்டார் என நினைக்கின்றேன். அவ்வாறு அவர் இயங்கினால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் நான் தயாராக இருக்கின்றேன் என்றார்.

## மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்துக்கு மட்டக்களப்பில் ஆதரவு தெரிவிக்கும் போராட்டம்



மட்டக்களப்பு விசேட நிருபர்

பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு விடுதலை வேண்டி மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் போராட்டம் நேற்று (16) காந்திப் பூங்காவில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்பாடு செய்திருந்த இக் கூட்டத் தில் கலந்து கொண்டோர் விடு தலையை வலியுறுத்தி தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வில் இயேசு சபைத் துறவி அருட்தந்தை ஜோசப்மேரி, அமலமரித் துறவற சபையின் அருட் தந்தை யோகராஜா, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பி னர்களான கி.துரைராசசிங்கம், பா.அரியநேத்திரன், ஞா.சிறிநே சன், கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோண், முன்னாள் அரசாங்க அதிபர் மா.உதயகுமார், பட்டிப்பளை பிரதேச சபையின் தலைவர் எஸ்.புஸ்பலிங்கம் , செங் கலடி பிரதேச சபையின் தலைவர் எஸ்.சர்வானந்தன், மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணித்தலை வர் லோ.தீபாகரன் உள்ளிட்ட உள் ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## அறிவுத் திறனுடைய பிரஜைகளை உருவாக்குவதற்கு போசாக்கு உணவுகளை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்

ஒலுவில் விசேட நிருபர்

நாட்டில் ஆரோக்கியமான சிறந்த அறிவுத் திறனுடைய பிரஜைகளை உருவாக்குவதற்கு போசாக்கு நிறைந்த உணவுகளை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டுமென, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் நடைமுறைப்ப டுத்தப்பட்டுள்ள முன்பள்ளி மாண வர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு வியாழக்கிழமை (15) பொத்துவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மலீக் தலைமையில் நடை பெற்ற செயலமர்வில் சுகாதார வைத் தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முன்பள்ளி பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகளின் பாதுகாப்பான உணவு விடயத்தில் முன்பள்ளி ஆசி ரியர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

ஒரு பிள்ளையின் வளர்ச்சி 05 வய துக்குள் முக்கிய இடத்தை வகிக்கின் றது.

இவ் வளர்ச்சிக்கு தேவையான சிறந்த ஊட்டச்சத்துள்ள உணவுகளை வழங்க வேண்டும். ஒரு பிள்ளையின் நடத்தையில் மாற்றம் காணப்பட்டால் பெற்றோருக்கு ஆசிரியர்கள் அறிவிக்க வேண்டும். ஆரோக்கியமான சமூ தாயத்தை உருவாக்குவதன் மூலம் நாட்டில் ஆரோக்கியமான சமூகம் உரு வாகும் என்றார்.

## அட்டாளைச்சேனையில் மர்ஹூம் அஷ்ரபின் 22ஆவது நினைவேந்தல் நிகழ்வு





ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

'அன்னாருக்காய் பிரார்த்திப் போம், அவர் வழியில் பயணிப் போம்' எனும் தொனிப்பொருளில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட் சியின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் 22வது நினைவேந்தல் நிகழ்வு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச் சேனை மத்திய குழுவின் ஏற்பாட் டில் நேற்று காலை 6.30 மணியள வில் அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் கலாசார மண் டபத்தில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட் சியின் அட்டாளைச்சேனை மத்திய குழுவின் தலைவர் எஸ்.எல்.ஏ. ஹலீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலை வரும், பாராளுமன்ற உறுப்பினரு மான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதி யாகக் கலந்து கொண்டு மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் பற்றி விசேட உரை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக் கது.

கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி யின் பொதுச் செயலாளர் மௌலவி யூ.எம்.நியாஸின் நெறிப்படுத்தலின் மூலம் கிழக்கிலங்கை அரபுக் கல் லூரியின் மாணவர்களினால் யாசின் ஓதி தமாம் செய்யப்பட்டன.

இதன் போது கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி எம்.ஐ.எம்.அஷ்ரபினால் விசேட துஆப் பிரார்த்தனை நிகழ்த் தப்பட்டது.

அன்னாருக்காய் பிரார்த்திப் போம், அவர் வழியில் பயணிப் போம் எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும், உயர் பீட உறுப்பினருமான எம். எஸ்.உதுமாலெப்பை,ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர்,ஒலுவில் பிரதேச அமைப்பாளர்கள், அதிபர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## திருகோணமலை மாவட்ட எழுத்தாளர் ஒன்று கூடல் வைபவம் இன்று

கிண்ணியா மத்திய நிருபர்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல் கள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள திருகோணமலை மாவட்ட எழுத்தாளர் ஒன்று கூடல் வைபவம் இன்று (17) காலை 9.00 மணிக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத் தில் இடம்பெறும்.

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல் கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தலைமையில் நடை பெறும் இவ்வைபவத்தில் முதன்மை அழைப்பாளராக கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ. எம்.டபிள்யூ. திசாநாயக்கவும், சிறப்பு அழைப்பாளராக கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.ஸீ.எம். முஸ்இலும் கலந்து கொள்வர்.

இவ்வைபவத்தில் தென்கிழக் குப் பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் ஏ.எப்.எம். அஸ்ரப் 'கவிதை இலக்கியத்தின் பண் புகள், பரப்புகள், வடிவங்கள் திருகோ ணமலையில் ஆளுமை பதித்த இலக் கிய கர்த்தாக்கள்' என்ற தலைப்பிலும், ஓய்வுநிலை அதிபரும், சிரேஸ்ட ஊடக வியலாளருமான சி.நவரத்தினம் 'இலக் கியமும், இளையோரும்' என்ற தலைப் பிலும் உரையாற்றுவர். அதேபோல திருமதி பானு சுதாகரன் 'படைப்பா ளிகளின் எல்லை விரிவாக்கம்' என்ற தலைப்பிலும், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பாலசுகுமார் 'கூத்து மற்றும் நாடக வடிவங்களும், திருகோ ணமலையில் கூத்து மற்றும் நாடக பிரதியாக்கத்தின் செல்நெறியும்' என்ற தலைப்பிலும் உரையாற்றுவர்.

முழுநாள் நிகழ்வாக இடம்பெறும் இவ்வைபவத்தில் திருகோணமலை மாவட்ட எழுத்தாளர்கள் அழைக்கப் பட்டுள்ளனர்.

## பனிச்சையடி முதலாம் குறுக்கு வீதிக்கு தார் இடும் பணிகள் ஆரம்பம்



மட்டக்களப்பு குறூப் நிருபர்

'எழுச்சி மிகு' மாநகர திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பனிச் சையடி முதலாம் குறுக்கு வீதியை தார் வீதியாக அபிவிருத்தி செய்யும் பணிகள் நேற்று முன்தினம் (15) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையின் 2022ம் ஆண்டுக்கான பாதீட்டு நிதியின் ஊடாக மட்டக்களப்பு மாநகர சபையின் 02ம் வட்டார உறுப்பினர் செல்வி. தாயளகுமார் கௌரியின் பாதீட்டு முன்மொழி வுக்கு அமைய 2 மில்லியன் ரூபா செலவில் குறித்த வீதியானது அபி விருத்தி செய்யப்பட்டு வருகின்றது. பல ஆண்டு காலமாக குண்டும் குழி யுமாக கவனிப்பார் அற்று காணப் பட்ட இவ்வீதியானது சுமார் 220 மீற்றர் நீளத்திற்கு அபிவிருத்தி செய் யப்படவுள்ளது. மேற்படி வீதியின் அபிவிருத்தி பணிகளை மட்டக்க ளப்பு மாநகர சபையின் பதில் முதல் வர் கந்தசாமி சத்தியசீலன், மாநகர சபையின் உறுப்பினர்களான செல்வி. தயாளகுமார் கௌரி, அந்தோணி கிருரஜன், மாநகர சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் டி.ஜே. கிறிஷ்டிராஜ் மற்றும் பலரும் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

## கல்முனையில் திலீபனின் உருவப்படம் தாங்கிய வாகனப் பேரணி



காரைதீவு குறூப் நிருபர்

திலீபனின் நினைவு வாரத்தை முன்னிட்டு பொத்துவிலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிய அவரு டைய திருவுருவப்படம் தாங்கிய வாகன பேரணி நேற்று முன்தினம் (15) கல்முனை பிரதேசத்தை வந்த டைந்தது.

நேற்று முன்தினம் மாலை பாண் டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலுக்கு சென்றபோது மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

திலீபனின் 35ஆவது நினைவேந் தலை முன்னிட்டு அவர் உண்ணா விரதத்தை ஆரம்பித்த நேற்று முன் தினத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் பொத்து வில் தொடக்கம் நல்லூர் வரையான திலீபன் நினைவு ஊர்திப் பயணம் பொத்துவில்லில் ஆரம்பித்து வைக் கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் இளைஞர் அணியின் ஏற்பாட் டில் மேற்கொள்ளப்படும் இவ்வூர் திப் பவனி அம்பாறை மாவட்டத் தலைவர் துசானந்தன் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்தி ரகுமார் பொன்னம்பலம், செயலா ளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டு குறித்த ஊர்திப் பவனியை ஆரம்பித்து வைத்தனர்.

பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்ட இப்பவனியானது வடக்கு கிழக்கு மாகாணங்கள் தழுவிய ரீதியில் அனைத்து மாவட்டங்கள் ஊடாகவும் பயணித்து இறுதியில் யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள திலீபன் நினைவுத் தூபி வரை சென்று நிறைவ டையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீனவர்களை அச்சுறுத்தும் முதலைகளை பிடிக்க முதலைக்கூடு

வெல்லாவெளி தினகரன் நிருபர்



கோட்டைக்கல்லாறு,பெ ரியகல்லாறு கிராமத்தை சூழவுள்ள வாவியில் மீன்பி டிக்கும் மீனவர்களை சூட்சு மமான முறையில் இலக்கு வைத்து, பின்தொடர்ந்து கடித்துக்குதறி அட்டகா சம் செய்யும் முதலைகளை பிடிப்பதற்கு மட்டக்களப்பு பிராந்திய வனவிலங்கு பரி பாலன பாதுகாப்பு திணைக்க ளத்தினால் வியாழக்கிழமை(15) பெரியகல்லாறு வாவியில் முத லைக்கூடு ஒன்று வைக்கப்பட்டுள் ளது.

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட பெரியகல்லாறு மற்றும் கோட்டைக்கல்லாறு கிரா மத்தை அண்மித்துள்ள வாவியில் மீன்பிடிக்கும் மீனவர்களை முத லைகள் பிடித்து காயப்படுத்தி வரு கின்றது.இதுவரைக்கும் வாவியில் மீன்பிடித்த 4 பேரை காயப்படுத் தியுள்ளது.கடந்த 7 நாட்களில் இரண்டுபேரை முதலை கடித்து காயப்படுத்தியுள்ள நிலையில் மீன வர்கள் இருவர் தற்போது வைத் தியசாலையில் சிசிச்சை பெற்று வருவதாக பிரதேச மீனவர்கள் தெரிவிக்கின்றார்கள். இவ்வாறு மீன்பிடிப்பதற்கு அட்டகாசம் செய்யும் முதலைகளை பிடிப்ப தற்கு கம்பிக்கூடு நேற்று முன்தி னம் பெரியகல்லாற்று வாவியில் வைக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித்தொழிலை மேற் கொண்டுவரும் மீனவர்கள் வாவியில் மீன்பிடிப்பதற்கு அச்சப் படும் துர்ப்பாக்கிய நிலைக்கும், மனநிலை பாதிப்புக்கும் தள்ளப் பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

இவ்விடயமாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் களு தாவளை பிரதேச சபை உறுப்பினர் த.சுதாகரனிடம் கோட்டைக்கல் லாறு, பெரியகல்லாற்றைச் சேர்ந்த 300 மேற்பட்ட மீனவர்கள் தெரி யப்படுத்தியதையடுத்து அவர் மட் டக்களப்பு மாவட்ட வனவிலங்கு பரிபாலன பாதுகாப்பு திணைக் களத்திற்கு தெரிவித்து, திணைக் களத்தின் மாவாட்ட பொறுப்ப திகாரி அ.கலீல் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டு முதலைக் கூடு வைக்கப்பட்டுள்ளது.




# மக்கள் நலன்சார்ந்த வேலைத்திட்டங்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தக்கூடாது

## அதிகாரிகளுக்கு பணிப்பு



மக்கள் நலன்சார்ந்த வேலைத் திட்டங்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தக்கூடாது என அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களின் செயற்றிட்ட மீளாய்வுக் கூட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் கூறுகையில்,

கடந்த காலங்களில் எமது மக்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட காணிகளை திடீரென வனவளப் பாதுகாப்பு, வன ஜீவராசிகள் போன்ற திணைக்களங்கள் தம்மால் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அறிவித்து விவசாய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவது நல்லதல்ல.

கடந்த காலங்களில் விவசாயம் மேற்கொள்ளப்பட்ட அனைத்து காணிகளிலும் இந்தமுறை பெரும்போக பயிர் செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

சம்மந்தப்பட்ட காணிகள் தொடர்பாக பிரச்சினைகள் இருப்பின், பெரும்போக பயிர் செய்கை நிறைவடைந்த பின்னர் கலந்துரையாடி நியாயமான தீர்வினைக் காணமுடியும். இதுதொடர்பாக வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் தொடர்பான துறைசார் அமைச்சர் மஹிந்த அமரவீரவிற்கும் அறிவித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சராகிய நான் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில், எமது மக்களின் வாழ்வாதாரத்திற்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பொருத்தமான வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அனுமதியளித்து வருகிறேன். சரியான ஒழுங்குமுறையில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்படும் காலதாமதத்தினை கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதுதொடர்பாக அதிகாரிகளுக்கு ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் என்னுடன் தொடர்பு கொள்ள வேண்டுமே தவிர, ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு யாரும் இடையூறுகளை ஏற்படுத்தக் கூடாது. கிளிநொச்சி மாவட்டத்தில் இக்காலப்பகுதியில் 196 வேலைத் திட்டங்கள் கிடைத்துள்ளன. இதுவரை 178 வேலைத்திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பூரணப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்களை மக்கள் பயனடையும் வகையில் செயற்படுத்துவது மற்றும் பூரணப்படுத்தப்படாத வேலைத் திட்டங்களை முன்னகர்த்துவது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் அமைச்சர் இதன்போது கலந்துரையாடினார்.

மேலும், அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை பூரணப்படுத்துவது மாத்திரமல்லாமல், அவற்றை மக்கள் பயனடையும் வகையில் செயற்படுத்துவதையும் அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பையும் உற்பத்தியையும் வலுப்படுத்தும் வகையில் வீட்டுத் தோட்டம் பற்றிய விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக மக்கள் போராட்டம்



**யாழ். விசேட நிருபர்**

கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் உறவினர்கள் வட மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 12 அரசியல் கைதிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாது விசாரணைகளை மேற்கொள்ளாது தொடர்ச்சியாக தடுத்து வைத்திருப்பதாக இவர்கள் தெரிவித்தனர். உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் 12 அரசியல் கைதிகளின் உறவினர்களும் வடக்கு மாகாண ஆளுநர் செயலக முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# யாழ்.பல்கலை மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான நிலையம் திறப்பு



**கோப்பாய் நிருபர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான நிலையம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட கட்டடத் தொகுதியின் கீழ்த்தளத்தில் உருவாக்கப்பட்ட இந்த மாற்றுத் திறனாளிகளுக்கான நிலையம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவினால் திறந்து வைக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கும் சம வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும் ஊக்குவிக்கும் முகமாகவும் அவர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்காக, இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

உலக வங்கியின் செயற்றிட்டத்தில் 18 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்நிலையம் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# கைதடியில் ஆசிரியை மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி வடக்கு பகுதியில் நேற்று பாடசாலை ஆசிரியை ஒருவர் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். கைதடி வடக்குப் பகுதியைச் சேர்ந்த 42 வயதான பாடசாலை ஆசிரியை ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார். இதனால் படுகாயமடைந்த ஆசிரியை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆசிரியையின் வீட்டிற்கு மோட்டார் சைக்கிளொன்றில் வந்த இரு நபர்கள் இரும்புக் கம்பியால் தாக்குதல் நடாத்தி விட்டு தப்பித்து சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆய்வு மாநாடு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆய்வு மாநாடு கடந்த புதன் கிழமை கிளிநொச்சி – அறிவியல் நகர் வளாகத்தில் அமைந்துள்ள விவசாய பீட மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடம், வடக்கு – கிழக்கை மையப்படுத்தி உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆய்வு மாநாட்டை 2015ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் நடாத்தி வருகிறது. அந்த வரிசையில், அதன் எட்டாவது மாநாடு கடந்த புதன்கிழமை விவசாய பீடாதிபதி கலாநிதி எஸ். வசந்தரூபா தலைமையில் இடம்பெற்றது.



“உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்காக வளர்ந்து வரும் பொருத்தமான விவசாயத் தொழில்நுட்பங்கள்” (*“Emerging Appropriate Agrotechnologies Towards Food Sustainability”*) என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற ஆய்வு மாநாட்டில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

ஜப்பான் கய்சு பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் ஒகடா கைசு ஜப்பானிலிருந்து வருகை தந்து பிரதான பேச்சாளராக கலந்து கொண்டு, “ஜப்பானின் ஸ்மார்ட் விவசாயம் : ஒரு பார்வையும் அதன் போக்கும்” (*Smart Agriculture’ in Japan: An Overview of the Trend*) எனும் தலைப்பில் முதன்மைப் பேருரையாற்றினார். இவ்வாய்வு மாநாட்டில் இலங்கை மற்றும் சர்வதேச ஆய்வாளர்களால் பயிராக்கவியல், விவசாய உயிரியல், விலங்கு விஞ்ஞானம், மண், சூழல் மற்றும் பொறியியல் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், நீர், பொருளாதாரம் மற்றும் அறிவூட்டல் ஆகிய உபதொனிப்பொருளில் 48 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

# பட்டா வாகனம் மோதி விபத்து

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை பகுதியில் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் நபரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

துவிச்சக்கரவண்டியில் சென்ற நபரை பட்டா வாகனம் மோதியமையால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் மட்டுவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த 35 வயதான நபரொருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# முல்லைத்தீவு மாவட்ட களப்புகளுக்கான அபிவிருத்திப் பணிகள் வரவுசெலவு திட்டத்தில் உள்வாங்கப்படும்

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**



முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள களப்புகளுக்கான அபிவிருத்திப் ணிகள் எதிர்வரும் வரவுசெலவு திட்டத்தில் உள்வாங்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு இடங்களை பார்வையிட்டுள்ளதுடன், மாவட்ட கடற்தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்துள்ளார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

இங்குள்ள வளங்களை எவ்வாறு அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தலாம் என்பது தொடர்பில் நேரடியாக கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மாவட்ட கடற்தொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத தொழில்களால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது.

கடற்தொழிலாளர்களின் எரிபொருள் பிரச்சினைக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மீனவர்களுக்கான எரிபொருளினை வழங்கி வருகின்றது. ஜனாதிபதி பிரதமருடன் கதைத்து எரிபொருள் இறக்குமதியினை தனியாருக்கு வழங்கினால் போதியளவு எரிபொருள் கிடைக்கும். அதற்கான நடவடிக்கையினை முயற்சி செய்கின்றோம். எரிபொருள் போதியளவு கையிருப்பில் இருக்குமாகவிருந்தால் தொழிலை மேற்கொண்டு செய்து அதன் பின்னர் எரிபொருளுக்கான விலையினை குறைக்கும் நடவடிக்கைக்கு செல்லலாம்.

மீனவர்களின் தொழில் நடவடிக்கையில் மாற்றுத்தீர்மானம் தொடர்பில் யோசித்துள்ளோம் நீர்வேளாண்மையான கடலட்டை வளர்ப்பது, இறால் வளர்ப்பது, கூடுகளுக்குள் மீன் வளர்ப்பது என்பன உள்ளன. இதனால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள களப்புகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளோம். வட்டுவாகல், சாலை, நாயாறு, கொக்குளாய் கடல் நீர் ஏரிகளை பார்வையிட்டு மாற்றங்களை கொண்டுவருவதற்கான முடிவு எடுக்கப்பட்டு எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் அவை உள்வாங்கப்படும். அடுத்த வருடம் அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

# வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் தீவக வைத்தியசாலைகளுக்கு திடீர் விஜயம்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**



வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திலிப் லியனகே யாழ். தீவகத்திலுள்ள நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு மற்றும் ஊர்காவற்துறை ஆகிய ஐந்து வைத்தியசாலைகளுக்கு அண்மையில் திடீர் விஜயம் மேற்கொண்டிருந்தார். திடீர் விஜயத்தின்போது யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் மற்றும் உத்தியோகத்தர்களும் இணைந்து சென்றிருந்தனர்.

தீவகப் பகுதி வைத்தியசாலைகள் எதிர்நோக்கும் சிக்கல்கள், அங்கு பணியாற்றும் பணியாளர்களது நலன்கள் மற்றும் பொதுமக்களது சுகாதாரத் தேவைகள் குறித்து மாகாண சுகாதாரப் பணிப்பாளர் நேரடியாக கேட்டறிந்து கொண்டார்.

தீவக வைத்தியசாலைகளிலிருந்து கர்ப்பவதிகளை பிற வைத்தியசாலைகளுக்கு இடமாற்றும் போது மருத்துவ பெண் உதவியாளர் ஒருவர் உடன் செல்லவேண்டும், தீவக வைத்தியசாலைகளில் ஆய்வுகூடப்பரிசோதனை வசதிகள் உடனடியாக ஏற்படுத்தப்படவேண்டும், நோயாளர் காவு வண்டி சாரதிகள் விடுமுறையில் செல்லும்போது பதில் கடமை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும், அனலைத்தீவு வைத்தியசாலை விடுதிகளில் நோயாளிகளை அனுமதித்து சிகிச்சை வழங்க வேண்டும், நோயாளர் காவு வண்டி சாரதிகளுக்கு ஓய்வு அறை வசதிகளை ஏற்படுத்துதல், விடுதிகளுக்கான குடிநீர் தாங்கிகள், நெடுந்தீவு வைத்தியசாலையில் ஒரு மாதத்திற்கு தேவையான மருந்துகள் களஞ்சியப்படுத்தப்படல் , மற்றும் சகல தீவக வைத்தியசாலைகளிலும் சிறுவர்களுக்கு தேவையான மருந்துகள் கையிருப்பில் பேணப்படவேண்டும் போன்ற விடயங்கள் தொடர்பில் அதிகாரிகளுக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆலோசனை வழங்கினார். மேற்குறித்த ஆலோசனைகளை உடனடியாக செயற்படுத்துவதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உறுதியளித்தார். வைத்தியசாலைகளின் பணியாளர் தங்குமிடங்களை திருத்தம் செய்தல், மற்றும் நெடுந்தீவு வைத்தியசாலையில் கழிவகற்றலுக்கான வடிகான் மற்றும் கழிவுநீர்தேங்கும் தொட்டி அமைத்தல் ஆகிய நடவடிக்கைகளை உரிய பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி உடனடியாக மேற்கொள்ளுமாறும் மாகாணப் பணிப்பாளர் வழிகாட்டல் வழங்கினார்.

நயினாதீவு வைத்தியசாலையில் பைசர் பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டினையும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தொடக்கி வைத்தார்.

இவ்விஜயத்தின் போது கருத்து தெரிவித்த வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர், தாம் வடக்கு மக்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளைச் செய்ய விரும்புவதாகவும் சுகாதாரப் பணியாளர்கள் அனைவரும் ஒரே குடும்பமாக செயற்பட்டு மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.




# மரக்கறி கொள்வனவுக்கான பணம் கொள்ளை

ஹைபொரஸ்டில் சம்பவம்

கந்தப்பளை ஹைபொரஸ்ட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹைபொரஸ்ட் பிங்கந்தலாவ பகுதியில் திருட்டு சம்பவம் நேற்று முன்தினம் (15) மாலை பதிவாகியுள்ளது.

தம்புள்ளை பகுதியிலிருந்து ஹைபொரஸ்ட் பிரதேசத்தில் மரக்கறி கொள்வனவு செய்ய வந்த லொறி ஒன்றில் வைத்திருந்த ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய் திருடப்பட்டுள்ளதாக ஹைபொரஸ்ட் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தம்புளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு விற்பனைக்காக மரக்கறி வகைகளை கொள்வனவு செய்ய வர்த்தகர் ஒருவர் வழமைப்போல ஹைபொரஸ்ட் பகுதியிலுள்ள பிங்கந்தலாவைக்கு தனது லொறியில் பணத்துடன் வருகை தந்துள்ளார். இவர் பிரதான வீதியோரத்தில் லொறியை நிறுத்தி விட்டு விவசாயி ஒருவரின் மரக்கறி தோட்டத்திற்கு மரக்கறி கொள்வனவு செய்ய சென்றுள்ளார்.

இதன் போது தான் கொண்டு வந்த ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய் பணத்தை லொறில் வைத்து விட்டு சென்றுள்ளார்.

பின்னர் வர்த்தகர் லொறிக்கு வந்து விவசாயிக்கு பணம் கொடுக்க பார்த்த போது அங்கு வைத்திருந்த பணத்தை காணவில்லை.

இதனையடுத்து வர்த்தகர் தனது பணத்தை யாரோ திருடி சென்றுள்ளதை உணர்ந்து பின் ஹைபொரஸ்ட் பொலிஸ்நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை அரம்பித்துள்ளதுடன் இனந்தெரியாத நபர்கள் பணத்தை திருடியிருக்கக்கூடுமெனவும் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மணல் அகழ்வு தொடர்பில் மத்திய மாகாண ஆளுநர் விசேட கவனம்



அக்குறணை குறூப் நிருபர்

மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுவதால் A9 வீதி ஆபத்தான நிலையில் உள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து அவர் அப்பகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்தார்.

இதன்போது சட்டவிரோத மணல் அகழ்வு பணிகளை உடன் நிறுத்துமாறும் அதுதொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

கண்டி, மாத்தளை பிரதான பாதையான ஏ9 வீதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வது தொடர்பில் ஊடகங்களில் வெளியான தகவலின் பிரகாரம், மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே அங்கு விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்தார். அத்துடன் கடும் மழை காரணமாக அடிக்கடி அக்குறணை நகர பிரதேசம் அனர்த்தத்திற்கு உள்ளாவது தொடர்பாகவும் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. மேலும் இப்பகுதியில் அனுமதியின்றி மணல் அகழ்வதை தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதேச செயலகம் மற்றும் பொலிஸாருக்கு பணிப்புரை வழங்கியதுடன், பொது மக்களின் நலனுக்காக ஊடகங்கள் ஆற்றி வரும் பணிகளையும் பாராட்டுவதாக அவர் அங்கு தெரிவித்தார்.

## மத்திய மாகாணத்தில் டெங்கு அபாயம்

மத்திய மாகாணத்தில் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 5000 டெங்கு நோயாளர்கள் இனம்காணப்பட்டுள்ளதாக சுகாதார திணைக்களத்தின் தொற்றுநோய் ஆராய்ச்சி பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

அவர்களின் ஆய்வின்படி கண்டி மாவட்டத்தில் 3957 டெங்கு நோயாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 861 நோயாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 186 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக மத்திய மாகாணத்தில் கடும் மழை பெய்தமையால் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எனவே பொதுமக்கள் தமது சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# சமையல் எரிவாயு சிலிண்டர் மோசடி; இருவர் கைது

கம்பளை நிருபர்

வெற்று சமையல் எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்த இருவரை நாவலப்பிட்டி பொலிஸார் நேற்று முன்தினம் (15) கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் நாவலப்பிட்டி கித்துல்கோட்டை, இம்புல்பிட்டிய பிரதேசங்களை சேர்ந்த 25,30 வயதுகளையுடையவர்கள் என தெரியவந்துள்ளதுடன் இவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும் நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் நடைபெறும் நிகழ்வுக்காக எரிவாயு பெற வேண்டும் எனக் கூறி, அயலவர்களிடமிருந்து 12.5 கிலோ 5 கிலோ எடையுள்ள 16 வெற்று எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொண்டு அதனை விற்பனை செய்துள்ளனர்.

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் 10,000 மற்றும் 15,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களுக்கு வெற்று எரிவாயு சிலிண்டர்களை வழங்கிய பிரதேசவாசிகள், நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில், சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# சூட்சுமமான முறையில் வீட்டுக்குள் கஞ்சா செடி வளர்ப்பு



விசேட அதிரடி படையினர் சுற்றிவளைப்பு

தலவாக்கலை குறூப் நிருபர்

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிளக்பூல் ரூவான்எலிய பகுதியில் கஞ்சா செடி வளர்த்து வந்த ஒருவரை விசேட அதிரடி படையினர் நேற்றுமுன்தினம் (15) வியாழக்கிழமை மாலை கைது செய்துள்ளனர்.

நுவரெலியா பிளக்பூல் ரூவான் எலிய பகுதியில் அமைந்துள்ள தனி வீடொன்றில் கஞ்சா செடிகள் வளர்க்கப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து நுவரெலியா பொலிஸார் மற்றும் விசேட அதிரடி படையினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையிலேயே வெளிநாட்டு கஞ்சா செடிகள் வளர்ப்பில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர்களால் வளர்க்கப்பட்ட 70 தொடக்கம் 77 கஞ்சா செடிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கஞ்சா செடிகள் அனைத்தும் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டவை.

வீட்டில் மூன்று அறைகளில் வளர்த்து வந்ததாகவும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இதனை தொடர்ந்து நுவரெலியா பிளக்பூல் பகுதியில் மேலும் சில இடங்களில் கஞ்சா செடி வளர்க்கப்படுகின்றதா? என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

## சமனலவத்த பிரதேசத்தில் புலிகள் நடமாட்டம்; கிராம மக்கள் அச்சம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை சமனலவத்த பிரதேசத்தில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளமையால் தாம் அச்சத்தால் உறைந்து போயுள்ளதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

அடர்ந்த வனங்களால் சுற்றியுள்ள சமனலவத்த பிரதேசத்தை நோக்கி வனங்களின் கற்குகைகளில் வாழும் புலிகள் இரைதேடி வருவதால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மக்களின் குடியிருப்புக்களை நோக்கி வரும் புலிகள் வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகளான ஆடுகள், கோழிகள், நாய்கள் போன்றவற்றை இரையாக கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் இரவு பகலாக அச்சுறுத்தல் நிலவுவதால் தமது சிறிய குழந்தைகள் விடயத்தில் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச மக்களது பிரதான ஜீவனோபாயமாக தேயிலை பயிர்செய்கை விளங்குவதால் பெரும்பாலும் கூட்டாகவே தாம் தோட்ட வேலைகளில் ஈடுபடுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் மத்திய மாகாண ஆளுநர் ஆகியோருக்கிடையில் சந்திப்பு

(பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)



ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் காலித் நாசர் அலமேரி ( KHALED NASSER ALAMERI) மற்றும் மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று ஆளுநர் அலுவலகத்தில் (14) இடம்பெற்றது.

இதன்போது இருநாடுகளுக்கு இடையேயான பல முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடியதுடன் மாகாணத்தில் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்தும் திறன், சுற்றுலாத் துறையை விரிவுபடுத்துதல், உள்ளூர் தயாரிப்புகளுக்கான விற்பனை வாய்ப்புகளை மேம்படுத்துதல் மற்றும் மனித வள மேம்பாட்டுக்கான ஆதரவைப் பெறுதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை உறுதிப்படுத்தும் வகையில் இரு தரப்பினராலும் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொண்டனர்.

இந் நிகழ்வில் மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன, மாகாண ஆளுனர் செயலாளர் அன்டன் திலகரத்ன, மாகாணவிளையாட்டு பணிப்பாளர், உதவி ஆளுநர் செயலாளர் (ஓய்வு) மிஹிரன் பண்டார, மாகாண சுற்றுலா பணிப்பாளர் அனுரி திலகரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.



இரண்டாவது எலிசபத் மகாராணியின் மறைவிற்கு இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்தில் அஞ்சலி செலுத்தியதுடன் இரங்கல் புத்தகத்தில் அனுதாப செய்தியையும் பதிவிட்டுள்ளார். மேலும் பிரித்தானிய அரச குடும்பம் மற்றும் பிரித்தானிய மக்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்குமாறு, இலங்கைக்கான பிரித்தானிய தூதர் சாரா ஹல்டனிடம் தெரிவித்தார்.

# மாவெலி வனப்பகுதியில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு; ஐவர் கைது

ஹற்றன் சுழற்சி நிருபர்)

பொகவந்தலாவ மாவெலி வனப்பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர்கள் ஐவரை பொகவந்தலாவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் 15.09.2022 அன்று இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மாவெலி வனப்பகுதியில் இடம்பெற்று வந்த சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு தொடர்பில் பொகவந்தலாவ பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐந்து பேரும் பொகவந்தலாவ இராணிகாடு மற்றும் ஆல்டி தோட்டப் பகுதிகளை சேர்ந்தவர்கள் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொதுமக்களின் பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட கலவான ரம்புக பிரதேச வைத்தியசாலை

பலாங்கொடை தினகரன் நிருபர்)

கலவான ரம்புக பிரதேச மக்களின் பூரண பங்களிப்பில் சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட வைத்தியசாலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அரச சுகாதார பிரிவின் பூரண அனுமதியுடன் இந்த வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

திறப்பு விழா வைபவம் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் கபில கன்னங்கர தலைமையில் இடம்பெற்றது. இக்கிராமத்தில் அதிகமான குடும்பங்கள் வாழ்வதுடன் அவர்களுக்கு அவசர நோய் ஏற்பட்டால் சுமார் 17 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இறக்குவனை வைத்தியசாலைக்கு அல்லது ஏழு கிலோமீற்றர் தூரத்திலுள்ள பொதுப்பிட்டிய வைத்தியசாலைக்கு செல்ல வேண்டி இருந்தது.

ரம்புக கிராமத்திற்கு வைத்தியசாலையொன்றின் அவசியம் தேவை என்பதை உணர்ந்த பிரதேசத்திலுள்ள இளைஞர்கள் ஒன்று சேர்ந்து இதனை நிர்மாணிக்க முன்வந்தனர். இதற்கு கிராம மக்களின் ஒத்துழைப்பு மற்றும் உதவிகளும் கிடைத்தன.

அதே சமயம் வைத்தியசாலைக்கு தேவையான வைத்திய உபகரணங்கள் பெருந்தொகையினை பணம் செலுத்தி பிரதேச மக்கள் பெற்றுக் கொண்டுள்ளனர். புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட வைத்தியசாலைக்கு தேவையான வைத்திய அதிகாரிகளையும் மற்றும் நிர்வாக உத்தியோகஸ்தர்களையும் பெற்றுக் கொடுப்பதற்கு சுகாதார பிரிவு தற்பொழுது நடவடிக்கை எடுத்துள்ளது.

வைத்தியசாலையின் நிர்மாணப்பணிகள் தொடர்பாக ரம்புக்க கிராம வைத்தியசாலை சுவ சேவை சங்கத்தின் உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கையில், அரசாங்கத்தின் எந்தவித நிதியும் பெறாமல் கிராம மக்களின் முயற்சியினால் இந்த வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டது. இதனை பாதுகாத்துக் கொள்வது இப்பகுதி கிராம மக்களின் பொறுப்பாகும் என அவர் தெரிவித்தனர்.

# மஸ்கெலியாவிலிருந்து கரவனெல்ல பகுதிக்கு அனுமதிப்பத்திரம் இன்றி ஆடுகள் கடத்தல்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலியாவிலிருந்து கரவனெல்ல பகுதிக்கு அனுமதிப்பத்திரமின்றி ஆடுகளை கொண்டு செல்ல முற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதில் சுமார் 10ஆடுகளை கடத்த முற்பட்டுள்ளனர். ஆடுகளை கடத்துவதாக மஸ்கெலியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை தொடர்ந்து வாகனத்தை பொலிஸார் மடக்கி பிடித்தனர். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சந்தேக நபர்களையும் வாகனத்தையும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# ஊவா மாகாண கரம் (Carrom) போட்டியில் பசறை த.தே.பாடசாலை சாம்பியனாக தெரிவு

லுணுகலை நிருபர்



ஊவா மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு போட்டிகளில் கரம் (Carrom) போட்டியில் பசறை தமிழ் தேசிய பாடசாலை அணியினர் வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் நடைபெற்று முடிந்த ஊவா மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட விளையாட்டு போட்டிகளில் கரம் போட்டி தொடரில் பங்குபற்றிய பசறை தமிழ் தேசிய பாடசாலை அணியினர் சகல வயது மட்ட போட்டிகளிலும் வெற்றி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். இதன்படி 20 வயதின் கீழ் ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடம்,17 வயதின் கீழ் ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடம், 20 வயதின் கீழ் பெண்களுக்கான போட்டியில் மூன்றாம் இடம், 17 வயதின் கீழ் பெண்களுக்கான போட்டியில் மூன்றாம் இடம் ஆகிய வெற்றிகளோடு ஒட்டுமொத்தமாக மாகாண மட்ட கரம் போட்டியில் (CARROM OVERALL CHAMPIONS ) சாம்பியனாக பசறை தமிழ் தேசிய பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பல்கலைக்கழகம் செல்ல எதிர்ப்பார்க்கும் மாணவர்களுக்கு சிங்கள, தமிழ் மொழிகளில் தனித்தனியே நடாத்தப்பட்ட திசைமுக செயலமர்வு (14) பசறை பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. ஊவாவெல்லஸ்ஸ சிரேஷ்ட விரிவுரையாளர்களான நுவன் லியனகே, இந்திக தென்னக்கோன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு விளக்கமளித்தனர். (படம்: லுணுகல நிருபர்)

# நகர்வலம்



## அநுராதபுரம் மாவட்ட செயலக ஏற்பாட்டில் இளைஞர், யுவதிகளுக்கு செயலமர்வு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்ட செயலக வேலைவாய்ப்பு பணியகத்தின் ஏற்பாட்டில் தொழிற் பயிற்சிக்கு இளைஞர்களை பயிற்றுவிக்கும் நிகழ்வு அண்மையில் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் மாவட்ட மேலதிக செயலாளர் விஜய வனசிங்கவின் தலைமையில் நடைபெற்றது.

இளைஞர்கள் பொதுத்துறையில் வேலை தேடுவதை விடுத்து, பொதுத்துறை வேலைகள் பாதுகாப்பற்றவை எனக் கூறி, இத்துறையில் பணிபுரிபவர்களும் கூட வேலையை விட்டுவிடும் நிலை காணப்படுகிறது. அதனால் தனியார் துறையில் வேலை தேடுபவர்கள் அது பற்றிய பயிற்சியில் ஈடுபடுவது சிறந்தது என அநுராதபுரம் மேலதிக மாவட்ட



செயலாளர் திரு.விஜய வனசிங்க இந்நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்தார். இங்கு ஒரு தொழிலுக்கு செல்வதாயின் குறிப்பிட்ட தொழில் பற்றிய பயிற்சி தேவை. இதனால் தொழில் பயிற்சி ஒன்றின் பின்னர் பயிற்சிக்கு ஏற்ற தகுந்த வேலை வாய்ப்பு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

அதற்கு இந்த வேலைத்திட்டம் சரியான புகலிடமாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

தொழிற் பயிற்சிக்கு வந்திருந்த 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் மிகவும் ஆர்வத்துடன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இதன் மூலம் அநுராதபுரம் நகரைச் சுற்றியுள்ள அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களும் ஒரே இடத்திற்கு கொண்டு வரப்படுவதோடு, மாணவர்கள் தங்கள் திறமை, திறன் மற்றும் ஆர்வத்திற்கு ஏற்ப தங்களுக்கு ஏற்ற பாடப்பிரிவைத் தேர்வு செய்ய இது வாய்ப்பளிக்கும்.

## முந்தல் மீனவர் சங்கத்தினால் சுகாதார பொருட்கள் கையளிப்பு



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கற்பிட்டி, வன்னி முந்தல் மீனவர் சங்கத்தினரால் கற்பிட்டி அல் அக்ஷா தேசிய பாடசாலைக்கு சுகாதார மேம்பாட்டுக்கான பொருட்கள் (13) வழங்கப்பட்டன.

வன்னி முந்தல் மீனவர் சங்கத்தின் உறுப்பினர்களான முஹம்மட் பஹ்மி, எம்.சிராஜ், முஹம்மது லுக்மான் ஆகியோர் மேற்படி பொருட்களை கற்பிட்டி அல் அக்ஷா தேசிய பாடசாலையின் அதிபர் முஸ்தபா அன்சாரிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் முஹம்மட் பசார், பாடசாலை அபிவிருத்தி மேம்பாட்டு குழுவின் செயலாளர் முஹம்மட் மஹீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, முதல் கட்டமாக ஆரம்ப பிரிவு வகுப்பறைகளை சுத்தமாக வைத்திருப்பதற்காக ஒவ்வொரு வகுப்பறைகளுக்குமான கூடைகள் மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 23 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்கும்படி அநுராதபுரம் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இருவரும் விளச்சிய மற்றும் பேமடுவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, விளச்சிய பகுதியிலிருந்து அநுராதபுரம் பகுதிக்கு கேரள கஞ்சாவினை இருவர் கடத்திச் செல்வதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய 09 ஆம் திகதி மாலை அநுராதபுரம் விளச்சிய வீதியில் அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் இருவரை கைது செய்துள்ளதுடன் ஒரு கிலோவும் 600 கிராமும் நிறையுடைய கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

## அநுராதபுரத்தில் கால் நடை வைத்தியசாலை ஆளுநரால் திறந்து வைப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

வடமத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மூலம் அநுராதபுரம் மாவட்ட கால்நடை வைத்தியசாலை (13) வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

மாவட்டத்தில் பாரிய குறைபாடாகவிருந்த கால்நடை மருத்துவமனையின் தேவை இதன் மூலம் முழுமையடைகின்றது. செல்லப்பிராணிகளுக்காகவும் இறைச்சிக்காகவும் பாலுக்காகவும் வளர்க்கப்படும் விலங்குகளுக்கும் இங்கு சிகிச்சை அளிக்கப்படும்.

மேற்படி மாவட்டத்தின் கொடகே மாவத்த பகுதியில் அமைந்துள்ள அநுராதபுரம் கால்நடை அலுவலகத்திற்கு அருகாமையில் குறித்த விலங்கு வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக் கிழமை



தவிர்ந்த கிழமை நாட்களில் இங்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும். இதன் போது வடமத்திய மாகாண பிரதான செயலாளர் சந்திரசிறி பண்டார, ஆளுநரின் செயலாளர் மற்றும் சுகாதார சேவை அமைச்சின் செயலாளர் நயனா தஸநாயக்க, விவசாய அமைச்சின் செயலாளர் ரஞ்ஜன் ரத்நாயக்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### உ/த பரீட்சையில்

## திப்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயம் சிறந்த பெறுபேறு

**அரநாயக்க நிருபர்**

அண்மையில் வெளியான க. பொ. த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி அரநாயக்க திப்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். எம். ஏ. எப். ரிஸ்னா என்ற மாணவி முதன் முதலாக பாடசாலை வரலாற்றிலே கலைத்துறையில் 3ஏ சித்திகளைப் பெற்று சாதனைப் படைத்துள்ளார்.

இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய 15 மாணவர்களுள் 14 மாணவர்கள் சித்தியடைந்து இருப்பதோடு, பத்து மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் : எம். ஏ. எப் ரிஸ்னா 3ஏ, ஜே. எம். பிரியதர்ஷினி 2ஏ பீ, எம். எச். ஹர்சனா ஏ 2பீ, எம். ஐ. எப். இஸ்மா 2ஏ பீ, எம். ஆர். எப். அஸ்மா 3 பீ, எம. ஆர். எப். ரைஹானா ஏ 2பீ, எம். எஸ். எப். இல்மா ஏ பீ சீ, என். எப். மனார் 2 பீ சீ, எம். யூ. எப். அப்ரா, பீ 2சீ, எம். யூ. எப். ரிஸ்லா பீ சீ எஸ், எம். எம். எப். ஹஸ்னா 2 சீ எஸ், எம். என். எப். நளீரா 2சீ எஸ், எம். எம். எப் ம௦ஜபீன் சீ 2 எஸ், எம். ஏ. ஜே. எப். அப்ரா சீ, 2 எஸ்,

இவர்களுக்கு பாடசாலை அதிபர் எம். எஸ். எம். ரம்ஸான் நளீமி, ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள். பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

## இத்திஹாத் அஹ்லுஸ்ஸுன்னா வருடாந்த மாநாடு கொழும்பில்







**பேருவளை விசேட நிருபர், அஷ்ரப் ஏ. சமட்**



இத்திஹாத் அஹ்லுஸ் ஸுன்னா வருடாந்த மாநாடும் அதன் தலைவர் டாக்டர் பஹ்மி இஸ்மாயில் எழுதிய ஷாதுலியா தரீக்கா வரலாறு எனும் ஆங்கில நூல் வெளியீட்டு விழாவும் கடந்த 11ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப ஓகிட் மண்டபத்தில் அதன் ஸ்தாபக தலைவர் அல்ஹாஜ் தலாத் இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முஸ்லிம் சமய விவகார திணைக்கள பணிப்பாளர் அல்ஹாஜ் அன்ஸார் இப்றாஹிம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

காலி அலியா இஸ்லாமிய சட்டக் கல்லூரி பணிப்பாளர் மூத்த கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் முஹம்மது ஸுஹுர் பாரி, ஜனாதிபதி சட்டத்தரணியும் ஷாதுலிய்யா தரீக்காவின் மூத்த இஹ்வானுமான ராஸிக் ஸரூக், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை பொருளாளர் கலாநிதி மௌலவி அஸ்வர் (அஸ்ஹரி), தரீக்காக்கள் உயர் கவுன்ஸில் செயலாளரும் ஜம்மியதுல் உலமா சபை உறுப்பினருமான முப்தி முஸ்தபா ரஸா, உம்மு ஸவாயா அஜ்வாத் அல்பாஸி அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி அஹமத் (மஹ்ழரி), தெவட்டகஹ மஸ்ஜித் தலைவர் அல்ஹாஜ் ரியாஸ் ஸாலி உட்பட உலமாக்கள், பிரமுகர்கள், இராஜதந்திரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



எப்பாவளயில் அமைந்துள்ள இலங்கை பொஸ்பேர்ட் நிறுவனத்திற்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க வுடன் கடந்த (12) களவிஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன் போது நிறுவனத்தின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடியபோது எடுத்த படம். (படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## YMMA தேசிய தலைவராக இஹ்ஸான் ஹமீட் தெரிவு



அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க பேரவையின் (YMMA) தேசிய தலைவராக இஹ்ஸான் ஹமீட் அதன் 72வது வருடாந்த மாநாட்டில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். YMMA பேரவையின் தேசிய தலைவராக இதுவரை பதவி வகித்த சஹீட் எம். ரிஸ்மியின் இரு வருட பதவிக்காலம் நிறைவடைந்ததனை அடுத்து இஹ்ஸான் ஹமீட் தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

YMMA பேரவையின் புதிய தேசிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள பதுளையை சேர்ந்த இஹ்ஸான் ஹமீட், பதுளையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மூன்றாவது தேசிய தலைவர் ஆவார்.

1992 இல் பதுளை YMMAயில் இணைந்து தன்னுடைய பயணத்தை ஆரம்பித்த அவர் 30 வருடங்களுக்கும் மேலாக YMMAயில் பணியாற்றி வருகின்றமை சிறப்பம்சமாகும். இவருடைய பாட்டனார் பதுளை YMMAயை சேர்ந்த A.R.நூர் ஆமீனும் அகில இலங்கை YMMA பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை இலங்கை மன்றத்தில் நடைபெற்ற அகில இலங்கை YMMA பேரவையின் 72வது வருடாந்த மாநாட்டில் பிரதம அதிதியாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி ஜே சங் கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் கலந்து கொண்டார்.

தேசிய பொதுச்செயலாளராக பர்ஹாஸ் பாரூக் மற்றும் தேசிய பொருளாளராக என்.எம்.நிப்ராஸ் ஆகியோரும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். பதவிக்காலத்தை நிறைவு செய்து செல்லும் தலைவர் சஹீட் எம் ரிஸ்மி நிகழ்வுக்கு தலைமை தாங்கியமை குறிப்பிடத்தக்கது.

## பள்ளிபோருவை மு.விதின் பவள விழா நிகழ்வுகள் இன்று



ஹெம்மாதகமை பள்ளிபோருவை முஸ்லிம் வித்தியாலயத்தின் 75 வருட பூர்த்தி பவள விழா இன்று (16) வெள்ளிக்கிழமை காலை அதிபர் அஷ்ஷெய்க் எம்.எஸ். எம். நிஸாம் அன்வாரி தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாகச் சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. குறுப்பு ஆரச்சியும் விஷேட அதிதியாக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் அன்ஷாப் தாவூத், ஆரம்ப பிரிவு பணிப்பாளர் கோரலகே ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் உட்பட முக்கிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## கல்பிட்டியில்; கண்டல் தாவரம் நடும் நிகழ்வு



**புத்தளம் தினகரன் நிருபர்**

அழிந்து வரும் வளங்களை பாதுகாப்போம் எனும் செயல் திட்டத்தின் கீழ் சர்வ மத இளைஞர்களின் பங்களிப்புடன் கண்டல் தாவரம் நடும் நிகழ்வு கல்பிட்டி குறிஞ்சிப்பிட்டி பிரதேசத்தில் அண்மையில் இடம் பெற்றது.

I Iove Srilanka மற்றும் African union அனுசரணையில் புத்தளம் விழுது மேம்பாட்டு நிறுவனத்தின் டெலன்ட் ஸ்டார் மற்றும் சர்வ சமய இளைஞர் குழுவினரால் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் பொறுப்பதிகாரி, கல்பிட்டி பிரதேச YSO, WRDS அங்கத்தவர்கள் மற்றும் செடோ நிறுவன இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

இச்செயல் திட்டத்தின் கீழ் சுமார் 15,000 கண்டல் தாவரங்கள் இதன் போது நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





கொழும்பு 13.இல.312/6C_ புளுமெண்டள் வீதியில் (ஸ்டேடியத்துக்கு அருகில்) அமைந்துள்ள ஸ்ரீ மஹா காளியம்மன் ஆலயத்தில் கும்பாபிஷேகம் கடந்த வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது.

# மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா





கே/மாவ/தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா வெகு சிறப்பாக (13/09/2022) செவ்வாய்க்கிழமை 12.00 மணி முதல் 2.00 மணி வரை பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக தல்கஸ்பிடிய முதலாவது கொமாண்டோ படையணி வீரரான M.R.M LUTHFY கலந்து சிறப்பித்தார். 22 வருட சேவையை நிறைவு செய்துள்ள பல இராணுவ பதக்கங்களுக்கு சொந்தக்காரரான மலேசியா Interpol மற்றும் Pakistan இல் இலங்கை தூதரகம் போன்ற வெளிநாடுகளிலும் பணியாற்றிய அவர், இந்த பாடசாலையின் பழைய மாணவராவார். இந்த வகையில் நாம் பெருமை அடைகின்றோம்.

இந்நிகழ்வின் போது எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கம் , பழைய மாணவியர் சங்கம், இரு ஜும்மா பள்ளிவாசல்களினதும் நிர்வாக சபைகள் மாணவர்களுக்கு அறிமுகம் செய்யும் நிகழ்வும் இடம் பெற்றதுடன் பாடசாலைக்கு வெளியில் மாணவர்களின் ஒழுக்க விடயங்களை கவனிப்பதில் மேற்படி அமைப்புக்கள் இணைந்து செயற்படும் ஆரம்ப நிகழ்வாகவும் இது அமைந்தது சிறப்பம்சமாகும்.

பாடசாலையில் பிரதி அதிபராக கடமையாற்றிய A.L அப்துர் ரஹ்மான் பதுரியா தேசிய பாடசாலைக்கு அதிபராக இடமாற்றம் பெற்று சென்றதையடுத்து ஏற்பட்ட பிரதி அதிபர் வெற்றிடத்திற்கு எமது பாடசாலையின் உப அதிபர்களில் ஒருவரான M.M.M ZAKYயை உத்தியோகபூர்வமாக நியமிக்கும் நிகழ்வும் இதன்போது நடைபெற்றது.

# மனவளக்கலை யோகப்பயிற்சிகள் மீண்டும் வெள்ளவத்தையில்

இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வெள்ளவத்தை இராமகிருஸ்ண வீதி, 53/1 A ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கொழும்பு அறிவுத்திருக்கோயிலின் புதிய கட்டிடத்தில் மீண்டும் புதுப் பொலிவுடன் தமது வழமையான பயிற்சிகள் அனைத்தையும் ஆரம்பிக்கவுள்ளது.

அருட்தந்தை வேதாந்திரி மகரிஷியால் வடிவமைக்கப்பட்ட நலவாழ்வுக்கான மனவளக்கலை யோகப்பயிற்சிகள் அனைத்தும் 17.09.2022 சனிக்கிழமை மாலை 5 மணி முதல் புதிய அறிவுத் திருக்கோயில் மண்டபத்தில் ஆரம்பமாக உள்ளது.

தினமும் 5.00 மணி முதல் 7.30 வரை தொடர்ச்சியாக ஏழு நாட்கள் பயிற்சிகள் நடைபெறும்.

உடல்நலம் பேணும் உடற்பயிற்சிகள், உயிர்நலம் காக்கும் காயகல்ப்ப பயிற்சி, மனவளம் பேணும் தியானப் பயிற்சி அனைத்தையும் உள்ளடக்கிய " அடிப்படைப் பயிற்சி" இங்கு

ஆரம்பமாக உள்ளது . இதில் பங்கேற்று பயன் பெறுமாறு அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

# ஊடகப் பயிற்சி கருத்தரங்கு

அகவம் மீடியா யூனிட் மற்றும் புதிய அலை கலை வட்டத்தின் ஏற்பாட்டில் ஊடகப்பயிற்சி கருத்தரங்கொன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஊடகத்துறையில் தடம்பதித்து தமது ஆழ்மைத் திறணை வெளிப் படுத்த விரும்பும் இளம் ஆர்வலர்களுக்காக இந்த ஒருநாள் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. இதில் பங்கேற்று தமது திறமைகளை வளர்த்துக் கொள்ள விரும்புகிறவர்கள்.

மேலதிக விபரங்களைப் பெற 076 2002701,077 6274099,077 7412604 அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.




ஜனனம் அறக்கட்டளை பணிப்பாளரும் சர்வதேச இசை கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவரும் அதிவணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ் சந்துரு பெர்னாண்டோ அரச வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனை அவரது அமைச்சில் சந்தித்து அவரது தொகுதி மற்றும் நாட்டிற்கான பல்வேறு திட்டங்கள் குறித்து கலந்துரையாடினார்.




இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவையிட்டு கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலய வெஸ்ட் மினிஸ்டர் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அனுதாப குறிப்புப் புத்தகத்தில் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சதீஷ் குமார் சிவலிங்கம், தனது இரங்கலைப் பதிவு செய்தார்.

# திறனாய்வாளருக்கு கொழும்பு தமிழ்ச்சங்கம் கண்ணீர் அஞ்சலி



வாழ்நாள் சாதனையாளரான கே.எஸ்.சிவகுமாரன் ஈழத்து எழுத்தாளர், கலை இலக்கியத் திறனாய்வாளர் வானொலி ஒலிபரப்பாளர், ஆசிரியர் என பன்முகதிறமை மூலம் தனது பெயரை நிலைநிறுத்திக் கொண்டவர். மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஓமான், மாலைதீவு, அமெரிக்கா போன்றநாடுகளில் உயர்நிலைபாடசாலைகளில் ஆசிரியராக பணி புரிந்தவர்.

ஆங்கிலம்,சிங்களம் மொழிகளில் மிகுந்த புலமை உடையவராகத் திகழ்ந்தவர். கொழும்புத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இலக்கியம், நாடகம், திரைப்படம், ஊடகங்கள், அறிவியல், செய்தித்திறனாய்வுகள், அரசியல் திறனாய்வு, இசை,நடனம்,ஓவியம், மொழிபெயர்ப்பு,சிறுகதை,கவிதைபோன்ற துறைகளில் 30 தமிழ் நூல்களையும், 02 ஆங்கில நூல்களையும், 02 ஆங்கிலமொழிக் கலைக்களஞ்சியங்களையும் எழுதிவெளியிட்டுள்ளார்.

கொழும்புத் தமிழ்ச் சங்க நீண்டகால அங்கத்தவர். சங்க நிகழ்வுகளில் ஒழுங்காக பங்குபற்றி இலக்கியகளம், அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வுகளில் பயன்மிக்க கருத்துக்களைவெளிக்கொணருபவர். இன்முக சுவை மிக்க வார்த்தைகளால் அனைவரையும் கவரும் ஒருவர்.

பலபட்டங்களையும் கௌரவங்களையும் பெற்ற இவர் இலங்கை கலாச்சார அமைப்பினால் ' சாகித்திய இரத்தினா' விருதினை பெற்றமைகுறிப்பிடத்தக்கது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பஉறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எமதுஆழ்ந்தஅனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்.




ஜனனம் அறக்கட்டளை பணிப்பாளரும் சர்வதேச இசை கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவரும் அதிவணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ் சந்துரு பெர்னாண்டோ இலங்கையில் உள்ள ஐக்கிய இராச்சியத் தூதரகத்திற்குச் சென்று பிரித்தானிய உயர் ஸ்தானிகர் சாரா ஹில்டன் OBE யை சந்தித்து தமது இரங்கலைத் தெரிவித்தார்.




கொழும்பு வடக்கு லயன்ஸ் கழகம் மற்றும் கிரேயேட்டி இன்பர் மேஷன் படைப்பாற்றல் நிர்வாக இயக்குநர் சுரேஷ் சுப்பிரமணியம் ஏற்பாட்டில் மூக்கு கண்ணாடி வழங்கும் வைபவம் கொழும்பு வாழைத்தேட்ட பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் லயன்ஸ் கழக அங்கத்தவர் உரை நிகழ்த்தினார். படைப் பாற்றல் இயக்குநர் சுரேஷ் சுப்பிரமணியம் வாசிப்பு மற்றும் துரிதமான பார்வைக்கு மூக்கு கண்ணாடி வழங்கினார்.

# பாகிஸ்தானின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் டெங்கு பரவும் அபாயம்



பாகிஸ்தானில் கடந்த மாதம் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பெரும் பாதிப்புகளுக்கு மத்தியில் தற்போது அப்பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவி வருவதாக ஜியோ நியுஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது. மழை வெள்ளத்தால் அதிக சேதங்களை சந்தித்த பஞ்சாப், சிந்து, கைபர் பக்துங்காவா மற்றும் பலுசிஸ்தான் ஆகிய பிரதேசங்களில் டெங்கு மற்றும் நுளம்பால் பரவக்கூடிய நோய்கள் பரவி வருவதாகவும் இதேசமயம் காய்ச்சல் மற்றும் வலி நிவாரணி மருந்துகளுக்கு இப்பிரதேசங்களில் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இச் செய்திகள் மூலம் அறிய முடிகிறது.

கராச்சி ஆஸ்பத்திரிகள் நோயாளர்களினால் நிரம்பி வழிவதாகவும், பஞ்சாப்பில் காய்ச்சல் தொடர்பான மருந்துகளுக்கு நான்கு வாரங்களாகத் தட்டுப்பாடு காணப்படுவதாகவும், பேஷாவாரில் 17 ரூபாவுக்கு விற்பனையாகும் காய்ச்சல் மாத்திரை 30 ரூபாவுக்கு விற்பனையாவதாகவும், கைபர் பக்துங்காவில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் டெங்குவினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் 888 மருத்துவ நிலையங்கள் சேதமுற்றிருப்பதாகவும் இவற்றில் 180 ஆஸ்பத்திரிகள் முற்றாகவே சேதமடைந்திருப்பதாகவும் இதனால் பல லட்சக்கணக்கானோர் மருத்துவ வசதியின்றி தவிப்பதாகவும் அறிய முடிகிறது. பஞ்சாப்பில் 125 புதிய டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் நால்வரை டெங்கு பலி கொண்டுள்ளது.

1961ஆம் ஆண்டின் பின்னர் கடந்த ஓகஸ்ட் மாதத்திலேயே அதிக மழை வீழ்ச்சி பதிவாகியிருப்பதாகவும் வழமையைவிட 243 வீத அதிக மழை வீழ்ச்சி தேசிய மட்டத்தில் பதிவாகி இருப்பதாகவும் பாக். காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. சில இடங்களில் வெள்ள நீர் வடியாமல் இருப்பதாகவும், மழை தொடர்ந்து பெய்வதாலும் ஒதுங்க இடமின்றி பாதிக்கப்பட்டோர் தவிப்பதாகவும் இப்பகுதிகளில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# அரசு நியாயமான தேர்தலை நடத்த முன்வராவிட்டால் பலவந்தமாக அதை நடத்துவோம்

## முன்னாள் பிரதமர் இம்ரான் ஆவேசம்



பாகிஸ்தான் அரசு நீதியும் நியாயமுமான ஒரு தேர்தலை நடத்த முன்வர வேண்டும் என்றும் அவ்வாறு நடத்த முன்வராவிட்டால் தமது ஆதரவாளர்கள் வீதிக்கு இறங்கி அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவித்திருக்கும் முன்னாள் பாக். பிரதமர் இம்ரன்கான், தேர்தல் அப்படியும் நடத்தப்படாவிட்டால் பலவந்தமாக நாம் தேர்தலை நடத்த வேண்டியிருக்கும் என அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். அரசு தரப்பினர் தேர்தல் நடத்தத் தயங்குவதற்குக் காரணம் அத்தோல்வி படுமோசமானதாக இருக்கும் என்பதை அறிந்து வைத்திருப்பதால்தான் எனவும் அவர் தன் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

குஸ்ஜரன்வாலா ஜின்னா அரங்கில் நடைபெற்ற மாணவர் அணியினருக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு கடந்தவாரம் உரையாற்றிய அவர், தன்னை தேர்தல் ஒன்றின் மூலம் சந்திக்க முடியாத அரசாங்கம் தன்னை வேறு வழியில் தகுதியிழக்கச் செய்ய முயற்சிப்பதாகவும் பயங்கரவாதம், மத நிந்தனை என்ற பிரிவுகளிலும் கூட பல வழக்குகள் தனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்ததோடு தன்னை தகுதியிழக்கச் செய்யும் முயற்சிகள் தீர்வல்லவென்றும் ஒரே தீர்வு வெளிப்படைத்தன்மை வாய்ந்த தேர்தலை நடத்துவது மாத்திரமே என்றும் குறிப்பிட்டார்.

இந்த நாட்டை மேலும் பொருளாதார ரீதியாக நலிவடைவதில் இருந்து இந்த அரசாங்கம் காப்பாற்ற வேண்டும். அல்லது இதற்கான பொறுப்பை ஏற்கும்படி மக்கள் அரசாங்கத்தை கேட்பார்கள். ஒரு மோசமான நிலைக்குள் நாடு சிக்காதிருக்கும் வகையில் இந்த அரசினால் தடுத்திருக்க முடியும். ஆனால் அரசு அதைச் செய்யவில்லை என்று அரசின் மீது இம்ரான்கான் குற்றம் சுமத்தினார். இந்த நாட்டின் உண்மையான சுதந்திரத்துக்காக தன் உயிரையும் தியாகம் செய்யத்தயார் என்றும் தன் உரையில் அவர் குறிப்பிட்டார்.

தனக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு பற்றி குறிப்பிடும் போது, இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் எத்தகைய தீர்மானத்தை எடுத்தாலும் அதற்கு தான் உடன்படுவதாகவும் தான் குறிப்பிட்டது தனது கட்சிக்காரரான ஷபாஸ் கில்லுக்கு எதிரான மனிதாபிமானமற்ற செயல்களைத்தானே தவிர நீதிபதிக்கு எதிராக அல்ல என்றும் தனது உரையில் அவர் தெரிவித்தார்.



# இலங்கை அணியுடன் இணைகிறார் மஹேல

அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ண போட்டிக்கான இலங்கை அணியின் ஆலோசகராக முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

மஹேல ஜயவர்தன கடந்த வருடம் நடைபெற்ற டி20 உலகக் கிண்ணத்திலும் இலங்கை அணியின் ஆலோசகராக செயற்பட்டுவந்த நிலையில், மீண்டும் அந்த பதவிக்காக அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

அவர் இம்முறை நடைபெறும் டி20 உலகக் கிண்ணம் முழுவதும் இலங்கை அணியுடன் இணைந்திருந்து, போட்டிக்கான திட்டங்கள், நுணுக்கங்கள் மற்றும் வீரர்களுக்கு பங்களிப்பு வழங்குவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

'உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும் காலத்தில் மஹேல அணியுடன் இருப்பார். அவர் 6ஆம் திகதியில் இருந்து அணியுடன் இருப்பார். 2ஆம் திகதி அணி அவுஸ்திரேலியா செல்கிறது. ஐ.சி.சி உதவிக் காயம் (பயிற்சி மற்றும் பயிற்சிக் போட்டிகள்) 9ஆம் திகதி ஆரம்பிக்கிறது.

அதற்கு முன்னர் மஹேல சென்று அணியுடன் தொடர்ந்து இருப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது' என்று இலங்கை கிரிக்கெட்டின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஆஷ்லி டி சில்வா தெரிவித்தார்.

மஹேல ஜயவர்தன இந்தியாவில் நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளராக தொடர்ந்தும் செயற்பட்டுவரும் நிலையில், தற்போது மும்பை இந்தியன்ஸ் நிர்வாகத்தின் கீழ் உள்ள அனைத்து அணிகளினதும் கிரிக்கட் ஆட்டதிறன் சர்வதேச தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டி20 உலகக் கிண்ணம்: முன்னணி வீரர்கள் பலருக்கும் இடமில்லை

அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாகவுள்ள டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கான அணிகளில் முன்னணி வீரர்கள் பலருக்கும் இடம் பெற முடியாமல் போயுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் வீரர் அன்ட்ரே ரசல், பாகிஸ்தான் வீரர் பக்கர் சமான், பங்களாதேஷ் வீரர் மஹ்மூதுல்லா ரியாத், ஆப்கானிஸ்தானின் முன்னாள் தலைவர் குலாப்தீன் நயீப் இவர்களுள்; முக்கிய மானவர்களாக உள்ளனர்.

பக்கர் சமான் மற்றும் குலாப்தீன் நயீப் ஆகியோர் முறையே பாகிஸ்தான் மற்றும் ஆப்கான் அணிகளின் மேலதிக வீரர்களால் பெயரிடப்பட்டபோதும் மஹ்மூதுல்லா மற்றும் ரசலுக்கு மேலதிக வீரர் பட்டியலில் கூட இடம் கிடைக்கவில்லை.

இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்கின்ற பங்களாதேஷ் அணிக்கு ஷகீப் அல் ஹசன் தலைவராக அறிவிக்கப்பட்டிருப்பதோடு, ஆசிய கிண்ண போட்டிகளைத் தொடர்ந்து டி20 போட்டிகளில் ஓய்வு பெற்ற முஷ்பீகுர் ரஹிம் மற்றும் எனாமுல் ஹக், மெஹெதி ஹசன், மொஹமட் நயீம் மற்றும் பர்வீஸ் ஹொஸைனுக்கு பங்களாதேஷ் குழாத்தில் இடம் கிடைக்கவில்லை.

மொஹமட் நபியின் தலைமையில் உலகக் கிண்ணத்தில் களமிறங்கும் ஆப்கான் அணிக்கு உப தலைவரான நஜீபுல்லா சத்ரான் செயற்படுகிறார். மேலும் சர்வதேச போட்டிகளில் அனுபவம் இல்லாத வேகப்பந்து வீச்சாளர் சலீம் ஷாபி மற்றும் உலகெங்கும் டி20 போட்டிகளில் ஆடிவரும் சுழற்பந்து வீச்சாளர் கைஸ் அஹமட் ஆப்கான் குழாத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

பாபர் அஸாம் தலைமையிலான பாகிஸ்தான் குழாத்தில் உபாதை காரணமான ஆசியக் கிண்ணப் போட்டியில் இடம்பிடிக்காத முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஷஹீன் அப்ரிடி மற்றும் மொஹமட் வசீம் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஹசன் அலி மற்றும் ஷனவாஸ் தஹானிக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை.

நிகலஸ் பூரன் தலைமையிலான மேற்கிந்திய குழாத்தில் இதுவரை டி20 சர்வதேச போட்டிகளில் ஆடாத ரேமன் ரெய்பர் மற்றும் யெனிக் கரியா இணைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் தவிர ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் எவின் லுவிஸுக்கும் மேற்கிந்திய தீவுகள் அணியில் இடம் கிடைத்துள்ளது.





## மாத்தளை ஸாஹிரா முன்னேற்றம்



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் நாடு தழுவிய ரீதியில் ஒழுங்கு செய்திருந்த 17 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கேகாலை றுவன்வெல்ல ராஜசிங்க மகா வித்தியாலய அணியை மாத்தளை ஸாஹிரா கல்லூரி அணி 13 ஓட்டங்களினால் வெற்றி கொண்டு அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளது.

மாத்தளை இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மாத்தளை ஸாஹிரா 158 ஓட்டங்களை பெற்றது. பதிலெடுத்தாடிய றுவன்வெல்ல ராஜசிங்க அணி 145 ஓட்டங்களுக்கு சுருண்டது.

## களுத்துறை மகளிர் கிரிக்கெட் அணியினர் சம்பியனாக தெரிவு



**பேருவளை விசேட நிருபர்**

களனி சீவலி நவலோக மைதானத்தில் நடைபெற்ற 2022 தேசிய விளையாட்டு விழாவின் 3ஆம் கட்ட விளையாட்டுப் போட்டியில் களுத்துறை மாவட்ட மகளிர் கிரிக்கெட் அணி சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

களுத்துறை மாவட்ட மகளிர் கிரிக்கெட் அணி மற்றும் கம்பஹா மாவட்ட மகளிர் கிரிக்கெட் அணிகளுக்கிடையே நடைபெற்ற இறுதிப்போட்டியில் முதலில் ஆடிய கம்பஹா அணி 10 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 76 ஓட்டங்களை பெற்றது. பதிலெடுத்தாடிய களுத்துறை அணி 9.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டியது.

## மஹேலவின் இடத்திற்கு மார்க் பௌச்சர் நியமனம்



மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளர் பதவிக்கு தென்னாபிரிக்க அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்ட வீரரான மார்க் பௌச்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜனவர்தனவின் இடத்திற்கே பௌச்சர் நியமிக்கப்பட்டுள்ளார். மஹேல ஜயவர்தன, மும்பை இந்தியன்ஸின் அனைத்து அணிகளுக்குமான செயல்திறன் தலைமையாளராக புதிய பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது மும்பை இந்தியன்ஸ் நிர்வாகம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள டி20 லீக் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள டி20 தொடர்களில் அணிகளை வாங்கியுள்ளது. எனவே, அந்த இரண்டு அணிகளுடன் மொத்தமாக மூன்று அணிகள் மும்பை இந்தியன்ஸ் நிர்வாகத்தின் கீழ் விளையாடவுள்ளன.

மார்க் பௌச்சர் தென்னாபிரிக்க அணியின் தலைமை பயிற்சியாளராக செயற்பட்டுவரும் நிலையில், அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ணத்தின் பின்னர் அந்தப் பதவியில் இருந்து விலகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரொஜர் பெடரர் ஓய்வு



டென்னிஸ் உலகின் முன்னணி வீரரான ரொஜர் பெடரர் தனது ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளார். லண்டனில் அடுத்த வாரம் ஆரம்பமாகவிருக்கும் லேவர் கிண்ணம் தனது கடைசிப் போட்டி என்று அவர் தெரிவித்துள்ளார்.

'கடந்த மூன்று ஆண்டுகள் காயங்கள் மற்றும் சத்திரசிகிச்சைகளால் நான் சவால்களை சந்தித்தேன் என்று உங்களில் பலருக்குத் தெரியும். முழுமையாக போட்டிகளுக்கு திரும்ப நான் போராடினேன். எனினும் உடல் திறன் மற்றும் கட்டுப்பாடுகள் பற்றியும் எனக்குத் தெரியும். எனக்கு இப்போது 41 வயதாகிறது' என்று சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பெடரர் தெரிவித்துள்ளார்.

20 கிரான்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றிருக்கும் பெடரர், கடந்த ஆண்டு விம்பிள்டன் போட்டியின் காலிறுதியில் வெளியேறியதன் பின் போட்டிகளில் பங்கேற்கவில்லை.

ஆடவர் டென்னிஸில் தொடர்ச்சியாக 237 வாரங்கள் முதல் இடத்தைப் பிடித்து அவர் படைத்த சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மெத்தா இல்லம் சம்பியன்

**ருஸைக் பாரூக்**



கொழும்பு ஆனந்தா பெண்கள் கல்லூரியின் பழைய மாணவியர்கள் சங்கத்தின் பழைய மாணவிகளுக்கிடையிலான வருடாந்த வலைப்பந்தாட்டப் போட்டியில் மெத்தா இல்லம் சம்பியனானது.

பாடசாலை வளாகத்தில் 6ஆவது முறையாக இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதம அதிதி கொழும்பு மாநகர சபை விளையாட்டுத் திணைக்களத்தின் மேற்பார்வை விளையாட்டு அதிகாரி யமுனா சந்தமாலியிடம் இருந்து அணித் தலைவி ஷிரோமி விஜேரத்ன கிண்ணத்தை பெற்றுக் கொண்டார்.

## மைக்கல் ஜோர்டனின் ஜெர்சி பத்து மில். டொலருக்கு ஏலம்



அமெரிக்க கூடைப்பந்து வீரர் மைக்கல் ஜோர்டன் 1998இல் என்.பி.ஏ. இறுதியின் ஆரம்பப் போட்டியில் அணிந்த ஜெர்சி ஒன்று 10.1 மில்லியன் டொலருக்கு ஏலம் போயுள்ளது.

இது அதிக விலைக்கு ஏலம் போன விளையாட்டு பொருளாக சாதனை படைத்துள்ளது. இந்த ஏலம் விளையாட்டு ரசிகர்கள் மற்றும் சேகரிப்பாளர்களின் ஆர்வத்தைத் தூண்டி இருந்ததாக சோதபிஸ் ஏல நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஏல விற்பனையில் ஜோர்டனின் சிகாகோ புல்ஸ் ஜெர்சி மொத்தம் 20 ஏலதாரர்களை கவர்ந்ததாக அந்த நிறுவனம் குறிப்பிட்டது.

கூடைப்பந்து வரலாற்றில் தோன்றிய மிகச் சிறந்த வீரராக ஜோர்டன் பலரால் பார்க்கப்படுகிறார். அவர் தனது விளையாட்டு வாழ்வின் பெரும் பகுதியை சிக்காகோ புல்ஸ் அணியிலேயே செலவிட்டார். என்.பி.ஏ போட்டிகளை உலகெங்கும் பிரபலப்படுத்துவதில் அவர் முக்கியமானவராக இருந்துள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 17ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன் வர்த்தக உலா
எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

# 'நெருக்கடியான நேரங்களிலும், அவற்றுக்கு ஏற்றவிதமாக நாட்டின் பொருளாதாரத்தை ஆதரிக்கும் திறன் எங்களிடம் உள்ளது'

## JAAF பொதுச் செயலாளர்

இலங்கையின் தற்போதைய நெருக்கடியான பொருளாதாரப் பின்னணியின் போதும், கடந்த ஜூலை மாதம் நாட்டின் வர்த்தக இருப்பானது வியக்கத்தக்க விதத்தில் பதிவு செய்யப்பட்டது. இந்த சாதனைப் புள்ளிவிபரம், இறக்குமதிச் செலவுகளில் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதையும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆடைத் துறையின் தொடர்ச்சியான பங்களிப்பையும் பிரதிபலிக்கிறது.

இந்த வாரம் Shippers' Academyஆல் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில், கூட்டு ஆடை சங்கங்களின் மன்றத்தின் (JAAF) செயலாளர் நாயகம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, சர்வதேச சந்தைகளுக்கான இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட அணுகலை ஊக்குவிக்கும் மற்றும் மேம்படுத்தும் முயற்சிகள் குறித்து பதிலளித்தார். ஆடைத் தொழில்துறைக்கு தனது ஆதரவையும் பொருளாதாரத்திற்கு தொழில்துறையின் பங்களிப்பையும் வெளிப்படுத்திய அவர், இது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகக் கூறினார்.

இலங்கையின் ஆடை ஏற்றுமதியின் செயற்திறனை நிலைநிறுத்துவதற்கு வர்த்தக உடன்படிக்கைகள் இன்றியமையாதது என JAAF இன் செயலாளர் நாயகம் யொஹான் லோரன்ஸ் வலியுறுத்தினார். பிரிட்டனின் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தினால் (DCTS) இலங்கை பயனடையும் மற்றும் ஆடைத் தொழில்துறையானது 2023 டிசம்பருக்குப் பின்னும் GSP+ ஐத் தக்கவைத்துக்கொள்வதன் முக்கியத்துவத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. GSP+ திட்டங்களின் அடிப்படையில், தைத்த ஆடைகளுக்காக Rules of Origin கீழ் உள்ள கட்டுப்பாடுகள் காரணமாக, சுமார் பாதி ஆடைகள் மட்டுமே தகுதி பெறுகின்றன, அதாவது SAARC நாடுகளின் ஆடைகளுக்கு மட்டுமே Cumulation அனுமதிக்கப்படுகிறது. JAAF இந்த தடையை முன்னிலைப்படுத்தியுள்ளது மற்றும் GSP திட்டத்தின் எதிர்கால மறு செய்கைகளில் இந்த விடயத்தை கவனித்துக் கொள்ளுமாறு கோரியுள்ளது.

2021ஆம் ஆண்டு மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையின்படி, இலங்கையின் தொழில்துறை ஏற்றுமதி, ஜவுளி மற்றும் ஆடைகள் 43.5% ஆகும். அந்த ஆண்டு ஜவுளி மற்றும் ஆடைகளின் ஏற்றுமதி மதிப்பு 5,435.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள். ஆடைத் தொழிலின் பின்னடைவு, நீண்டகால நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தால் பெற்ற கொள்கை ஆதரவுடன், தொழில்துறையானது 2022 வரை இந்த நேர்மறையான தொடக்கத்தைத் தொடரவும் அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை ஆதரிக்கவும் உதவியது.

கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் (JAAF) கணக்கீடுகளின்படி, ஜூலை 2022இல் மொத்த ஆடை ஏற்றுமதிகள் (USD 522.14 மில்லியன்) ஜூலை 2021 ஆடை ஏற்றுமதியுடன் (USD 425.75 மில்லியன்) ஒப்பிடும்போது 22.4% வளர்ச்சியைக் அடைந்தது. இலங்கையின் பிரதான ஆடை ஏற்றுமதி சந்தைகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம் மற்றும் ஏனைய நாடுகளுக்கான ஏற்றுமதிகள் முறையே 16.93%, 32.3%, 29.32% மற்றும் 15.77% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2022 ஜனவரி முதல் ஜூலை வரையிலான ஆடைத் துறையின் ஒட்டுமொத்த செயல்திறனும் நேர்மறையான கண்ணோட்டத்தைக் காட்டியுள்ளது. 2022 ஜனவரி முதல் ஜூலை வரையிலான ஏழு மாத காலப்பகுதியில், 2021 இல் தொடர்புடைய காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் மொத்த ஏற்றுமதி 20.44% அதிகரித்துள்ளது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் மற்றும் பிற நாடுகளுக்கான மொத்த ஏற்றுமதிகள் முறையே 27.12%, 14.55%, 18.12% மற்றும் 16.64% உயர்ந்துள்ளன.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் (JAAF) பொதுச் செயலாளர் யொஹான் லோரன்ஸ், "நெருக்கடியான சமயங்களில் கூட, அவர்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை ஆதரிக்கும் திறன் எங்களிடம் உள்ளது.

2023 டிசம்பருக்குப் பிறகு, சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் வாய்ப்புகளைத் தேடும் அதே வேளையில், GSP+ ஐ அடைவதற்கு இலங்கை உழைக்க வேண்டும், மேலும் இலங்கையின் யதார்த்தங்களுக்கு ஏற்றவாறு ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் சிறந்த வர்த்தக உடன்படிக்கைகளை எட்டுவது மற்றும் உலகளாவிய வர்த்தக விதிகளுக்கு இணங்குவது குறித்து கவனம் செலுத்த வேண்டும்." என தெரிவித்தார்.

# KOKO உடன் கைகோர்த்து இலகு கொடுப்பனவுத் திட்டங்களை செயற்படுத்தியுள்ள செலான் வங்கி

நிதிக் கொடுப்பனவுகளில் நுகர்வோரின் நடத்தைப் போக்குக்கமைய, புகழ்பெற்ற ஒன்லைன் கொடுப்பனவு app ஆன Koko உடன் செலான் வங்கி கைகோர்த்திருந்தது. அதனூடாக, அதன் அட்டைதாரர்களுக்கு ஒன்லைன் மற்றும் விற்பனை நிலையங்களில் பரந்தளவு அனுகூலங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது. செலான் டெபிட் மற்றும் கிரெடிட் அட்டைதாரர்களுக்கு விலைக்கழிவுகள் கிடைப்பதுடன், 3 மாத இலகு தவணைமுறை மீளச் செலுத்தும் வசதி மற்றும் 0% வட்டியில்லாத மீளக் கொடுப்பனவு போன்றவற்றை Koko ஊடாக செலான் அட்டையை பயன்படுத்தும் போது பெற்றுக் கொள்ள முடியும்.




செலான் டெபிட் கார்ட்தாரர்களுக்கு Koko app ஐ டவுன்லோட் செய்து கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள ஆரம்பிக்கையில் ரூ. 5000க்கு மேற்பட்ட கட்டணப்பட்டியல்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது ஆகக்கூடியது ரூ. 1000 வரை விலைக்கழிவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பிரத்தியேகமான சலுகை 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை வழங்கப்படும். KOKO ஐ பயன்படுத்தும் விசேட அம்சம் யாதெனில், டெபிட் மற்றும் கிரெடிட் கார்ட்தாரர்களுக்கு இது செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், மொத்தத் தொகையை எவ்விதமான வட்டிக் கட்டணமுமின்றி 3 தவணைகளாக பிரித்துக் கொள்ளலாம். Koko உடன் பதிவு செய்து கொண்டுள்ள பரந்தளவு விற்பனையாளர்கள், செலான் வாடிக்கையாளர்களுக்கு ஒன்லைன் மற்றும் நேரடி விற்பனை நிலையங்களிலிருந்து தமக்கு பிடித்த விற்பனைப் பகுதியை தெரிவு செய்து கொள்ளும் வசதி வழங்கப்படுகின்றது.

செலான் வங்கியின் அட்டைகள் பிரிவின் தலைமை அதிகாரி ருச்சித் லியனகே கருத்துத் தெரிவிக்கையில், "Koko போன்ற கொடுப்பனவு appகளை பயன்படுத்தும் போது எமது வாடிக்கையாளர்களுக்கு வெவ்வேறு மட்டங்களில் சொப்பிங் செய்யும் அனுகூலம் கிடைக்கும். ஒன்லைனில் சொப்பிங் செய்வது என்பது இன்றைய காலகட்டத்தில் அனைவருக்கும் அனுகூலமளிப்பதாக அமைந்துள்ளது. மிக முக்கியமாக, தவணை முறையில் மீளச் செலுத்தும் வசதி காணப்படுவதால், வாடிக்கையாளர்களுக்கு தமக்கு அவசியமான பொருட்களை கொள்வனவு செய்து கொள்ள முடிவதுடன், அதற்கு செலான் கார்ட்கள் மற்றும் Koko ஆகியன ஆதரவளிக்கின்றன.

பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எமது வாடிக்கையாளர்களுக்கு வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்வதற்கு வழிமுறைகளை வழங்குவதில் செலான் வங்கியைச் சேர்ந்த நாம் அதிகளவு கவனம் செலுத்துகின்றோம்.

இதனை செயற்படுத்தும் பல பங்காண்மைகளை நாம் ஏற்படுத்தியுள்ளதுடன், அவ்வாறான பங்காண்மைகளில் ஒன்றாக Koko அமைந்திருப்பதுடன், செலான் அட்டைதாரர்களுக்கு பெருமளவில் அனுகூலமளிப்பதாக அமைந்திருக்கும்." என்றார்.

# ஏற்றுமதி சந்தைகளுக்காக சுற்றுச் சூழலுக்கு உகந்த குறைந்த கார்பன் அலுமினியத்தை அறிமுகப்படுத்தும் Alumex

இலங்கையின் கட்டட நிர்மாணத் துறையில் நிலையான புத்தாக்கத்தைக் கட்டியெழுப்பும், Hayleys குழுமத்தின் துணை நிறுவனமும், முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட அலுமினிய உற்பத்தியில் முன்னணியில் திகழ்வதுமான Alumex PLC, உலக சந்தையில் குறைந்த கார்பன் அலுமினியத்தை அறிமுகம் செய்வதாக அறிவித்துள்ளது.



நிறுவனத்தின் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட குறைந்த கார்பன் அலுமினியம் "Ozon" உற்பத்தியாளரின் புதிய அதிநவீன உருகும் வசதியை சபுகஸ்கந்தையில் வெற்றிகரமாகத் திறந்து வைத்ததைத் தொடர்ந்து, 1.0 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான முதலீட்டில், மேலும் திறன் மேம்பாடு இரண்டாம் கட்டமாக நடைபெறும்.

உலகின் மிக நவீன மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்களை இணைத்து, புதிய வசதி, Bauxite இல் இருந்து முதன்மை அலுமினிய உற்பத்தியில் பெறப்படும் மொத்த ஆற்றலில் வெறும் 5% மட்டுமே பயன்படுத்தி மிக உயர்ந்த தரமான அலுமினிய Billetsகளை உற்பத்தி செய்ய அலுமினியத்திற்கு உதவுகிறது. மேலும் automationdriven மேம்படுத்தல்களின் ஆற்றல் பயன்பாடு 20% வரை குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Alumex PLC இன் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரமுக் தெடிவெலவின் கூற்றுப்படி, இலங்கையின் கட்டுமானத் துறையின் சுற்றுச்சூழல் மற்றும் கார்பன் தடயத்தை நிலையானதாகக் குறைக்கும் முயற்சிகளுக்கு இந்தப் புதிய விடயம் புதிய உயிர் சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் மூலப் பொருளான "Ozon" க்காக புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட வர்த்தக நாமம், உயர்ந்த உலகளாவிய தரத் தரங்களுக்கு ஏற்றுமதியாளரின் அர்ப்பணிப்பு ஆகும். Ozon billetகளுக்கு வெளிநாட்டு கொள்வனவாளர்களிடமிருந்து அதிக தேவை இருப்பதால் குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா சந்தைகளில் இருந்து, குறைந்த கார்பன் அலுமினியம் நாட்டிற்கு அதிக வருவாயை ஈட்ட உதவுகிறது.

"அலுமினியம் என்பது எல்லையற்ற சாத்தியக்கூறுகள் மற்றும் வரம்பற்ற வாழ்க்கைச் சுழற்சியைக் கொண்ட ஒரு பொருள். சரியாகச் செயலாக்கப்படும்போது, தரம் மற்றும் உடல் ஒருமைப்பாடு ஆகியவற்றில் எவ்வித இழப்புக்களும் இல்லாமல், அதைப் பயன்படுத்தலாம், உருகலாம் மற்றும் மறுவடிவமைக்கலாம். எங்கள் புதிய வசதி, அதிக சுற்றறிக்கையை செயல்படுத்துவதற்கும், நமது சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் ஆற்றல் சார்புகளை வெகுவாகக் குறைப்பதற்கும், தெற்காசியாவில் உள்ள உயர்தர தயாரிப்புகளை உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கு வழங்குவதற்கும் எங்களின் முயற்சிகளை ஆதரிக்கிறது."

# இலங்கை இராணுவ பயிற்சி தொகுதியின் முதல் கட்ட நிர்மாணப் பணிகள் CDB இன் ரூ. 10 மில். நிதியுதவியில் பூர்த்தி

இலங்கை இராணுவ மாதுரு ஓயா பயிற்சி பாடசாலையில் நவீன வசதிகள் படைத்த தங்குமிட மற்றும் தனிமைப்படுத்தல் நிலையத்தின் முதற் கட்ட நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சியின் (CDB) 10 மில்லியன் ரூபாய் நிதி உதவியில் இந்த நிலையம் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. கொவிட்19 தொற்றுப் பரவல் தடுப்பு நிலையத்தின் (NOCPCO) நாட்டில் கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் இந்தத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது.



2020 ஆம் ஆண்டில் நாட்டில் தொற்றுப் பரவல் உச்சம் தொட்டிருந்த நிலையில் இந்தத் திட்டத்துக்கு பங்களிப்பு வழங்குவதற்கு கூட்டாண்மை நிறுவனம் எனும் வகையில் CDB இனால் இந்த நிர்மாணப் பணிகளுக்கு பங்களிப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் தனிமைப்படுத்தல் நிலையமாக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தற்போது மாதுரு ஓயா பயிற்சி பாடசாலையின் மாணவர்களுக்கான தங்குமிட வசதியாக பயன்படுத்தப்படும். எவ்வாறாயினும், இந்தத் தொகுதியில் காணப்படும் வசதிகள் காரணமாக, அவசியமாயின் வட மத்திய மாகாணத்தில் தனிமைப்படுத்தல் நிலையமாக துரித கதியில் மாற்றியமைத்துக் கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்டுள்ள முதல் தொகுதியில் 64 நபர்களை தங்க வைக்க முடியும். மொத்தத் தொகுதியும் அங்கவீனமானவர்களுக்கு பயன்படுத்த வசதியான முறையில் அமைந்துள்ளது. இந்தத் தொகுதியின் கீழ் மாடியை பயிற்சி நிலையத்தின் கட்டளையிடும் அதிகாரி பிரிகேடியர் நஜீவ எதிரிசிங்க RWP RSP psc Hdmc இனால் இராணுவத்தினரின் பிரசன்னத்தில் திறந்து வைத்தார்.

# யூனியன் அஷ்யூரன்ஸ் பாங்கசூரன்ஸ் விருதுகள் 2022 நிகழ்வில் சிறந்த கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டது யூனியன் வங்கி

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரியின் விருதுகள் 2022 நிகழ்வின், வருடாந்த பாங்கசூரன்ஸ் விருதுகள் வழங்கும் போது, யூனியன் வங்கியின் அணி கௌரவிக்கப்பட்டிருந்தது. பாங்கசூரன்ஸ் நாட்காட்டியில் மிகவும் பெருமைக்குரிய விருதுகள் வழங்கும் நிகழ்வாக அமைந்திருப்பதுடன், சிறந்த செயற்பாட்டாளர்களை இனங்கண்டு கௌரவிப்பதாக அமைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான தனிநபர் மற்றும் அணிப் பிரிவுகளில், யூனியன் வங்கி சில உயர் விருதுகளை சுவீகரித்திருந்தது. பிரிவு 6 இன் கீழ், கம்பஹா கிளையைச் சேர்ந்த திலுக்சன் லக்சித ஜயகொடி உயர் விருதைப் பெற்றுக் கொண்டார். வலய தலைமை அதிகாரி பிரிவின் வெற்றியாளராக வலயம் 1 B ஐச் சேர்ந்த சமிந்த பெர்னான்டோ வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டுக்கான பாங்கசூரன்ஸ் சம்பியன்ஸ் ஷீல்ட் விருதை கம்பஹா கிளை பெற்றுக் கொண்டது. வருடாந்த இலக்குகளுக்கு மேலாக, சாதனைகளைப் பதிவு செய்திருந்த கிளைகள் மெரிட் விருதுகளை பெற்றுக் கொண்டன.



யூனியன் வங்கி மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸ் ஆகிய நிறுவனங்கள் 2015 இல் பங்காண்மையை ஏற்படுத்தியிருந்ததுடன், 2018 முதல், ஆயுள் காப்புறுதி சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான பிரத்தியேகமான உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டிருந்தது. இந்தப் பங்காண்மையினூடாக, வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த நிதித் தீர்வுகளுடன், எதிர்பாராத தருணங்களில் அரவணைப்பை வழங்கக்கூடிய நீண்ட கால பாதுகாப்பை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த சாதனைகள் தொடர்பில் யூனியன் வங்கியின் நுகர்வோர் பொறுப்புத் தீர்வுகள் மற்றும் மாற்று நாளிகைகள் பிரிவின் உப தலைவர் மனிஷா பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், "யூனியன் வங்கி அணியின் சாதனைகள் தொடர்பில் நான் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன், வெற்றியாளர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# '2022 இல் இலங்கையின் 50 சிறந்த பணியிடங்களில்' Huawei Technologies Lanka தெரிவானது



முன்னணி ICT தீர்வு வழங்குநரான Huawei Technologies Lanka ஆனது Great Place to Work (பணியாற்ற சிறந்த இடம்) எனும் இலங்கையில் உள்ள சுயாதீன பகுப்பாய்வாளர்களால், நான்காவது தடவையாக Great Place to Work சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. Huawei Technologies Lanka ஆனது வேலை செய்வதற்கான சிறந்த இடம் எனும் சான்றிதழைப் பெற்றுள்ளது மாத்திரமல்லாமல், தொடர்ந்து இரண்டாவது வருடமாக '50 Best Workplaces in Sri Lanka in 2022' (2022 இல் இலங்கையின் 50 சிறந்த பணியிடங்கள்) எனும் பெருமதிப்பிற்குரிய பட்டியலிலும் இடம் பிடித்துள்ளது. அது தவிர '15 Best Workplaces for Millennials in Sri Lanka for 2022' (2022 ஆம் ஆண்டிற்கான இலங்கையில் உள்ள மில்லேனியலுக்கான 15 சிறந்த பணியிடங்கள்) மற்றும் 'Excellence in Encouraging Opportunities for Innovation' (புத்தாக்கத்திற்கான வாய்ப்புகளை ஊக்குவிப்பதில் சிறந்து விளங்குதல்) ஆகிய மேலும் இரண்டு புதிய விருதுகளை நிறுவனம் இவ்வருடம் வென்றுள்ளது. இந்த நான்கு சிறந்த பணியிட விருதுகள் தொடர்பான சாதனைகளை கொண்டாடும் விழா அண்மையில் கொழும்பில் உள்ள Huawei அலுவலகத்தில் இடம்பெற்றது.

நிறுவனம் தனது டிஜிட்டல்மயமாக்கல், அறிவார்ந்த மாற்றம் மற்றும் குறைந்த காபன் நடுநிலைப்படுத்தல் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்வதோடு, ஊழியர்களுக்கான உயர் நம்பிக்கை, ஒருமைப்பாடு, வளர்ச்சி, அக்கறை ஆகியவற்றை வளர்ப்பதில் Huawei நிறுவனம் செலுத்தும் தொடர்ச்சியான கவனம் ஆகியவற்றுக்கு இந்த அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. Great Place to Work Sri Lanka நடத்திய சுயாதீன அநாமதேயமான கணக்கெடுப்பில் அதன் ஊழியர்கள் வழங்கிய விரிவான மதிப்பீடுகளின் அடிப்படையில் Huawei நிறுவனத்திற்கு இந்த அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் உரையாற்றிய, Huawei Sri Lanka நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO) Tao Guangyao, "எமது ஊழியர்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையில் பல ஆண்டுகளாக ஒரு

# கிங்ஸ் ஹொஸ்பிட்டலில் கணிசமான முதலீட்டைச் செய்துள்ள செலிங்கோ லைஃப்

இலங்கையில் புதிய, அதி நவீனமான தனியார் வைத்தியசாலைகளில் ஒன்றான கிங்ஸ் ஹொஸ்பிட்டல் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனத்துடன் குறிப்பிடத்தக்க பங்குடைமை ஒன்றில் செலிங்கோ லைஃப் ஈடுபட்டுள்ளது. சுகாதார நலன் பிரிவில் தனது கால்தடத்தை விரிவு படுத்தும் வகையிலும், தனது முதலீட்டை மேலும் பன்முகப்படுத்தும் வகையிலும் பங்குகளில் முதலீடு செய்யும் வகையில் இந்தப் புதிய பங்குடைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மூலோபாய முதலீடானது 120 படுக்கைகளைக் கொண்ட இந்த வைத்தியசாலையில்; தனது இருப்பை மேலும் அதிகரிக்க வழியமைக்கும் விதமாக தனியார் பிரிவு வகையின் கீழ் செய்யப்பட்டுள்ளது.

கிங்ஸ் ஹொஸ்பிட்டல் பணிப்பாளர் சபையில் செலிங்கோ லைஃப் விகிதாசார பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ளும். அதன் அடுத்த கட்ட வளர்ச்சிக்கான வினைதிறனை ஊக்குவிக்கும் வகையில் இது அமையும். செலிங்கோ லைஃப்புக்கும் கிங்ஸ் ஹொஸ்பிட்டலுக்கும் இடையிலான ஒருங்கிணைப்புக்கள் பங்குதாரர்களுக்கு அவர்களின் பெறுமானத்தை ஊக்குவிப்பதாக அமையும் என்று கம்பனி அறிவித்துள்ளது.

நாட்டின் ஆயுள் காப்புறுதிப் பிரிவில் சந்தையில் தலைமை தாங்கும் நிறுவனமாக செலிங்கோ லைஃப் திகழுகின்றது. சுகாதார நலன் பிரிவில் ஏற்கனவே ஒரு முன்னோடி நிறுவனமாகவும் அது உள்ளது. இந்த நிறுவனத்துக்கு மட்டுமே சொந்தமான கிளை நிறுவனமான செலிங்கோ ஹெல்த்கெயார் சேர்விஸஸ் லிமிடட் (ஊர்ளுடு) இலங்கையில் புற்றுநோய் சிகிச்சைக்காக முதன் முதலாக கதிர்வீச்சு சிகிச்சை நிலையத்தை நிறுவியது. அத்தோடு புற்றுநோய் சிகிச்சைக்காக நாட்டின் முதலாவது டுi்நெயச யுஉஉநடநசயவழச சிகிச்சைப் பிரிவு வுழஅழவு}நசயில அலகு என்பனவற்றையும் இந்நிறுவனமே நிறுவியது. இலங்கையில் இந்த வகை சார்ந்த ஒரேயொரு சிகிச்சை நிலையமாக இன்று வரை இதுவே அமைந்துள்ளது. அத்தோடு புழடனநா முநல நுலந யனெ நுNவு ர்ழளிவையட (கோல்டன் கீ கண், காது மூக்கு தொண்டை) மருத்துவமனையையும் நிர்வகித்து வருகின்றது.

கம்பனியின் பரிணாமத்தின் இந்தப் புதிய மைல் கல் குறித்து கருத்து வெளியிட்ட நிறுவனத் தலைவர் ராஜ்குமார் ரெங்கநாதன் "உலகளாவிய ரீதியில் ஆயுள் காப்புறுதியாளர்களும், சுகாதார பராமரிப்பு சேவை வழங்குனர்களும் ஒருவருக்கு ஒருவர் ஒருங்கிணைப்புக்களை விரிவாக்கும் வகையில் மூலோபாய கூட்டாண்மைகளை நிறுவி உள்ளனர். இந்த மூலோபாய முதலீடானது செலிங்கோ லைஃப் காப்புறுதிதாரர்கள் உற்பட சகல தரப்பினருக்கும் தத்தமது பெறுமானங்களை அதிகரித்துக் கொள்ள வழியமைக்கின்றது" என்றார்.

"புற்றுநோய் சிகிச்சையில் செலிங்கோ லைப் ஏற்கனவே தலைமை தாங்குவது மட்டுமல்லாது காரியசித்தியையும் அடைந்துள்ளது. உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்களில் பாரிய முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே இந்தியாவின் அப்பலோ மருத்துவமனை தற்போது கொழும்பின் கிங்ஸ் ஹொஸ்பிட்டல் என பல சுகாதார சேவை நிறுவனங்களோடு ஏற்கனவே விரிவான ஒத்துழைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிகிச்சை மற்றும் நோய்களைக் கண்டறிதல் என விரிவான பிரிவுகளில் ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்தும் வகையில் இவை அமைந்துள்ளன.




புதுப்புனல்
ஷம்ஸ் பாஹிம்

## "இதயத்தில் விழுந்த குழி

என் நெற்றியில்
விழுந்தது ஒற்றைத் துளி
நிமிர்ந்து பார்க்கிறேன்
வானம் அழுதுகொண்டிருக்கிறது

வாழ்க்கைப் பெறு வெள்ளத்தில்
அடித்துச் செல்லப்பட்ட
ஒரு கிழவி
கைக்குட்டை தருகிறாள்
தன் கண்ணீரைத்
துடைத்துவிடச் சொல்லி

இது
நெற்றியில் விழுந்த
துளியன்று
இதயத்தில் விழுந்த
குழி.



**பொத்துவில்**
இஸ்மட்

## வேண்டாம் உறவுகளே



தொங்கி கிடந்த..
சொத்துக்களில்..
சொந்தங்களே..
ஒத்திகை பார்க்காதீர்கள்!

ஊத்துப் பிடித்த..
உறவுகள்..!
ஊறிப் போன..
பேராசைகள்..!

தேடி வந்த..
சொத்துக்கள்..! அதில்

தேர்ச்சி பெற்ற...
புத்திசாலிகள்..!

முந்தி அடித்து..

மண்ணறைக்கு...!
யார்தான் கடைசில..
எடுத்து செல்ல போறாங்க..!

வெத்திலை கொடி போல..
உறவுகள் படர்ந்தாலும்..!
கடைசியில்..
சப்பித்தான் துப்புகிறார்கள்..!

**டி. எல். நஸீம்**
கிண்ணியா 01

## மனச்சிறகு



அதிகாலை தனிலே
களிப்போடு எழுந்து
குளித்து முழுகியே
பண்போடு பணிவாய்
ஏகனை தொழுது
முடித்த பின்
பரவசமானதே
பாவையின் மனது
என்னுள் மறைந்த
சில ஞாபகத்
தூறல்களை விசிறியதாய்
எனதுள்ளம்
சிறகு கொள்ள
வைக்கிறதே
எறும்பினத்தின்
ஓழுக்கமதை எண்ணுகையில்
வியக்கிறது
என் மனது
ஐயறிவு ஜீவன்
முன்மாதிரியாய்
எமக்கு ஐயமின்றி
பின்பற்ற அவனியது
வளம் பெறும்

கற்பனையின்
உச்சமாய் காவியங்களும்
காப்பியங்களும்
கண்ணெதிரே
வியக்க வைக்கும்
காட்சிகளாய்
காணுகையில்
காலங்கள் கடந்தாலும்
குதூகளிப்பினில்
ஆகுதடி என்மனது
கரைமோதும்
அலையோசை
நுரை பொங்கிடும்
அதன் அழகு
ஆர்ப்பரித்திடும்
இன்னிசையாய்
காற்றோடு கலந்திட
இளநெஞ்சம்
சிறகடித்தே பறக்குதே

கல்லூரி வாயிலருகே
காலடி வைக்கும்
போதினிலே கண்
கொள்ளா காட்சியாய்
கல்லூரித் தோழியர்கள்
பட்டாம் பூச்சிகளாய்
ஓர் தாய் வயிற்றில்
பிறந்த பிள்ளைகளாய்
ஓராலயத்தில் பயிலும்
ஒற்றுமையின் சின்னங்களாய்

உதிர உறவுகளாய்
நேசம் மிக்கவர்களாய்
நெருங்கிப் பழகும்
ஆருயிர்த் தோழிகள்
கதிரோன் உச்ச நிலையில்
பிள்ளைகள்
நாம் வெட்ட வெளியில்
புவிப்பந்தின் மீதே
வலைப் பந்தாட்டத்தில்
நாம் மெய் வியர்த்தாலும்
குளிர்ந்திருந்தது
உள்ளம் வெற்றிவாகை
சூடவே வீராங்கனைகளாய்
வலம் வர வீராப்பு
பேசியவர்கள்
மௌனிகளாய்
மாறினரே
உணர்ந்தோம்
உண்மையை
ஒற்றுமையின் பலம்
என்னவென்று

**பாத்திமா அகீலா சிபர்**
மோதர
மொரட்டுவ

(10/9/22 அன்று நடந்த
வகவ பௌர்ணமி கவி
அரங்கில் மோதர மொரட்டுவயைச்
சேர்ந்த செல்வி பாத்திமா
அகிலா சிபர் யாத்து வாசித்த
அவரது கன்னி கவிதை )

## விந்தைத் தமிழைக் காத்திடுவாய் !!



சங்கம் வளர்த்த செந்தமிழை
சான்றோ ரென்றுங் காத்தனரே
சுங்கம் மில்லா நெஞ்சுடனே
சுவைபடப் பலநூல் யாத்தனரே
அங்கம் மெல்லாம் மெய்சிலிர்க்க
ஆழ்தமிழ் நூற்கள் கோத்தனரே
தங்கத் தமிழை தரணியில்
தாழ விடாது தங்கினரே

பண்பாய்ப் புலவர்கள் பைந்தமிழை
பாங்காய்க் காத்து வந்ததுபோல்
பண்டைத் தமிழர் பண்பாட்டை
பாரோர் வியக்க பரப்பிடவே
கன்னித் தமிழைக் கற்றிடுவாய்
கலங்கமிலா ததை ஏற்றிடுவாய்
அன்னைத் தமிழைப் பூரணமாய்
ஐயமிலா ததை பயில்வாயே

செம்மொழி சீருடன் புசிப்பதற்கு
சேமமாய்க் கல்வி பெறள்வெண்டும்
வம்பரு மெதிர்த்து வருகையிலே
வன்மை யுடன்நீ எதிர்த்திடுவாய்
விம்மிதத் துடனே செந்தமிழை
வீரிய மாய்நீ விதைத்திடுவாய்
விம்ம விடாது தரணியில்
விந்தைத் தமிழைக் காத்திடவே.

**ஹிஸாம் ஹிஜஸ்**



## என் இனிய தனிமையே

என்ன ஓர் அமைதி
ஏகாந்தத்தில் சமதி
அணியணியாய் உள்ளத்திலே
அழகான கற்பனைகள்
தனிமை தந்ததோ
தாராளமாய் வரிகள்
எழுதிடவே ஏராளமாய்
கவிதையின் துளிகள்
சந்தம் பாடியே
சொந்தம் கொண்டாடுதே
இன்பம் ஊறியே
இனிமை காணுதே
தேனாய்த் தமிழும்
திகட்டாமல் வருகுதே
தித்திக்கும் அருவியாய்த்
தாகம் தீர்க்குதே
சத்தம் இல்லாமலே
செந்தமிழ் பாயுதே
சிறகடிக்கும் பறவையானதே
சிந்தையில் எண்ணங்கள்
சீதோஷ்ணக் காற்றானதே
பீறிடும் உணர்வுகள்
முகிழ்த்து எழுகின்றனவே
முந்நூறு சூரியன்கள்
மனதின் ஆழத்திலே
விரிந்திடும் மயில் தோகைகள்

தனிமையே
இனிமையே
வருக
தாகம் தீர்க்கவே
தண்ணீராய்
வருக
கவிதைப் பிரசவங்கள்
பல
தருக

**ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்

## பூக்கள்



எந்நாளும் மணநாள்
எவரும் வாழ்த்துவதில்லை பூக்களை.
★
எல்லோருக்கும்
பூங்கொத்து வழங்கி
வரவேற்கிறோம்
பூக்களுக்கு எதை கொடுத்து
வரவேற்பு செய்கிறோம்.?
★
பூக்களைப் பறித்து
கடவுளின் பாதத்தில்
காணிக்கையாக்குகிறோம்
எதைப் பறித்துப்
பூக்களுக்கு மரியாதை
செய்கிறோம்?
★
பூக்களைக் கொய்து
மாலையாக்கி கழுத்தில்
அணிவிக்கிறோம்.
அந்தக் கழுத்துகளைக் கொய்து
பூக்களுக்காய் ஒரு
மாலை செய்தோமா?
★
பூக்களால் சரம் பின்னி
மனையாள் கூந்தலில் சூடி
அன்பைக் காட்டுகிறோம்
அந்த அன்பில் துளியேனும்
பூக்களுக்குக் காட்டினோமா?
★
பூக்களால் மலர்வளையம் செய்து
பிணத்திற்கும் அஞ்சலி செய்கிறோம்
அந்தப் பிணத்தோடு பிணமாய் போகும்
பூக்களுக்கு நாம்
அஞ்சலி செய்தோமா?
★
பூக்களால் தேரை அலங்கரித்து
ரதோற்சவம் நடத்துகிறோம்.
பூக்களுக்கென்று ஒரு
உற்சவம் செய்தோமா?
★
பூப்போன்ற புன்னகை
பூப்போன்ற இட்லி
பூப்போல மிருது
பூப்போன்ற மனசு என
பூவை உதாரணம் காட்டுகின்றோம்
எங்காவது நம்மைப்போல என்று
பூக்களுக்கு உதாரணம் சொல்ல
வழி செய்தோமா?
★
வனத்தையும் வனப்பாக்கத் தெரிந்த
பூக்களிடமிருந்து வாசத்தையும்
அடையும் பூக்களுக்கு
நாம் கைம்மாறு என்ன செய்தோம்?.
★
பிள்ளைகளை சுதந்திரமாய்
விளையாட முற்றத்திற்கு
அனுப்பிவிட்டு ,
முற்றத்தில் மலர்ந்தப் பூக்களைக்
காம்போடு கைது செய்து
கூஜா சிறையில் அடைத்து வைக்கிறோம்.
பூக்கள் என்ன தீவிரவாதிகளா?
★
பொய்களின் வழிபாட்டுக்காக
அலங்கார ஆடுகளாகி
மேடை பீடங்களில் பலியாகும்
பூக்களால் உங்கள் பிரசாரத்
திருவிழாக்கள் அமர்க்கலமாகலாம்.
ஆனால் பொய்களுக்குத்
துணைபோன அவமானம்
பூக்களுக்கு வேண்டுமா?
★
உங்களோடு புதையுண்டப் பூக்கள்
உங்கள் கல்லறைமீது
மீண்டும் பூக்கத் தொடங்கிவிடுகின்றன
உங்களால் ஏன் மீண்டும்
முடிவதில்லை?
★
ஒரு மனிதனுக்கு
பல குணங்கள் இருக்கின்றன
ஒரு பூவினத்திற்கு
ஒரே வாசனைதான்.
★
பூக்கள் பல நிறங்களில் பூத்தாலும்
அழகாகத்தான் இருக்கின்றன
மனிதர் பலவாக இருந்தாலும்
அழகாக இருப்பதில்லை.
★
காம்புகளின் மைதானத்தில் கூடும்
பூக் குழந்தைகளை காற்றோடு
சற்று விளையாட விடுங்கள்
அவை எமக்கு வாசனைக் கேடயம்
வாங்கிக் கொடுத்து மகிழ்விக்கும்
★
பூக்கள் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் நாம்
தேன்குடிக்கச் சிறகடிக்கும்
வண்டுகள் பற்றி அறியாமலேயே
இருந்திருப்போம்
★
பூக்கள் பூக்காவிட்டால்
நாம் கனிகள் பற்றிய
கனவுகள் இல்லாமல் இருந்திருப்போம்
★
பூக்கள் இல்லையென்றால் நாம்
வண்ணத்துப் பூச்சிகளுக்கே
பூவெனப் பெயர் சூட்டியிருப்போம்.
"
பூக்கள் இயற்கையின்
ஓவியங்கள்
வாருங்கள் ஆராதனை செய்வோம்
★
கல்லை வைத்துக் கடவுளாய்
வணங்கப் பழகிக் கொண்ட
நாம் இனி
பூங்கன்று நாட்டித் தெய்வத்தை
வளர்தெடுப்போம்.
★
தெய்வம்
வரமாக நமக்கு
வாசனையும் வனப்பும் நம்
வாசலிலேயே தரும்.

**மெய்யன் நடராஜ்.**